வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு


Eelanadu

வார மலர் ඊළනාඩු

Email : news@eelanadu.lk

மலர் : 03 16.10.2022 ஞாயிற்றுக்கிழமை இதழ் : 311 பக்கங்கள் : 20



**07**

மாவோவின் சாதனையை விஞ்சும் சீன பெருந்தலைவர் ஷீ!





**08**

போராட்டங்களுக்கு கொண்டுவரப்படும் குழந்தைகளும் சத்துணவின்றி வாடும் சிறுவர்களும்



**10**

சமாதானத்தை (?) தொலைத்துப் போனவர்



**11**

என்று தணியும் இந்திய மீனவர் அத்துமீறல்...!





### முகமாலையில் கோர விபத்து!

## கண்ணிவெடி அகற்றும் நிறுவன பணியாளர்கள் 47 பேர் படுகாயம்!!

யாழ்ப்பாணம், ஒக். 16

பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முகமாலைப் பகுதியில் விபத்தில் 47 பேர் காயமடைந்தனர். இந்த விபத்து நேற்றுக் காலை இடம்பெற்றது.

கிளிநொச்சியிலிருந்து முகமாலை நோக்கிச் சென்று கொண்டிருந்த மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் பிரிவினரை ஏற்றி பயணித்த பஸ்ஸுடன், பின்னால் பயணித்த டிப்பர் வாகனம் மோதி விபத்துக்குள்ளானது.

முகமாலையில் அமைந்துள்ள மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் பிரிவினரின் ஹலோ ட்ரஸ்ட் நிறு

19

## ‘22’ நிறைவேற்றுவதில் சிக்கல்!

### இரட்டைக் குடியுரிமை உடையோர் எம்பி ஆகலாம்:

**வேண்டும் என்கிறது பெரமுன! வேண்டாம் என்கிறது எதிரணி!!**

கொழும்பு, ஒக்ரோபர் 16

அரசமைப்புக்கான 22 ஆவது திருத்தச்சட்ட மூலத்தை நிறைவேற்றுவதில் கட்சிகளிடையே ஏற்பட்டுள்ள நிலைப் பாடு காரணமாக இழுபறி நிலை ஏற்பட்டுள்ளதாக அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

19

## விடுதலைப் புலிகளை நான் அழிக்கவில்லை

### அடித்து கூறுகிறார் சொல்ஹெய்ம்

கொழும்பு, ஒக். 16

விடுதலைப் புலிகளை தான் அழித்ததாகச் சொல்வதில் எவ்வித உண்மையும் இல்லை என முன்னாள் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்தார்.

தீவிரவாதப் போக்குடைய தமிழ் மற்றும் சிங்களவர்களே இவ்வாறான கருத்துக்களை தெரிவித்து வருகின்றனர் என்றும் அவர் கூறினார்.

இதேநேரம்

19

## வல்லரசுப் போட்டிக்கான களமாக இலங்கையை பயன்படுத்தும் சீனா

### தமிழர்கள் பகடைக்காய் என்கிறார் சிறீதரன்

கொழும்பு, ஒக். 16

சீனா தனது வல்லரசுப் போட்டிக்கான களமாக இலங்கையை பயன்படுத்துவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் குற்றம் சாட்டியுள்ளார்.

19

## மோ.சைக்கிள் பெற்றோல் தாங்கியிலிருந்து பயணித்த குழந்தை விபத்தில் உயிரிழப்பு!

### மன்னாரில் துயரச் சம்பவம்

மன்னார், ஒக். 16

தந்தையின் மோட்டார் சைக்கிளின் பெற்றோல் தாங்கியிலிருந்து பயணித்த இரண்டரை வயதுக் குழந்தை விபத்தில் சிக்குண்டு பரிதாபமாக உயிரிழந்துள்ளது.

மன்னார் அகத்திமுறிப்பைச் சேர்ந்த அம்ஜட் பாத்திமா அமனா என்ற

19

## கடும் மழையால் மூவர் பலி! 55, 000 பேருக்கு மேல் பாதிப்பு

கொழும்பு, ஒக். 16

நாட்டில் நிலவும் கடும் மழையுடன் கூடிய வானிலையால் மூவர் உயிரிழந்துள்ளதுடன், இருவர் காயமடைந்துள்ளனர்.

கடும் மழை காரணமாக 55 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வரக்காப்பொல - தும்பலியத்த மாயின்

19

## காணாமல்போனோரின் உறவுகள் ஆர்ப்பாட்டம்!

### விசாரணை உடன் நிறுத்தம்

மட்டக்களப்பு, ஒக். 16

காணாமல்போனோர் அலுவலகத்தால் மட்டக்களப்பு மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட விசாரணை, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் முன்னெடுத்த ஆர்ப்பாட்டம் காரணமாகத் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது.

19

## சம்பிரதாய கட்சி அரசியலை புறந்தள்ளி மக்களை பட்டினியில் இருந்து காப்போம்

### ஜனாதிபதி ரணில் அழைப்பு

கொழும்பு, ஒக். 16

சம்பிரதாய கட்சி அரசியலை புறந்தள்ளி, உணவுப் பாதுகாப்பை உருவாக்குவதன் மூலம் மக்களின் உணவுப் பிரச்னையைத் தீர்க்கும் வேலைத் திட்டத்தில் அனைவரும் இணைந்து செயற்பட வேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார்.

கிராமிய பொருளாதார மையங்களை வலுவூட்டும் பல்துறை ஒருங்

19

## பாண் விலை குறையாது

கொழும்பு, ஒக். 16

இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ கோதுமை மாவின் மொத்த விலையை 290 ரூபாவாக குறைத்தாலும் ரொட்டி மற்றும் பாணின் விலையை குறைக்க முடியாது என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்

19

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

ஜனநாயகப் போராளிகள் கட்சியினர் இந்தியாவுக்கு சென்றிருப்பது குறித்து இந்தப் பத்தியில் கடந்த வெள்ளிக்கிழமை எழுதியிருந்தேன்.

இவர்களின் இந்த திடீர் இந்திய விஜயம் யாரால் ஏற்பாடு செய்யப்பட்டது என்பது குறித்த சந்தேகத்தையும் அதில் எழுப்பியிருந்தது வாசகர்களுக்கு நினைவில் இருக்கலாம்.

புதுடில்லியில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொள்வதற்காகவே அவர்கள் அங்கு சென்றிருக்கின்ற விடயம் இப்போது தெரிய வந்திருக்கின்றது.

தமிழகத்தில் வாழும் தமிழ் அரசியல் மதியுரைஞர் ஒருவர், இங்கு வாழ்ந்தபோது விடுதலைப் புலிகளின் ஆஸ்தான அரசியல் ஆய்வாளராக இருந்தவர்.

விடுதலைப் புலிகள் மௌனிக்கப்பட்ட பின்னர் தமிழகத் துக்குப் புலம்பெயர்ந்து அங்கு வாழ்ந்துவரும் அவர், இப்போது இந்தியாவின் உதவியுடன்தான் ஈழத்தமிழர்கள் உரிமைகளைப் பெறலாம் என்று நம்புகின்றார்.

கவிஞர் காசி ஆனந்தன் போன்றவர்களும் அதனை நம்புவ தால்தான் அவர் இந்துத் தமிழீழம் என்ற கோஷத்தை முன் வைத்திருந்தாரோ தெரியவில்லை.

தமிழகத்தில் வாழும் அந்த அரசியல் ஆய்வாளர், தனது கருத்துக்களோடு உடன்படுகின்றவர்களை தனது சீடர்களாக உருவாக்கியும் வருகின்றார். அவ்வாறு அவரால் உருவாக்கப்பட்டவர்கள் சிலர் இந்தியாவில் உள்ள ஆளும் பாரதிய ஜனதாக் கட்சியின் உள்ளூர் தலைவர்களுடனும் தொடர்பில் இருக் கின்றனர்.

லண்டனிலிருந்து அடிக்கடி இந்தியா செல்லும் சிலர் அந்த அரசியல் ஆய்வாளரின் கருத்துக்களோடு உடன்படுகின்றவர்களாக இருப்பதும் கவனிக்கத்தக்கது.

இவ்வாறு லண்டனிலிருந்து சென்ற முக்கிய பெண்மணி ஒருவர், புதுடில்லியில் “ஈழத்தமிழர் பிரச்னைகளும் இந்தியாவும்“ என்ற கருப்பொருளில் கருத்தரங்கு ஒன்றை ஏற்பாடு செய்திருந்தார்.

அந்தக் கருத்தரங்கில் மிகக்கீழ் மட்டத்திலுள்ள ஒரு சில பாரதிய ஜனதா கட்சியின் தலைவர்களும் கலந்துகொண்டிருந்தனர். சென்னையிலிருந்து கல்விச் சுற்றுலா சென்றிருந்த மாணவர்கள் குழு ஒன்றும் அந்த கருத்தரங்கில் கலந்துகொண்டிருந்ததாகத் தெரியவருகின்றது. இந்தக் கருத்தரங்கில் கலந்து கொள்வதற்காகவே ஜனநாயகப் போராளிகள் கட்சியினர் அங்கு சென்றிருக்கின்றனர். அதாவது அந்தக் கருத்தரங்கு ஏற்பாட்டாளர்களே இவர்களை அழைத்திருந்தனர்.

அங்கு சென்ற ஜனநாயகப் போராளிகள் கட்சியின் பிரதிநிதிகள் ஐவர் புதுடில்லி வீதியில் “கோட்டும் ரை”யுமாக நடந்து செல்கின்ற புகைப்படம் ஒன்று சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டு வருகின்றது.

மாநாட்டுக்கு சென்றிருந்த ஒருவர், இந்த ஊர்க்குருவியுடன் பேசினார். மாநாட்டில் கலந்துகொண்ட உள்ளூர் அரசியல் பிரமுகர்கள் ஹிந்தியில் பேசினார்கள். நமது போராளிகள் தமிழில் தமது கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். அங்கு மொழிபெயர்ப்பு வசதி எதுவும் இருக்கவில்லை. இவர்கள் சொன்னது அவர்களுக்கு புரிந்திருக்காது. அவர்கள் சொன்னதும் இவர்களுக்கு புரிந்திருக்க சந்தர்ப்பம் இருந்திருக்காது என்று.

இவ்வாறான ஒரு மாநாட்டுக்கு செல்கின்றபோது தாங்கள் சொல்கின்ற விடயங்களை குறைந்தது ஆங்கிலத்தில் மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்வதற்காகவாவது ஒருவரை அழைத்துச் சென்றிருக்கலாம். விடுதலைப் புலிகளே ஜோர்ஜ் மாஸ்டரை வைத்திருந்ததுபோல.

அதுவல்ல நாம் இப்போது சொல்ல வருவது,

வெள்ளிக்கிழமை எழுதியிருந்த பத்தியில், இவர்கள் முக்கிய போராளிகள்தானா என்றும் அவர்களை பலரும் அறிந்திருக்கவில்லை என்றும் குறிப்பிட்டிருந்தேன். அதுகுறித்த ஒரு போராளி கவலை தெரிவித்தார்.

யுத்தம் முடிவடைந்த பின்னர், இலங்கை அரசாங்கம் பன்னிரண்டாயிரம் போராளிகளை புனர்வாழ்வளித்து சமூகத்துடன் ஒன்றிணைத்ததாக தொடர்ந்து கூறிவருகின்றது.

அந்தப் பன்னிரண்டாயிரம் போராளிகளில் ஏராளமானவர்கள் இறுதிக்கட்ட யுத்தத்தில் கடைசி நேரத்தில் இணைந்து கொண்டவர்கள்.

யுத்தம் முடிவடைந்து, மக்களோடு மக்களாக வெளியேறி செட்டிக்குளம் முகாமில் எல்லோரும் தங்கியிருந்துபோது, அங்கு படையினரால் அறிவித்தல் விடுக்கப்பட்டது. “ஒரு நாளேனும் புலிகள் இயக்கத்தில் இருந்திருந்தால் அவர்கள் தங்களை அடையாளப்படுத்தவேண்டும்”, என்ற அவர்களின் அறிவிப்பையடுத்து அவ்வாறானவர்களை அவர்களின் பெற்றோரே படையினரிடம் கையளித்தனர். அவ்வாறு கையளிக்கப்பட்டவர்களில் பலரே பின்னர் புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட முன்னாள் போராளிகள்.

அவ்வாறு சரணடைந்த மூத்தபோராளிகள் பலர் காணாமல் ஆக்கப்பட்டனர். பசீர் காக்கா, தயா மாஸ்டர் போன்ற முக்கிய போராளிகள் மீது வழக்குகள் போடப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட பின்னரே விடுவிக்கப்பட்டனர். அவ்வாறு இல்லாமல் புனர்வாழ்வளிக்கப்பட்டவர்கள் முக்கிய போராளிகள்தானா என்பது தெரியவில்லை.

ஆனாலும், விடுதலைப் புலிகளின் தியாகங்களை தமது சொந்த அரசியலுக்காக சிலர் பயன்படுத்தும்போது, ஒருநாளேனும் போராளியாக இருந்தவர்கள் புலிகளின் பெயரில் அரசியல் செய்வது தவறானது என்று யாரும் சொல்லிவிடமுடியாது என்றார் அந்த நண்பர்.

இந்தியா சென்றதும், இந்தியாவின் துணையுடன்தான் நமது பிரச்னைகளை தீர்க்கலாம் என்ற நம்பிக்கை அந்த ஆய்வாளருக்கு ஏற்பட்டது போல இவர்களுக்கும் ஏற்பட்டிருந்தால், தாயகம் திரும்பியதும் அவர்கள் செய்யவேண்டியது, நான் முன்னரே வெள்ளிக்கிழமை குறிப்பிட்டதுபோல, அவர்கள் அங்கம் வகிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அதனை ஏற்றுக்கொள்கின்ற நிலையை ஏற்படுத்த வேண்டும். இல்லையேல் அவர்கள் அதிலிருந்து வெளியேறி தமது புதிய நிலைப்பாட்டுக்கு ஆதரவாக களம் இறங்கவேண்டும்.!

**- ஊர்க்குருவி**

## விவசாயிகளுக்கு நெருக்கடி கொடுத்து உணவுப் பஞ்சத்தைத் தீர்க்க முடியாது

### சிவசக்தி ஆனந்தன் சுட்டிக்காட்டு

*வவுனியா, ஒக். 16*

விவசாயிகளுக்கு நெருக்கடிகளைக் கொடுத்து அவர்களின் காணிகளை அபகரித்துக் கொண்டு இந்த நாட்டில் உணவுப் பஞ்சத்தை தீர்க்க முடி யாது. இதனை ஜனாதிபதியின் கவனத்திற்கு கட்சி பேதமின்றி கொண்டு செல்ல வேண்டும் என தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் செயலாளரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

வவுனியா நகரசபை மண்டபத்தில் மாவட்ட விவசாயிகளுடன் நேற்று இடம்பெற்ற திறந்த கலந்துரையாடலின்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வவுனியா மாவட்டத்தில் உள்ள விவசாயிகளின் காணிப்பிரச்னைகள் தொடர்பில் பாராளுமன்றம் மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் பேசியும் எந்த தீர்வும் இல்லை. அதனால் நாங்கள் இது தொடர்பில் ஒரு தீர்மானம் எடுக்க வேண்டியுள்ளது. கட்சி விருப்பு வெறுப்புக்களுக்கு அப்பால் மாவட்ட விவசாயிகளுக்கு ஒரு தீர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டியது அனைவரதும் பொறுப்பு.

ஏனைய மாவட்டங்களில் பல கட்சிகள் இருந்தாலும், அவர்கள் தமக்கான நிகழ்ச்சி நிரலை கொண்டிருந்தாலும் ஒன்றாகவே பயணிக்கிறார்கள். தமிழ் மக்கள் தொடர்பில் ஐ.நா மனித உரிமை பிரேரணை உள்ளிட்ட எந்த விடயத்திலும் அவர்கள் ஒற்றுமையாக செயற்படுகிறார்கள். ஆகவே வன்னி மாவட்ட மக்களின் ஆதரவுடன் தெரிவு செய்யப்பட்டவர்கள் இந்த மாவட்ட மக்களின் தேவைகளை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு உள்ளது.

ஜனாதிபதியிடம் விவசாயப் பிரச்னைகளை முன்வைக்க வேண்டும். சில பிரச்னைகளை ஜனாதிபதியால்தான் தீர்க்க முடியும். ஏனெனில் நில அபகரிப்பு தொடர்பாக சில திணைக்களங் களை யாரும் கட்டுப்படுத்த முடியாது. பொது மக்களின் காணிகளை சுவீகரிப்பதில் இருந்து அவர்களை கட்டுப்படுத்த முடியாது. நிறைவேற்று அதிகாரம் உடைய ஜனாதிபதி என்ற அடிப்படையில் அவரிடம் முன்னிலைப்படுத்தி கொடுக்க முடியும். குறிப்பிட்ட காலப்பகுதியில் அதனை தீர்க்க வேண்டும் என வலியுறுத்த வேண்டும்.

விவசாயிகளுக்கு நெருக்கடிகளைக் கொடுத்து அவர்களின் காணிகளை அபகரித்துக் கொண்டு இந்த நாட்டில் உணவுப் பஞ்சத்தை தீர்க்க முடி யாது. இந்த விடயத்தில் கட்சி பேதமின்றி ஜனாதிபதியுடன் பேசி தீர்வு காண வேண்டும். ஒரு கால வரையறைக்குள் தீர்க்க முடியாவிட்டால், மக்களுடன் இணைந்து போராட வேண்டும். அடுத்து வரும் ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதியை தெரிவு செய்வது தமிழ், முஸ்லிம் மக்களின் கைகளிலேயே உள்ளது. தென்னிலங்கை கட்சிகள் பிளவுபட்டுள்ளது. எமது விவசாயிகளின் பிரச்சனைகளை தீர்க்காதுவிடின் விவசாயிகளிடம் இருந்து பாடத்தை பெறவேண்டி வரும். நாமும் விவசாயிகளுடன் இணைந்து போராடவேண்டும்.

எங்கள் பிரச்னைகளை பேரம் பேசாத வரை நாம் தொடந்தும் அடக்குமுறைக்குள்தான் இருக்க முடியும். எனவே எமது கோரிக்கையை குறித்த காலத்திற்குள் தீர்க்க முடியாவிட்டால் வீதியில் இறங்க வேண்டி வரும் - என்றார். (அ)

## நாய், பூனைக்கும் விரைவில் வரி!

### லால் காந்த யோசனை

*கொழும்பு, ஒக். 16*

“அடக்குமுறையை கையாள்வதன் ஊடாக அரசியல் மற்றும் சமூக ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த முடியும் என்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எண்ணம் - முயற்சி ஒருபோதும் கைகூடாது. எனவே, ஜனநாயக ரீதியில் தீர்வு வழங்கப்பட வேண்டும். அதற்கான ஒரே வழி தேர்தலாகும்.” - என்று ஜே.வி.பியின் அரசியல் குழு உறுப்பினரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான கே.டி. லால் காந்த தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் நுவரெலியா - மஸ்கெலியா தேர்தல் தொகுதிக்கான மக்கள் சந்திப்பு நேற்று அட்டனில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரை யாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

தற்போதைய ஆட்சியாளர்களால் இந் நாட்டை ஆள முடியவில்லை. அதனால்தான் மக்கள்மீது வரிச்சுமை திணிக்கப்படுகின்றது. ஒரிரு நாட்களுக்கு முன்னர்கூட புதிய வரி அறிமுகப்படுத்தப்பட்டது. இது ஆரம்பம் மட் டும்தான், அடுத்து வரும் நாட்களில் புதிய புதிய வரிகள் வரலாம். எனவே, இந்த அரசுக்கு வரி விதிப்பு குறித்து சில யோசனைகளை முன்வைக்கலாம் என நினைக்கின்றேன்.

வெள்ளையர்கள் ஆட்சியில் சப்பாத்து வரி அறவிடப்பட்டது, முடிந்தால் அந்த வரியையும் அறவிட்டுக்கொள்ளுங்கள். வீட்டில் வளர்க்கப்படும் நாய்க்கும் வரி விதிக்கப் பட்டது. எனவே, நாய்க்கும், பூனைக்கும் ஒரு வரியை அறி முகப்படுத்திக் கொள்ளட்டும். முன்னர் முலைவரி என ஒன் றும் இருந்தது, அதையும் செயற்படுத்திக்கொள்ளட்டும். இப்படி வரிகளால் மட்டும் அரச நிர்வாகத்தை கொண்டு நடத்தவிட முடியாது. மக்கள் கிளர்ந்தெழுவார்கள்.

அதேவேளை, மக்கள் எழுச்சியை - கிளர்ச்சியை அடக்கு முறை முறை ஊடாக கட்டுப்படுத்தி அரசியல் மற்றும் சமூக ஸ்திரத்தன்மையை ஏற்படுத்திவிடலாம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கருதுகின்றார். ஆனால் அந்த முயற்சி வெற்றியளிக்காது. எனவே, ஜனநாயக வழியில் நாம் பதிலொன்றை எதிர்பார்க்கின்றோம். அதற்கான சிறந்த வழி தேர்தலாகும்.

ஜனநாயக வழியில் அரசியல் மற்றும் சமூக ஸ்திரத்தன் மையை ஏற்படுத்தினால் மட்டுமே வெளிநாட்டு முதலீட்டார்கள் நாட்டுக்கு வருவார்கள் - என்றார். (அ)

## வரக்காபொல மண்சரிவு; தாயும், மகனும் மரணம்

*கொழும்பு, ஒக். 16*

கேகாலை, வரக்காபொல பகுதியில் மண்சரிவில் சிக்குண்டு உயிரிழந்தவர்க ளில் மேலும் ஒருவரின் சடலம் மீட்கப் பட்டுள்ளது. 24 வயதான இளைஞன் ஒருவரின் சடலமே, மீட்புக்குழுவால் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

வரக்காபொல பகுதியில் உள்ள வீடொன்றின்மீது பாரிய மண்மேடு நேற்றுமுன்தினம் சரிந்து விழுந்தது.

தந்தை, தாய் மற்றும் மகன் ஆகி யோர் மண்ணுக்குள் புதையுண்டனர். தந்தை நேற்று மாலை மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். தாய் மற்றும் மகனின் சடலங்கள் நேற்று மீட்கப்பட்டன.

அத்துடன், இக்குடும்பத்தின் இரண்டாவது மகன் மேலதிக வகுப் பிற்காக வீட்டிலிருந்து வெளியில் சென்ற வேளையிலேயே மண்சரிவு இடம்பெற்றதால், அவர் உயிர் தப்பியுள்ளார். (அ)

# பொருளாதார, சித்தாந்த ரீதியாக வங்குரோத்து நிலையில் நாடு!

## சுட்டிக்காட்டுகிறார் சஜித் பிரேமதாஸ

கொழும்பு, ஒக். 16

அரசாங்கம் பொருளாதார ரீதியாகவும் சித்தாந்த ரீதியாகவும் வங்குரோத்து நிலையில் இருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள பொது மக்கள் மீது புதிய வரிச்சுமையைச் சுமத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும், புதிய வரிகள் மக்கள் மீது பெரும் சுமையை ஏற்படுத்துவதாகவும் அவர் கூறினார்.

பண்டோரா ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தனிநபர்கள் வைத்திருக்கும் டொலர்களை மீட்டெடுக்க முடியும் என்றும், வரிகளை அதிகரிப்பதால் மாத்திரம் வருமானத்தை அதிகரிக்க முடியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அரசியல் இலாபம் பெறுவதற்குப் பதிலாக, சிறுவர்களின் கல்வியை உயர்த்துவதற்கு அரசியல்வாதிகள் செயற்படவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ)



## மஹிந்த-சீனத்தூதுவர் சந்திப்பு

கொழும்பு, ஒக். 16

இலங்கைக்கான சீனத் தூதுவர் கியூ சென்ஹொங் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை வெள்ளிக்கிழமையன்று மரியாதை நிமித்தமாகச் சந்தித்தார். அங்கு இருவரும் இலங்கைக்கும் சீன மக்கள் குடியரசுக்கும் இடையிலான நல்லுறவை மேலும் வலுப்படுத்துவது தொடர்பாக பல தரப்பட்ட விடயங்கள் குறித்துக் கலந்துரையாடினர்.

கலந்துரையாடலின் போது, சீனாவின் சோஷலிசக் கட்டமைப்பில் புதிய மைல்கல்லாக அமையவுள்ள சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் எதிர்வரும் 20ஆவது தேசிய மாநாட்டுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்து, முன்னாள் ஜனாதிபதி ராஜபக்ஷ, ஜனாதிபதி ஷி ஜின்பிங்கிடம் வாழ்த்துக் கடிதத்தை கையளித்தார். (அ)

# மேற்கூரை சூரிய மின் உற்பத்தி திட்டம் இந்தியா 100 மில்லியன் டொலர் கடன்

கொழும்பு, ஒக். 16

மேற்கூரைகளில் சூரியக் கலங்களை பொருத்தும் வேலைத்திட்டத்திற்கு இந்திய அரசாங்கத்தினால் 100 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் வழங்கப்படவுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சரான காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

பாடசாலைகள், பல்கலைக் கழகங்கள், கல்வி நிலையங்கள், வைத்தியசாலைகள், மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்கள், அரச கட்டடங்கள் மற்றும் மத வழிபாட்டுத் தலங்கள் என்பவற்றில் சூரிய மின்கலம் பொருத்துவதற்கு இந்த கடன் பயன்படுத்தப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இந்திய தூதரகம், இலங்கை நிலையான எரிசக்தி அதிகார சபை மற்றும் இலங்கை மின்சார சபை ஆகியவற்றின் அதிகாரிகளுடன் கடன் திட்டத்தின் முன்னேற்றம் மீளாய்வு செய்யப்பட்டதாகவும் அமைச்சர் கூறினார். (அ)

# கொத்து ரொட்டியின் விலை 50 ரூபாவால் குறைகிறது

கொழும்பு, ஒக். 16

இறக்குமதி செய்யப்படும் கோதுமை மாவின் மொத்த விலையில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சியை கருத்திற் கொண்டு அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் கொத்து ரொட்டியின் விலையை குறைத்துள்ளது.

அதன்படி, இன்று முதல் கொத்து ரொட்டியின் விலை 50 ரூபாவினால் குறைக்கப்படும் என சங்கம் தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், மா அடிப்படையிலான ஏனைய பொருட்களின் விலை குறைக் கப்பட மாட்டாது என அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தற்போது கொத்து ரொட்டி ஒன்றின் விலையானது ரூபா 500 முதல் பல்வேறு விலைகளில் விற்பனை செய்யப்படுகிறது. (அ)

# வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக யாழ்ப்பாணத்தில் நேர்முகத் தேர்வு

யாழ்ப்பாணம், ஒக். 16

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் வழிகாட்டலில் தென்மராட்சி பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் வெளிநாட்டு வேலை வாய்ப்பை எதிர்பார்ப்போருக்கான முதலாம் கட்ட நேர்முகத்தேர்வு நாளை முதல் 19ஆம் திகதி வரை காலை 9.00 மணி முதல் நண்பகல் 12 மணி வரை தென்மராட்சிப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

வெளிநாட்டு வேலை வாய்ப்பில் ஈடுபட ஆர்வமுள்ளவர்கள் குறித்த நேர்முகத் தேர்வில் கலந்து கொள்வதுடன் வரும்போது தொழில் தகைமைச் சான்றிதழ்கள் மற்றும் ஏனைய ஆவணங்களுடன் சமுகமளிக்குமாறும் கேட்கப்பட்டுள்ளனர்.

# இலங்கையில் 690,000 பேர் ஓய்வூதியம் பெறுகின்றனர்

கொழும்பு, ஒக். 16

இலங்கையில் சுமார் 690,000 பேர் ஓய்வூதியம் பெறுகின்றனர். அதற்காக அரசாங்கம் ஒவ்வொரு மாதமும் 24,200 மில்லியன் ரூபாவை செலவிடுகிறது.

எனினும் எவ்வாறான பொருளாதார சிரமங்கள் அல்லது பிரச்னைகளுக்கு மத்தியில் இந்த ஓய்வூதியர்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருவதாக ஓய்வூதிய பணிப்பாளர் நாயகம் ஏ.ஜகத் டி.டயஸ் தெரிவித்துள்ளார்.

ஓய்வு பெற்ற பின்னர், கொழும்பு மாளிகாவத்தையில் உள்ள ஓய்வூதிய திணைக்களத்தில் மேற்கொள்ளப்படும் அனைத்து பணிகளையும் ஓய்வூதிய பராமரிப்பு பியச மாவட்ட அலுவலகத்தில் மேற்கொள்ள முடியும் என பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

ஒக்ரோபர் 8ஆம் திகதி தேசிய ஓய்வூதிய தினத்துடன் இணைந்து ஓய்வூதியத் திணைக்களத்தை மாவட்ட மட்டத்துக்கு பரவலாக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார். (அ)

# வெள்ளை பிரம்பு தினத்தை முன்னிட்டு சுன்னாகத்தில்விழிப்புணர்வுப்பேரணி

யாழ்ப்பாணம்,ஒக். 16

சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சுன்னாகத்தில் விழிப்புணர்வு பேரணியொன்று முன்னெடுக்கப்பட்டது.

சுன்னாகம் நகரில் நேற்று காலை 9 மணியளவில் ஆரம்பமான பேரணி சுன்னாகம் பஸ் தரிப்பு நிலையம் வழியாக வாழ்வகத்தைச் சென்றடைந்தது.

வாழ்வகம் மற்றும் லயன்ஸ் கழகம் ஆகிய இணைந்து இந்த விழிப்புணர்வு பேரணியை நடத்தின.

வெள்ளைப் பிரம்பின் முக்கியத்துவம், விழிப்புலனற்றவர்கள் வீதியில் நடமாடுவதற்கு இருக்கின்ற இடையூறுகள், அவர்களை ஏன் முன்னுரிமைப்படுத்த வேண்டும் போன்ற விடயங்கள் இதன்போது வலியுறுத்தப்பட்டது. (அ)






# விவசாயிகளுக்கு ஹெக்ரேயருக்கு 176 கிலோ யூரியா வழங்கப்படும்

கொழும்பு, ஒக். 16

இவ்வருடம் நெல் பயிரிடும் விவசாயிகளுக்கு 1 ஹெக்ரேயருக்கு 176 கிலோ யூரியா உரம் வழங்குவதற்கு விவசாயத் திணைக்களம் பரிந்துரைத்துள்ளதாக அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

நெதொல்பிட்டி விவசாய சேவை நிலையத்தில் விவசாயிகளுக்கு பயிர்க்கடன் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்ட போதே அமைச்சர் இதனை கூறினார்.

ஒவ்வொரு விவசாயியும் 50,000 ரூபாவை கடனாகப் பெற்றனர். கடந்த சிறு போகத்தில் 01 ஹெக்ரேயர் நெற் செய்கைக்கு 100 கிலோ யூரியா உரம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. (அ)

# 22ஆவது திருத்தத்துக்கு நிபந்தனையுடன் ஆதரவு

## மனோ கணேசன் அணி அறிவிப்பு

கொழும்பு, ஒக். 16

அரசியலமைப்பிற்கான 22 ஆவது திருத்தச்சட்டமூலத் துக்கு நிபந்தனைகளுடன் ஆத ரவு வழங்க பிரதான எதிர்க் கட்சி ஐக்கிய மக்கள் கூட்டணி தீர்மானித்துள்ளது.

ஐக்கிய மக்கள் கூட்டணி யின் தலைமைக்குழு நேற்று முன்தினம் கூடியது. இதன் போதே இம்முடிவு எடுக்கப் பட்டுள்ளது.

மேற்படி கூட்டணியில் பங்காளியாக அங்கம் வகிக் கும் தமிழ் முற்போக்கு கூட்டணி மனோ கணேசன் இந்த தக வலை நேற்று வெளியிட்டார்.

"இரட்டை குடியுரிமை கொண்டோர் பாராளுமன்றத் தில் உறுப்புரிமை வகிக்க முடி யாது. சமர்பிக்கப்பட்டுள்ள வரைவில் உள்ளதை மாற்றி, அமெரிக்க பிரஜை பஸில் ராஜபக்‌ஷவின் எண்ணப்படி செயற்பட ஸ்ரீலங்கா பொது ஜன முன்னணிக்கு நாம் ஒரு போதும் இடம் தர மாட்டோம். பஸில் ராஜபக்‌ஷ அமெரிக்க காங்கிரஸில் இடம் தேடி கொள்ளட்டும்.

அதேவேளை பாராளுமன் றத்தை, அடுத்த வருட முதல் காலாண்டில் கலைக்க இன் றைய ஜனாதிபதி ரணில் விக் கிரமசிங்கவுக்கு அதிகாரம் தரும், "இரண்டரை வருடம்", என்ற விதி மாற்றப்படக் கூடாது. இந்நாட்டு மக்கள் இன்று, இந்த பாராளுமன் றத்தை மாற்றி, புதிய பாராளு மன்றத்தை அமைக்க விரும்பு கிறார்கள். ஆகவே, இரண் டரை வருடத்தில் பாராளு மன்றத்தை கலைக்கும் அதி காரம் ஜனாதிபதியிடம் தொடர்ந்து விடப்படுவதை நாம் தந்திரோபாய நோக்கில் ஆதரிக்கிறோம்.

அதேவேளை, பாராளுமன் றத்தில் குறைந்தபட்சம் 113 உறுப்பினர்கள் கூடி பாராளு மன்றத்தை கலைத்து புதிய தேர்தலுக்கு செல்லவேண்டும் என தீர்மானித்தால், அதை ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க மறுக்க முடியாது. அதை அவர் ஏற்று பாராளுமன் றத்தை கலைத்து புதிய தேர்த லுக்கு செல்ல தீர்மானிக்க வேண்டும் என நாம் நம்புகி றோம். ஆகவே அடுத்த வரு டம் தேர்தல் மேகம் சூழும். புதிய மக்களாணையை பெற கட்சிகள் தயாராக வேண்டும். தேர்தலைச் சந்திக்க தமிழ் முற்போக்கு கூட்டணி தயார் நிலையில் இருக்கிறது. அந் நிலையை இன்னமும் மெரு கூட்டும் நடவடிக்கைகளை நாம் முன்னெடுக்க தீர்மானித் துள்ளோம்." - எனவும் மனோ குறிப்பிட்டார். (அ)

# ஜே.ஆரின் வழியில் ரணில்! அநுரகுமார குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 16

"ஜனாதிபதி ரணில் விக்கிர மசிங்க, அவரின் மாமாவான ஜே.ஆரின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி தேர்தலைப் பிற் போடும் நடவடிக்கையில் இறங்கியுள்ளார்."

- இவ்வாறு ஜே.வி.பியின் தலைவரும் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப் பினருமான அநுரகுமார திஸா நாயக்க தெரிவித்தார்.

"தேர்தலை இழுத்தடிக் கவே சர்வஜன வாக்கெடுப்பு குறித்து கதைக்கப்படுகின்றது. இந்தத் திட்டம் வெற்றியளிக்க ஜே.வி.பி. ஒருபோதும் இடம ளிக்காது" எனவும் அவர் கூறி னார்.

இது தொடர்பில் ஊடகங் களிடம் அவர் மேலும் தெரி விக்கையில்,

"தற்போதைய ஜனாதிபதி பாராளுமன்றத்துக்குக் கூட தெரிவு செய்யப்படாதவர். அவரது ஒட்டுமொத்தக் கட்சி யும் தேர்தலில் மக்களால் நிரா கரிக்கப்பட்டது. அதே போன்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும் மக்களால் நிராகரிக்கப்பட்டுள்ள கட்சி யாகும். எனவே, ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்ச ரவை பதவி விலக வேண்டும்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் ஏற்கனவே ஓராண் டுக்கு ஒத்திவைக்கப்பட்டுள் ளது. ஒத்திவைக்கப்பட்ட உள்ளூராட்சி சபைத் தேர் தலை மார்ச் 20ஆம் திகதிக்கு முன்னதாக நடத்த வேண்டும்.

தற்போது தேர்தல் ஆணை யத்துக்கு அந்த அதிகாரம் கிடைத்துள்ளது. ஆனால், தேர்தலைப் பிற்போட அரசு முயற்சிக்கின்றது. அதனால் தான் சர்வஜன வாக்கெடுப்பு பற்றிய கதை பரப்பப்படு கின்றது" - என்றார். (அ)

# சீரற்ற காலநிலை: இருவர் உயிரிழப்பு

## 21,888 பேர் பாதிப்பு

கொழும்பு, ஒக். 16

நிலவும் சீரற்ற காலநிலை யால் பதினொரு மாவட்டங் களில் 5,212 குடும்பங்களைச் சேர்ந்த 21,888 பேர் பாதிக் கப்பட்டுள்ளதுடன் இருவர் உயிரிழந்துள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ நிலை யம் அறிவித்துள்ளது.

பாதிக்கப்பட்டவர்கள் அம்பாந்தோட்டை, காலி, திருகோணமலை, கிளிநொச்சி, களுத்துறை, கம்பஹா, கொழும்பு, புத்தளம், இரத்தின புரி, கேகாலை மற்றும் கண்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த வர்களாவர்.

மேலும், சீரற்ற காலநிலை யால் இரண்டு வீடுகள் முழு மையாகவும் 117 வீடுகள் பகுதி யளவிலும் சேதமடைந்துள் ளன.

64 குடும்பங்களைச் சேர்ந்த 264 பேர் பாதுகாப்பான நான்கு இடங்களுக்கு அனுப் பப்பட்டுள்ளனர். (அ)

# ரயில்வே திணைக்களத்தை சீரமைப்பு செய்யவேண்டும்

கொழும்பு, ஒக். 16

ரயில்வே திணைக்களத்தை வர்த்தக ரீதியாக சாத்தியமான முயற்சியாக மாற்றுவதற்கு அதனை மறுசீரமைக்க வேண் டியதன் அவசியம் தொடர்பில் போக்குவரத்து அமைச்சு கலந்துரையாடலை ஆரம்பித் துள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

ரயில்வே திணைக்களம் வருடாந்தம் 10 பில்லியன் ரூபாவை செயற்பாட்டு இழப்பை எதிர்கொள்வதாக வும், அரசாங்கத் திணைக்களம் என்ற வகையில் அதன் நிறு வன அமைப்பு வர்த்தக ரீதி யான சாத்தியத்தை மழுங் கடிக்கிறது. "2021 இல் திணைக்களம் 2.6 பில்லியன் ரூபாவை மாத்திரமே ஈட்டியது எனவும் அமைச்சர் குறிப் பிட்டார்.

மேலதிக நேர கொடுப்ப னவுகளுக்காக மாத்திரம் 2.3 பில்லியன் ரூபா செலவிடப் பட்டுள்ளது. சம்பளம் வழங்கு வதற்காக 7 கோடி ரூபா செல விடப்பட்டது எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

இது பெரும் செயற்பாட்டு இழப்பில் இயங்குகிறது. வணிக நம்பகத்தன்மையை மேம்படுத்த சரியான கட்ட மைப்பை நாம் கண்டுபிடிக்க வேண்டும். சட்டப்பூர்வ சபை யாக இயங்கினால், சில முடிவு களை எடுக்கலாம்.

தற்போது, திணைக்களத் தில் 8,000 காலியிடங்கள் உள் ளன, அவற்றில் 1,000 ரயில்வே காவலர்கள், என்ஜின் சாரதிகள் மற்றும் ரயில் நிலைய அதிபர் கள் போன்ற அத்தியாவசியப் பிரிவுகளில் உள்ளன.

ரயில்வே காவலர்கள் பற் றாக்குறையால் வார இறுதி விசேட ரயில் சேவைகள் விரி வாக்கம் செய்வதில் தடை ஏற் பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.(அ)

# இந்திய துணைதூதரகத்தின் ஏற்பாட்டில் யாழில் அப்துல் கலாமின் பிறந்த தினம்

யாழ்ப்பாணம், ஒக். 16

பாரத ரத்னா டாக்டர் ஏ. பி.ஜே. அப்துல் கலாமின் 91ஆவது பிறந்தநாள் நேற்று யாழ்.இந்திய துணைத் தூதர கத்தால் கொண்டாடப்பட் டது.

யாழ்ப்பாணம் பொது நூலகத்தில் இந்தியா முற்றத் தில் உள்ள அவரது சிலைக்கு யாழ்.இந்திய துணைத் தூது வர் ராகேஷ் நட்ராஜ் மலர் மாலை அணிவித்து மற்றும் மலர்தூவி மரியாதை செலுத்தி னார். அதேபோன்று தலைமை நூலகர் மலர் மாலை அணிவித்து மலர் தூவி மரி யாதை செலுத்தினார்.

டாக்டர். ஏ.பி.ஜே. அப் துல் கலாமின் "மணல் சிற்பம்" யாழ்பாணம் காரைநகரிலுள்ள கசுவரினா கடற்கரையில் யாழ் வேலணையை சேர்ந்த மணல்




சிற்ப கலைஞர் சுப்பிரமணியம் சுகுமாரினால் உருவாக்கப்பட் டது. அதற்கு யாழ் இந்திய துணைத் தூதுவர், காரைநகர் பிரதேச சபை தவிச்சாளர் க. பாலச்சந்திரன் மற்றும் நூற் றுக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் மலர் தூவி மரியாதை செய்தனர். மணல் சிற்ப கலைஞர் சுப்பிரமணியம் சுகுமாரை ஊக்குவிற்கும் பொருட்டு யாழ். இந்திய துணைத் தூதுவர் ரொக்கப் பரிசு வழங்கினார். (அ)

# கொள்ளையிடப்பட்ட 5.5 பவுண் நகை பருத்தித்துறைப் பொலிஸாரால் மீட்பு

கொழும்பு, ஒக். 16

மோட்டர் சைக்கிள் ஒன் றைத் திருடி அதில் சென்று பாடசாலைக்கு பிள்ளையை அழைத்துச் சென்ற பெண் ஒரு வரின் தங்கச் சங்கிலியை அறுத்த நபர்கள் இருவர் செய் யப்பட்டுள்ளதுடன், 5.5 பவுண் நகைகளும் மீட்கப்பட் டுள்ளன.

குறித்த மோட்டர் சைக்கி ளுடன் பெறுமதியான கைத் தொலைபேசி ஒன்றும் திரு டப்பட்டுள்ளதாகவும் அது தொடர்பாகவும் குறித்த திருட்டு சந்தேக நபர்களிடம் விசாரணை மேற்கொள்ளப்பட் டுள்ளது.

பருத்தித்துறை பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி பிர தான பொலிஸ் பரிசோதகர் பிரியந்த அமரசிங்க தலைமை யிலான பொலிஸார் அதி காலை கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டுக் கொண்டி ருந்தபோது மாடு ஒன்றைத் திருடிச் சென்ற இருவர் கைது செய்யப்பட்டதுடன் இரண்டு சந்தேக நபர்களும் கைது செய் யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் நால்வரும் சான்றுப் பொருட்களும் இன்று நீதிமன்றில் முற்படுத் தப்படவுள்ளதாகவும், குறித்த நகை திருட்டில் ஈடுபட்டவர் கள் வடமராட்சி பகுதியில் பல்வேறு திருட்டுக்களில் ஈடு பட்டிருக்கலாம் எனச் சந்தே கம் உள்ளதாகவும் அவர்களி டம் தீவிர விசாரணைகள் இடம் பெற்றுவருவதாகவும் பருத்தித்துறை பொலிஸ் நிலைய தகவல்கள் தெரிவித் தன.

(அ-02)

Eelanadu ஈழநாடு
16.10.2022 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், புரட்டாதி 29

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# ஏன் உள்ளக பொறிமுறை வெற்றியளிக்கவில்லை?

நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ உள்ளக பொறிமுறையின் மூலம்தான் பிரச்னைகளுக்கு தீர்வு காணப்படுமென்று தெரிவித்திருக்கின்றார். இது ஒரு பழைய கதை. கடந்த பன்னிரெண்டு வருடங்களாக பலர் நீதி அமைச்சர்களாகப் பொறுப்பேற்றிருக்கின்றனர். இதேபோன்று, வெளிநாட்டு அமைச்சர்களாகப் பொறுப்பேற்றிருக்கின்றனர். இந்தக் காலத்தில் அனைவருமே உள்ளக பொறிமுறை தொடர்பில்தான் பேசி வந்திருக்கின்றனர். ஆனால், எவருமே தாங்கள் கூறும் உள்ளக பொறிமுறை ஏன் வெற்றியளிக்கவில்லை - ஏன் பாதிக்கப்பட்ட மக்களின் நம்பிக்கையை தங்களால் பெற முடியவில்லை என்பது தொடர்பில் சிந்திக்க முயற்சிக்கவில்லை.

ரணில் - மைத்திரி ஆட்சிக்காலம் இதற்கு சற்று விதிவிலக்கானது. ஏனெனில், அப்போதும் உள்ளக பொறிமுறை பற்றித்தான் பேசப்பட்டது. ஆனால், ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் பிரேரணைக்கு இணை அனுசரணை வழங்கி ஏற்றுக்கொண்டதன் மூலம் அவற்றை நடைமுறைப்படுத்தும் பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக்கொண்டது. ஆனால், ராஜபக்ஷக்களோ சர்வதேச தலையீடுகளை முற்றிலுமாக நிராகரித்தனர்.

தற்போது, ரணில் அதிகாரத்தில் இருந்தாலும்கூட ராஜபக்ஷக்களின் பொதுஜன பெரமுனவின் கட்டுப்பாட்டில்தான் அரசாங்கம் இருக்கின்றது. இந்தப் பின்புலத்தில் ராஜபக்ஷக்களின் கொள்கை நிலைபாடே இப்போது நடைமுறையில் இருக்கின்றது. அதாவது, இதிலுள்ள நகைச்சுவையான விடயம் என்னவென்றால் ராஜபக்ஷக்களை எதிர்க்கும் விஜயதாஸ ராஜபக்ஷ, ராஜபக்ஷக்களின் வெளிவிவகார அணுகுமுறையையே பின்பற்றுகின்றார்.

உள்ளக பொறிமுறை விடயத்துக்கு வருவோம். உள்ளக பொறிமுறை தொடர்பில் விவாதிக்கும்போது ஓர் அடிப்படையான கேள்வி எழுகின்றது. அதாவது, இதுவரையில் ஏன் உள்ளக பொறிமுறை வெற்றியளிக்கவில்லை? உள்ளக பொறிமுறையை வெற்றிகரமாக முன்னெடுத்திருந்தால் நிலைமைகள் இந்தளவு தூரம் சிக்கலடைந்திருக்காது. ஆனால், உள்ளக பொறிமுறையை நேர்மையாகவும் வினைத்திறனுடனும் முன்னெடுக்கக்கூடிய அரசியல் உறுதிப்பாடு தென்னிலங்கையின் அரசியல் தலைமைகளிடம் இருந்திருக்கவில்லை. இதன் காரணமாகவே உள்ளக பொறிமுறை வெற்றியளிக்கவில்லை. உள்ளக பொறிமுறையில் தமிழ் மக்கள் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை. நம்பிக்கை வைக்கக்கூடியவாறு இதுவரையில் தென்னிலங்கை செயல்படவுமில்லை.

எனவே, நல்லிணக்கம் தொடர்பில் உரையாடுவோர் முதலில் ஏன் இதுவரையில் நல்லிணக்க முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை என்பது தொடர்பில்தான் சிந்திக்க வேண்டும். கடந்த பன்னிரெண்டு வருட கால நல்லிணக்க முயற்சிகளால் நன்மையடைந்தவர்கள் எவரேனும் இருப்பார்கள் என்றால், ஒரு தரப்பினரை பற்றியே நாம் கூறமுடியும். அதாவது, நல்லிணக்கத்தை ஏற்படுத்தப் போவதாகக்கூறும் அரசு சாரா நிறுவனங்களில் பணிபுரிவோர் மட்டும்தான் நல்லிணக்க முயற்சிகளால் நன்மையடைந்திருக்கின்றனர்.

பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் கண்ணோட்டத்தில் சிந்திப்பதாயின், கடந்த பன்னிரெண்டு வருடகால நல்லிணக்க முயற்சிகள் முற்றிலுமாகத் தோல்விடைந்திருக்கின்றன. எனவே, அரசாங்கமும் நல்லிணக்க முயற்சிகளில் கரிசனை காண்பிக்கும் சிவில் சமூக குழுக்களும் உள்ளக பொறிமுறை ஏன் தோல்வியடைந்தது என்பது தொடர்பிலேயே தங்களுடைய கவனத்தை குவிக்க வேண்டும். இல்லாவிட்டால் நல்லிணக்க முயற்சிகள் என்னும் பெயரில் இடம்பெறும் செயல்பாடுகள் முன்னரைப்போல் தோல்வியிலேயே முடிவுறும்.

# முன்மொழியப்பட்ட ஊழலுக்கு எதிரான சட்டத்தில் முக்கிய திருத்தங்கள் தேவை

## ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நஷனல் வலியுறுத்து

*கொழும்பு, ஒக். 16*

*பல ஆண்டுகளாக கலந்துரையாடல் மட்டத்தில் மாத்திரம் காணப்பட்ட ஊழலுக்கு எதிரான மசோதாவினை முன்னிலைக்கு கொண்டுவருவதற்கான அரசாங்கத்தின் முயற்சியினை ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நஷனல் நிறுவனம் வரவேற்கிறது.*

*இந்த திருத்தம் ஏற்கனவே நடைமுறையிலுள்ள சட்டத்தினை மேம்படுத்த தேவைப்படும் பல பாராட்டத்தக்க சட்ட ஏற்பாடுகளை அல்லது விதிகளை கொண்டுள்ளது. எவ்வாறாயினும், பொதுமக்களின் கருத்துக்கள் இதுவரை இணைக்கப்படவில்லை என ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நஷனல் நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.*

*அதேபோல், ஓர் முக்கிய சட்டமாக முன்மொழியப்படும் குறித்த மசோதாவின் முக்கிய விபரங்கள் மற்றும் தாக்கங்கள் தொடர்பில் பொதுமக்களின் தலையீட்டுக்கு மிகக்குறைந்த சந்தர்ப்பம் வழங்கப்பட்டு, பாராளுமன்றத்திற்கு விரைந்து கொண்டு வரவுள்ளமை தொடர்பில் ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நஷனல் நிறுவனம் தீவிர கரிசனை கொள்கிறது.*

*முன்மொழியப்பட்ட ஊழலுக்கு எதிரான மசோதாவானது சட்டமா அதிபரின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்ட செய்தியைத் தொடர்ந்து, ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நஷனல் நிறுவனம் மற்றும் பலர் மிகக் குறுகிய கால பகுதிக்குள் குறித்த திருத்தம் தொடர்பிலான தமது கருத்துக்களை நீதி அமைச்சிடம் கையளித்துள்ளது. எவ்வாறாயினும், குறித்த திருத்தம் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படுவதற்கு முன்னர், முக்கிய கொள்கைகள் மற்றும் நடைமுறைத் தேர்வுகள் தொடர்பில் பொது மக்களின் கருத்துக்கள் ஏதேனும் பரிசீலிக்கப்படுகின்றதா என்பது தெளிவற்று காணப்படுகிறது. இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்புச் சட்டம், இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய முறைப்பாடுகளை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவை ஸ்தாபித்தல் சட்டம் மற்றும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பிரகடனச் சட்டம் போன்ற சட்டங்களின் பதிலீட்டு சட்டமாக இச்சட்டம் விளங்கவுள்ளது.*

*நாட்டில் நிலவுகின்ற ஊழல் சார்ந்த பிரச்னைகளை தொடர்பில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டியதன் அவசியம் தொடர்பில் அவதானம் செலுத்தப்படுகின்றதை பாராட்டும் அதேவேளை, தற்போதைய நிலையில் இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான விடயங்களை கையாள்வதற்கான சட்டங்கள் இலங்கையில் போதியளவு காணப்படுவதாக ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நஷனல் நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.*


*இந்த சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதானது குறைந்தளவிலே காணப்படுகிறது. தொழிநுட்பப் பிழைகள் மற்றும் சர்ச்சைக்குரிய மீளப் பெறுதல்கள் காரணமாக முக்கிய வழக்குகள் இடை நிறுத்தப்பட்டமையானது பாரியளவான ஊழல் வழக்குகளை விசாரிப்பது தொடர்பில் பல சந்தர்ப்பங்களில் சட்ட அமுலாக்க அதிகார சபைகள் வினைத்திறனற்றதாக நிரூபித்துள்ளது. இவை சட்ட அமுலாக்க அதிகார சபைகளின் சுதந்திரம் அல்லது சுயாதீனத் தன்மை மற்றும் நிபுணத்துவம் தொடர்பில் முக்கிய கரிசனைக்கு வழிவகுக்கின்றது.*

*தற்போது காணப்படுகின்ற ஊழலுக்கு எதிரான சட்டங்களை வினைத்திறனாகவும் சமமாகவும் செயல்படுத்த போராடும் இந்தப் பின்னணியில்தான் புதிய ஊழலுக்கு எதிரான சட்ட அமுலாக்கம் தொடர்பில் அரசாங்கத்தினால் முன்மொழியப்படுகிறது. முன்மொழியப்பட்ட ஊழலுக்கு எதிரான எந்தவொரு சுதந்திரமான அமைப்பினதும் சுதந்திரமானது, வரவிருக்கும் எந்தவொரு அரசியலமைப்புத் திருத்தமும் போதிய சுதந்திரத்தினை வழங்கினால் மட்டுமே அதிகார தலையீடுகளிலிருந்து சுயாதீனமாக இயங்க முடியும் என ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நஷனல் நிறுவனம் விசேடமாக குறிப்பிடுகின்றது.*

*சொத்து மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான பிரகடனங்கள் பொதுவெளியில் வெளியிடப்படுவதை கட்டாயமாக்குதல், முன்மொழியப்பட்ட ஆணைக்குழுவின் விசாரணை அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்வதைத் தடுக்க தேவையான நடவடிக்கைகளை எடுத்தல், ஆணைக்குழுவின் சுயாதீன தன்மை அல்லது சுதந்திரத்தை உறுதிப்படுத்தல், தண்டனைகளை அதிகரித்தல், தனியார் துறை சார்ந்த ஊழல்கள் தொடர்பில் திடம்பட செயற்படல் மற்றும் முன்மொழியப்பட்ட ஆணைக்குழுவானது ஏனைய சட்ட அமுலாக்க அதிகார சபைகளுடன் ஒருங்கிணைந்து செயற்படவும் மற்றும் அவர்களது விசாரணை முன்னேற்றங்கள் / செயற்பாடுகள் தொடர்பான தகவல்களை பொதுவெளியில் வெளியிடுவதத்திற்கும் அவர்களுக்கு உரிய சுதந்திரம் வழங்கப்படுவதனை உறுதி செய்தல் என்பன குறித்த மசோதா தொடர்பிலான ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நஷனல் நிறுவனத்தின் பரிந்துரைகளாகும்.*

*ஊழல் செயற்பாடுகளில் ஈடுபடும் நபர்களுக்கு எதிராக கூடிய தாக்கத்தினை ஏற்படுத்த தற்போதுள்ள சட்டத்தினை பயன்படுத்தி சட்ட அமுலாக்கத்திற்கு முன்னுரிமை அளிக்குமாறு ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நஷனல் நிறுவனம் அரசாங்கத்தை கேட்டுக்கொள்கிறது. முக்கியமான இந்த தருணத்தில், தொழில்நுட்ப அல்லது நடைமுறை ரீதியான குறைபாடுகளை தவிர்க்க மற்றும் பொதுவுடைமையை உறுதி செய்ய, முன்மொழியப்பட்ட ஊழலுக்கு எதிரான மசோதாவானது பாராளுமன்றத்தில் முன் வைக்கப்பட முன்னர் மசோதா தொடர்பிலான வெளிப்படையான பொது ஆலோசனை செயல்முறையை உறுதி செய்யுமாறு ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நஷனல் நிறுவனமானது அரசாங்கத்தை கேட்டுக் கொள்கிறது.* *(அ)*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



# நூலகம் பற்றிய ஒரு ஞாபகப் பகிர்வு

**கணபதி சர்வானந்தா**

**பகிர்வு -51**

**வா**சிப்பு மாதம் இது. அது தொடர்பாகப் பல நிகழ்சிகள் நடைபெறுகின்றன. குறிப்பாக முன்னெப்பொழும் இல்லாதவாறு பாடசாலைகள் இந்த மாதத்தைக் கொண்டாடுவதில் ஆர்வமாக இருப்பதைக் காணக் கூடியதாக இருக்கிறது.வாசிப்பு மாதம் என்றதனை அடிப்படையாகக் கொண்டு நூல் தொடர்பான பல்வேறு வகைப்பட்ட நிகழ்வுகளை பல நிறுவனங்கள் நடத்தி வருவது, சமூக பண்பாட்டுத் தளத்தில் புதிய தொரு மாற்றத்தைத் தோற்றுவிக்கக் கூடிய சூழ் நிலைகளை உருவாக்கக் கூடும் என்பது எனது கணிப்பு.

சுன்னாகம் நூலகத்தினால் 11.10.2022 அன்று அறிவார்ந்த சமூகத்தை வளப்படுத்தும் செயற்பாடாக நூல் கண்காட்சி ஒன்று இராமநாதன் கல்லூரியில் ஒழுங்குபடுத்தப் பட்டது. அதில் உசாத்துணை நூல்கள், பாட நூல்கள் , சிறுவர் நூல்கள்,நூல்களின் வடிவங்கள், சஞ்சிகைகள் எனப் பலவாறானவை காட்சிப்படுத்தப்பட்டன. அனைத்து மாணவர்களும் ஆர்வத்துடன் வாசித்தது மன நிறைவைத் தந்தது. அந் நிகழ்வில் பலர் கலந்து கொண்டனர் – எனச் சுன்னாகம் நூலகப் பொறுப்பதிகாரி குறிப்பிட்டுள்ளார். இது போன்று பல பாடசாலைகளில் பல முயற்சிகள் நடந்ததாக செய்திகள் உண்டு. அது தொடர்பான விடயங்களைப் படங்களுடன் பலர் தமது முகநூல் கணக்கிலே பதிவிட்டிருக்கின்றனர். பார்க்க மகிழ்ச்சியாக இருந்தது.

கடந்த காலங்களிலே வாசிப்புத் தொடர்பாக நடைபெற்ற விடயங்களைப் பற்றி அறிய ஆவலாக இருந்தது. அது தொடர்பாகத் தேடியபோது பல பழைய விடயங்கள் கண்ணில் தென்பட்டன. அவற்றுள் மனதைத் தொட்டவற்றை இத் தொடரில் பதிவிட வேண்டும், மற்றவர்களோடு பகிர வேண்டும் என்ற ஆர்வம் எனக்கு ஏற்பட்டது. இருந்தும் எல்லாவற்றையும் இணைப்பதென்பது முடியாத காரியம். இருந்தும் சில விடயங்களில் எம்மவர்தான் முன்னோடிகள் என்று கண்டபோது அவற்றைப் பகிராமல் இருக்க முடியவில்லை.

“குட்டி இலவச நூலகம்” (லிட்டில் ப்ஃரீ லைப்பரறி) என்ற முயற்சி வாசிப்பை ஊக்குவிப்பதற்காக 2009 ஆம் ஆண்டளவில் திரு.ரொட் போலொஃப் ஹட்சன் என்பவரால் தொடங்கப்பட்டது. அது இன்று மேற்கத்தைய நாடுகளில் பிரபலமானதொன்றாகக் காணப்படுகிறது. “வாசிப்பு தளத்தில் புதியதொரு பரிணாமத்தை ஏற்படுத்திய நிகழ்வு அது” என்று சொன்னால் மிகையாகாது. வீட்டு முற்றத்திலும், தெருக்கரை ஓரங்களிலும், பொது மகிழ்விடங்களிலும், சந்திகளிலும் எனப் பல இடங்களில் பெட்டிகள் அமைத்து குட்டி இலவச நூலகங்களை அமைத்திருக்கிறார்கள். வாசிப்பை நேசிப்பவர்கள் அதிலிருந்து நூல்களை எடுக்கலாம் அதே சமயம் தம்மிடமுள்ளவற்றை அதில் வைத்துப் பிறரை வாசிக்க ஊக்குவிக்கலாம்.

2009 ஆம் ஆண்டளவில் திரு.ரொட் போலொஃப் ஹட்சன் தொடங்குவதற்கு முன்னர், ஏறத்தாழ 1990 களில், யாழ்.மண்ணில் இத்தகையதொரு முயற்சியினை எழுத்தாளர் அருண்மொழிவர்மனின் பெரிய தந்தையார் திரு.சிவதாசன் அவர்கள் உருவாக்கிக் கொடுத்துள்ளார் என்பதை அறிகின்ற போது மனம் மகிழ்வெய்துகிறது. திரு.ரொட் போலொஃப் ஹட்சன் 2009 இல் சிந்தித்த விடயத்தை 1990 களில் எம்மவர் ஒருவர் சிந்தித்திருக்கிறார் என்றதையிட்டு என் மனம் பேருவகைகொள்கிறது.

அது பற்றி எழுத்தாளர் அருண் மொழிவர்மன் குறிப்பிடுகையில் “நானும் சகோதரர்களும் ஒரு வீட்டுநூலகத்தைக் கொண்டு நடத்த வேண்டும் என்பது பெரியப்பாவின் அவாவும் கனாவும். எமது வீட்டு நூலகத்திற்குக் குட்டி நூலகம்

(Little Library) என்ற பெயரையும் அவரே வைத்துத் தந்திருந்தார். அதன் பின்னர் என்னோடு, என் தம்பியர் இருவர் மற்றும் என் தங்கையின் பெயர்களை வைத்து அதற்கான ஒரு றப்பர் ஸ்ராம்பையும் உருவாக்கித் தந்திருந்தார். அவர் முதலில் இந்தப் பெயரை உருவாக்கும்போது எங்கள் தங்கை பிறக்கவில்லை. எனக்கு 9 வயதும் தம்பியருக்கு முறையே 6, 4 வயதுமாக இருந்தது. என்னுடைய பன்னிரண்டாவது வயதில் எனது வீட்டில் ஒரு நூலகத்தை நான் நடத்திவந்தேன். கிட்டத்தட்ட 25 – 30 பேர் வரை அதன் அங்கத்தவர்களாக இருந்து வாரத்துக்கு 1–3தடவைகள் வந்து புத்தங்களைப் பெற்று வாசித்தார்கள். என் பெற்றோரின் ஆதரவு அதற்கு உறுதுணையாக இருந்தாலும், அந்த எண்ணத்திற்கான வித்தாக இருந்தவர்கள் என் பெரியப்பாவும் பெரியம்மாவுமே.

எனது வாசிப்புப் பழக்கத்திற்கு உந்துதலாக இருந்தவர் எனது பெரியப்பா சிவதாசன் என்று பலமுறை பகர்ந்திருக்கின்றேன். எனது சிறுவயது முதல் அள்ளி அள்ளிப் புத்தகங்களை எமக்காக அவர் வாங்கி அனுப்பிக்கொண்டேயிருந்தார். அவர் கொழும்பில் இருந்து அனுப்புகின்ற இதழ்கள் அப்போது நவாலியில் இருந்த எமக்கு தபாலில் வரும். பெருந்தொகையாக வருகின்ற இதழ்களைச் சாக்குகளில் கொண்டுவந்து எங்கள் வீட்டிற்கு விநியோகம் செய்வார்கள். வீட்டில் அம்மாவும் நிறைய வாசிக்கின்றவராக இருந்ததுவும் அப்பா துறைசார்ந்து தேர்ந்து வாசிக்கின்றவராகவும் அதேநேரத்தில் வாசிப்புப் பழக்கத்தை ஆதரிக்கின்றவராகவும் இருந்தார் என்பதுவும் என் பேறுகள். என் பிறந்தநாள்களுக்கான பரிசுகளாக புத்தகக் கடைகளுக்கு அழைத்துச் சென்று விரும்பிய புத்தகங்களை வாங்கச் சொல்லிப் பரிசாக அளிப்பது என் அப்பாவின் வழக்கம். அதையே நான் இன்று பின்பற்றிக்கொள்வதோடு என் மகனுக்கும் மகளுக்கும் புத்தகங்களைப் பரிசாக வழங்குவது என்பதைத் தொடர்ந்து அதனைப் பிறருக்குப் பரிந்துரைத்தும் வருகின்றேன்.

வீட்டில் இருந்த, மீனாட்சிசுந்தரம்பிள்ளை எழுதிய மனோன்மணியம் நூலைத் தட்டிப் பார்த்தபோது அதில் என் பெரியப்பாவின் கையெழுத்தில் இருந்த எமது வீட்டு நூலகத்தின் விபரம் இது. சமூக மாற்றத்துகான கருவிகளில் ஒன்றாக வாசிப்பினை நான் கருதுவதற்கும், அதற்காக மூலோபாயங்களில் ஒன்றாக நூலகங்களை நான் கருதுவதற்குமான மூலம் என் பெரியப்பாவின் இந்த வீட்டு நூலகத்திட்டம் –.” என அவர் பதிவிட்டிருக்கிறார்.

# இந்தவார ராசிபலன் 16.10.2022 - 22.10.2022

**நல்ல நேரம்: 7.30 - 9.00** **ராகு காலம் : 04.30 - 06.00** **திதி : சப்தமி**

**ஒக்ரோபர் 16 ஞாயிற்றுக்கிழமை**
**சுபகிருது வருடம் - புரட்டாசி 29**

## மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

செயல்களில் கவனம் தேவை. அரசுவழியில் ஆதாயம் உண்டாகும். வருமானம் அதிகரிக்கும். நீண்டநாள் முயற்சி ஒன்றில் வெற்றி காண்பீர்கள். தொழிலில் லாபம், பணியில் நன்மை, குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். குடும்ப நலனில் அக்கறை அதிகரிக்கும்.சுறுசுறுப்பாக செயல்படுவீர்கள். எதிர்ப்பை தாண்டி நினைத்ததை சாதிப்பீர்கள். நீங்கள் எதிர்பார்த்த வருவாய் வந்து சேரும்.

## ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

விருப்பம் போல் செயல்படுவீர்கள். குடும்பத்தினர் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். உங்கள் முயற்சி எளிதாக நிறைவேறும். குடும்ப நலனில் அக்கறை அதிகரிக்கும். எதிரிகளால் ஏற்பட்ட சங்கடம் விலகும். சிலருக்கு புதிய வேலை வாய்ப்பு உண்டாகும். வீடு, மனை வாங்கும் முயற்சி பலிதமாகும். மனம் மகிழும்படியான நிலை உண்டாகும். தொழிலில் எதிர்பார்த்த ஆதாயம் உண்டாகும்.

## மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

செலவு அதிகரிக்கும். வெளியூர் பயணம் உண்டாகும். உங்கள் எண்ணம் போல் செயல்படுவீர்கள். வருமானம் அதிகரிக்கும். நினைத்ததை சாதிப்பீர்கள். செயல்களில் தெளிவும் பணியில் கவனமும் ஏற்படும். புதிய முயற்சி வேண்டாம். விருப்பம் நிறைவேறும். வியாபாரத்தில் லாபம் ஏற்படும். எதிர்பார்த்த தகவல் வந்து சேரும். வருமானத்தில் ஏற்பட்ட தடை விலகும். திட்டமிட்ட செயல்கள் நடந்தேறும்.குடும்ப நலனில் அக்கறை செலுத்துவீர்கள்.

## கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

உங்கள் எதிர்பார்ப்பை நிறைவேறும். பல வழியிலும் செலவுகள் ஏற்படும். வருமானம் அதிகரிக்கும். செயல் வெற்றியாகும்.கவனமாக செயல்பட்டு நன்மை அடைய வேண்டிய வாரம். மனம் மகிழும்படியான சம்பவங்கள் நடைபெறும். முயற்சிகளில் எதிர்பார்த்த ஆதாயம் காண்பீர்கள். சங்கடங்கள் உண்டாகும். புதிய பாதை தெரியும். திட்டமிட்டு செயல்படுவதால் நன்மை உண்டாகும்.

## சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

உங்கள் செல்வாக்கு உயரும். எதிர்பார்த்த வருமானம் வந்து சேரும், தொழில் உத்தியோகத்தில் மகிழ்ச்சியான நிலை ஏற்படும். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நன்மையாகும். விருப்பங்கள் நிறைவேறும். வீண் செலவுகள் உண்டாகும் என்பதால் கவனம் தேவை. துணிச்சலுடன் செயல்பட்டு உங்கள் வாழ்க்கைக்கு வேண்டியதை அடைவீர்கள்.

## கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

செயல்கள் வெற்றியாகும். அரசு வழியிலான முயற்சிகள் நன்மையாகும். தடைபட்டிருந்த வருவாய் வரத் தொடங்கும். புதிய முயற்சிகள் நன்மையாகும். வார்த்தைகளில் நிதானம் தேவை. எதிர்பாராத செலவுகளை சந்திப்பீர்கள். விருப்பங்கள் நிறைவேறும் வாரம் இது. முயற்சிகள் பலன் தரும். குடும்ப நலனில் அக்கறை அதிகரிக்கும். வராமல் இருந்த பணம் வந்து சேரும்.

## துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

புதிய முயற்சிகள் வேண்டாம். திருப்பங்கள் ஏற்படும். தடைபட்டிருந்த வேலைகள் நடைபெறத் தொடங்கும். திட்டமிட்டு செயல்பட்டு லாபம் காண்பீர்கள். சிந்தித்து செயல்படுவது நன்மையாகும். சங்கடங்கள் தோன்றும். உங்கள் உழைப்பிற்கேற்ற வெற்றியை அடைவீர்கள். வருமானத்தில் ஏற்பட்ட தடைகள் விலகும். வியாபாரத்தில் இருந்த தடைகள் விலகும். ஒரு சிலர் புதிய வேலையில் அமர்வீர்கள்.

## விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

விருப்பம் நிறைவேறும். நினைத்ததை நினைத்தபடி செய்து முடிப்பீர்கள். சங்கடம் அதிகரிக்கும்.நெருக்கடி விலகி நன்மை ஏற்படும்.செயல்கள் வெற்றியாகும். குடும்பத்திற்காக சில முயற்சிகள் மேற்கொள்வீர்கள். செயலில் குழப்பம் உண்டாகும். கொடுக்கல், வாங்கல் இழுபறியாகும். கவனமுடன் செயல்படுங்கள். விருப்பம் நிறைவேறும். நீண்டநாள் எண்ணம் நிறைவேறும்.

## தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

முயற்சிகள் நிறைவேறும். எதிர்ப்பு விலகும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். பொன் பொருள் சேரும். புதிய முயற்சிகளில் சங்கடம் தோன்றும். செயல்களில் இழுபறி உண்டாகும். திட்டமிட்டு செயல்படுவதால் நன்மை உண்டாகும்.வியாபாரம் அபிவிருத்தியாகும். செயலில் கவனம் தேவை. சுறுசுறுப்பாக செயல்பட்டு வெற்றி காண்பீர்கள். வருமானத்திற்குரிய வழிகள் உண்டாகும்.

## மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

முயற்சிக்கேற்ப நன்மை அடைவீர்கள். பூர்வீக சொத்து பிரச்னைகள் விலகும். எதிரி தொல்லை அகலும். அரசு வழியிலான முயற்சி பலிதமாகும்.முயற்சிகள் வெற்றியாகும் வாரம் இது. குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். தேவைக்கேற்ற வருமானம் வரும். வழக்கு உங்களுக்கு சாதகமாகும். செயலில் கவனம் தேவை. கோயில் வழிபாட்டில் மனம் செல்லும்.


## கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

எதிர்பார்ப்பு நிறைவேறும் வாரம் இது. எண்ணம் நிறைவேறும். புதிய முயற்சி வெற்றியாகும். சுறுசுறுப்புடன் செயல்பட்டு நினைத்தை நிறைவேற்றிக் கொள்வீர்கள். அரசு வழியிலான முயற்சியில் கூடுதல் கவனம் தேவை. குடும்பத்தினர் உதவியுடன் நினைத்ததை அடைவீர்கள். தடைபட்டிருந்த செயல்களை முடிப்பீர்கள். இருக்கும் இடத்தை விரிவு செய்வீர்கள்.

## மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]


துணிச்சலுடன் செயல்பட்டு தேவைகளை நிறைவேற்றிக் கொள்வீர்கள். பொன் பொருள் சேரும். முயற்சிக்கேற்ப பலன் உண்டாகும். திட்டமிட்டு செயல்படுவதில் ஆதாயம் அதிகரிக்கும். வருமானத்தில் இருந்த தடை அகலும். உங்கள் பிரச்னைகள் விலகும், எதிர்பார்த்த நன்மை அடைவீர்கள். பணியில் அதிகரிகளால் பாராட்டப்படுவீர்கள். பொருளாதார நிலை உயரும். முயற்சி நிறைவேறும் வாரம். எண்ணம் நிறைவேறும்.

# மாவோவின் சாதனையை விஞ்சும் சீன பெருந்தலைவர் ஷீ!



சென்னை மடல்
-பகவான் சிங்-

இனிமையான ஞாயிறன்று நாம் காலை தேனீர் அருந்திக் கொண்டு இந்த உரையாடலைத் தொடங்கும் பொழுது, 3,205 மைல் தூரத்தில் பீஜிங்கில் மாமன்னர் ஷீ ஜின்பிங் மூன்றாம் முறை தன் முடிசூட்டு விழாவைத் தொடங்கிவைத்துப் பெருமையுடன் மகிழ்ந்து கொண்டிருப்பார். எந்த எதிர்ப்பும் எதிரியும் இல்லா ஆளும் சீன கம்யூனிஸ்ட் கட்சியின், ஐந்தாண்டுக்கு ஒருமுறை நடத்தப்படும் பிரம்மாண்டமான காங்கிரஸ் மாநாட்டில், இந்த சகாப்தத்தை உருவாக்கும் நிகழ்வு நடக்கும். இது, சீன கம்யூனிஸ்ட் கட்சியின் இருபதாவது காங்கிரஸ் மாநாடு. பொதுவாக இந்தக் கூட்டம் ஒரு வாரம் நடக்கும், அதாவது, 23ஆம் தேதியன்று ஷீயின் முடிதரிப்புடன் முடிவுக்கு வரலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



பல தலைமுறைகளாக வெளியுலகிற்கு ஒரு மர்மமாகவே இருந்து வருகிறது சீனா. உலகின் மிகப் பெரிய மக்கள் தொகை (ஒக்ரோபர் 13, வியாழனன்று ஐ. நா. தரவின் படி, 1,451, 962,678) கொண்ட, மிகப்பெரிய கம்யூனிஸ்ட் நாடான சீனாவில் ஷீ இரண்டாவது முறை பதவியேற்றதிலிருந்து, கடந்த ஐந்தாண்டுகளாக இந்த மர்மம் சற்று ஆழமாகவே இருந்து வருகிறது.

2012இல் முதல் முறையாகப் பதவியேற்ற அவர், தனது கனவுத் திட்டமான ஊழல் ஒழிப்பு என்னும் போர்வையில் தனக்குப் போட்டியாகக் கூடிய அனைவரையும் ஒழித்து, கட்சி, அரசு மற்றும் இராணுவம் ஆகிய மூன்றின் மீதும் வலுவான பிடியை உறுதி செய்யத் தொடங்கினார். எனது 'ஈழநாடு' கட்டுரைகளில் நான் பல முறை குறிப்பிட்டுள்ளதுபோல், நாட்டின் அதிபர், சீன கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர், பீபிள்ஸ் லிபரேஷன் ஆர்மி (பி எல் ஏ) என்ற பெயர் கொண்ட சீன இராணுவத்தின் தலைவர் என்ற மூன்று மகுடங்களையும் சூட்டியுள்ள, 69 வயதான ஷீயைப்போல செல்வாக்கு மிக்க தலைவர் உலகில் வேறெங்கும் இல்லை. கட்சி மற்றும் இராணுவத்தின் மூன்றாவது தலைமைப் பதவிக் காலம் இப்போது தொடங்கவுள்ள நிலையில், சீன கம்யூனிஸ்ட் கட்சியின் 'தேசிய மக்கள் காங்கிரஸா'ல் வரும் ஆண்டு மார்ச் மாதம் சீன அதிபராகவும் அவர் அதிகாரபூர்வமாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்.

## சீனாவின் வாழ்நாள் தலைவர்?

கட்சி செயல்படும் விதத்தை எதிர்த்தும், அதிக ஜனநாயக நடைமுறை வேண்டியும் ஜூன் 4, 1989இல் நடத்தப்பட்ட போராட்டத்தில், ஆயிரக்கணக்கான மக்கள், குறிப்பாக மாணவர்கள், இராணுவத்தால் கொல்லப்பட்ட பீஜிங்கின் தியானென்மென் சதுக்கத்தில் நடைபெறவுள்ள கட்சியின் 20ஆவது மாநாடு சுமுகமாக நிறைவடைய வழிசெய்யும் நோக்கில், 31 மாகாணாங்களிலிருந்தும் கலந்து கொள்ளவிருக்கும் 2300 பிரமுகர்களையும் ஷீ ஜின்பிங் சுயமாகத் தேர்வு செய்துள்ளார். அநேகமாகத் திரைமறைவில், அவர் திட்டமிட்டபடியே நடைபெறும் இந்த மாநாட்டில், கட்சியின் மையக் குழு உறுப்பினர்கள் 200 பேர் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இந்த 200 பேர், 25 உறுப்பினர் கொண்ட கட்சியின் பொலிட்ப்யூரோவையும், சர்வவல்லமை பொருந்திய நிலைக்குழுவையும் நிர்ணயிப்பார்கள். இந்த நிலைக்குழு, நாட்டின் உச்சபட்சத் தலைமை அமைப்பாகும். உண்மையில், மொத்த அதிகாரமும் ஷீயின் கையில் தான். மையக்குழு, பொலிட்ப்யூரோ, நிலைக்குழு உறுப்பினர்கள் ஏற்கெனவே தேர்ந்தெடுக்கப்பட்டுவிட் டனர் என்றும், இவர்களில் யாரும் 21ஆவது மாநாட்டில் ஷீ-க்குப் போட்டியாக உருவெடுக்கமாட்டார்கள் என்பதும் இதில் உறுதிசெய்யப்பட்டுள்ளது என்றும் கூறப்படுகிறது.

மாநாட்டின் தொடக்க நாளில், கட்சிக்கும் நாட்டுக்குமான, கடந்த ஐந்தாண்டுகளின் மதிப்பீட்டையும் அடுத்த ஐந்தாண்டுக்கான திட்டத்தையும் விவரித்து ஷீ உரையாற்றவுள்ளார். 2017,ல் நடந்த கடந்த மாநாட்டில், "உலக நாடுகளுடன் இணக்கமான உறவு மற்றும் சீன அம்சங்களுடனான சோஷியலிஸத்தின் புதிய சகாப்தம் உருவாக்கப்படும்" என்று ஷீ உறுதியளித்திருந்தார். "வெளிப்படைத் தன்மை முன்னேற்றத்தை அளிக்கும், தனிமைப் படுத்திக்கொள்வது பின்னடைவைத் தரும்" என்று கூறிய அவர், மேலும், "சீனா உலகிற்குத் தன் கதவுகளை மூடாது. நாம் இன்னும் வெளிப்படையாக இருப்போம்" என்றும் கூறியிருந்தார். ஆனால், கடந்த ஐந்தாண்டுகளில் சீனாவை அவர் இதற்கு நேர் எதிர்ப் பாதையில்தான் இட்டுச் சென்றுள்ளார்.



அமெரிக்காவுடனான சீனாவின் உறவு மிகவும் மோசமடைந்துள்ளது. இவ்வாண்டு பெப்ரவரி மாதத் தொடக்கத்தில் அமெரிக்க நாடாளுமன்றத்தின் சபாநாயகர் நான்ஸி பெலோசியின் தைவான் பயணமும், அதைத் தொடர்ந்து தைவான் எல்லையில் சீனாவின் இராணுவ கெடுபிடியும் நினைவிருக்கிறதா? தைவான் தனது நாட்டின் ஒருங்கிணைந்த பகுதிதான் என்றும் தேவைப்பட்டால், சுயாட்சித் தீவான தைவானை இராணுவ நடவடிக்கைமூலம் கைப்பற்றுவோம் எனவும் சீனா கூறிவருகிறது.



மாவோ சேதுங்

## அதிகரிக்கும் இலங்கைமீதான ஆதிக்கமும் தலையீடும்?

அமெரிக்காவும் மற்ற ஜனநாயக நாடுகளும் தைவான் மீதான சீன ஆதிக்கத்தை எதிர்க்கின்றன. இந்தியா, அவுஸ்திரேலியா, கனடா மற்றும் ஜப்பானுடனும் கூடத் தனது உறவுகளைக் கசப்பாக்கிக் கொண்டுள்ளது சீனா. பாகிஸ்தான் போன்ற சிறு நாடுகளைத் தவிர, சீனாவுக்கு இருக்கும் முக்கிய பெரிய நண்பர் ரஷ்ய அதிபர் புட்டின் மட்டுமே.

உள்நாட்டிலும்கூட, ஷீயின் இரண்டாவது பதவிக்காலத்தில் சீனா பின்னடைவைச் சந்தித்தது. பொருளாதாரம் சீர் கெட்டுள்ளது, ஏற்றுமதிகள் குறைந்துள்ளன, வேலையில்லாத் திண்டாட்டம் பெருகிவருகிறது. தவிர, ஷீயின் 'ஜீரோ கோவிட்' கொள்கையால் ஏற்பட்ட பொது முடக்கங்களால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டு, அவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது. உலக ஊடகங்களும் மனித உரிமை அமைப்புகளும் வெளிநாட்டு அரசாங்கங்களும் சீன அரசு மற்றும் இராணுவத்தின் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் குறித்துக் கவலை தெரிவித்துள்ளன. இருந்தும்கூட, மூன்றாவது முறையாக ஷீ முடிசூட்டிக்கொள்ளப்போவதை இவை யாவும் தடுக்கப் போவதில்லை. தன் வாழ்நாள் முழுவதும் அவரே சீனாவின் அதிபராக இருப்பார் என்று சீனாவிலிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

1949 ஒக்ரோபர் 1 தொடங்கி 27 ஆண்டுகள் சீனாவை ஆண்ட மாவோ மட்டுமே இதற்கு முன் இப்படி ஒரு முழுமையான கட்டுப்பாட்டில் நாட்டை நடத்தும் அதிகாரத்தை அனுபவித்திருந்தார். 82 வயதில் உயிரிழக்கும் வரை அதிபராக இருந்த தலைவர் மாவோவின் சாதனையைத் தான் விஞ்ச, ஷீ நினைத்திருக்கலாம். ஆனால், ஷீக்கும் அவரது விரிவாக்கவாதத்துக்கும் எதிராக அநேக ஜனநாயக நாடுகள் ஒன்று கூடுவதும், உள்நாட்டில் மக்களின் சிறு குழுக்கள், குறிப்பாக இளைய சமுதாயத்தினர், பொதுமுடக்கங்களாலும் பொருளாதாரச் சரிவாலும் அதிருப்தியடைந்து வருவதும் இவரது கனவுக்கு மிகப் பெரிய சவால்களாக இருக்கலாம்.

கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய காங்கிரஸில் தனது மூன்றாவது பதவிக் காலத்தைப் பொறுப்பேற்கவிருக் கும் நிலையில், ஷீக்கும் அவரது கொள்கைகளுக்கும் எதிரான ஓர் 'அரிய போராட்டம்' வியாழனன்று (ஒக்ரோ பர் 13) நடத்தப்பட்டதும், அது உடனடியாக ஒடுக்கப்பட்டதும் சிஎன்என் போன்ற சர்வதேச ஊடகங்களில் வெளியாயின. ஹைதியான் மாவட்டத் தில், பீஜிங்கின் மூன்றாவது ரிங் ரோடில் உள்ள சிதாங்க் பாலத்தில் தொங்கிய இரண்டு பனர்களின் படங்கள் ட்விட்டரில் வெளியாயின. அவற்றில் ஒன்றில், "கோவிட் டெஸ்ட் வேண்டாம், உணவு வேண்டும், முடக்கம் வேண்டாம், சுதந்திரம் வேண்டும், பொய்கள் வேண்டாம், கண்ணியம் வேண்டும், கலாசாரப் புரட்சி வேண்டாம், சீர்திருத்தம் வேண்டும், பெரிய தலைவர் வேண்டாம், வாக்குரிமை வேண்டும், அடிமை வாழ்வு வேண் டாம், குடிமகனாக வேண்டும்" என்றும், மற்றொன்றில், "வேலை நிறுத்தம் செய்து சர்வாதிகாரியும் தேசத் துரோகி யுமான ஷீ ஜின்பிங்கை அகற்றுங்கள்" என்றும் எழுதப்பட்டிருந்தன. ஆனால், சில மணி நேரங்களுக்குள் அந்த பனர்கள் அகற்றப்பட்டு, அந்தப் பாலத்திற்கு அருகில் ஏராளமான இராணுவப் படையினர் குவிக்கப்பட்டனர். எனினும், இந்த அனைத்துச் சவால்களையும் மீறி, ஷீ ஒரு மாபெரும் வலுவான தலைவராக உருவெடுத்து, மாவோவின் சாதனையை விஞ்சுவார் என்று சீன விவகாரங்கள் குறித்த நிபுணர்கள் கணிக்கிறார்கள்.

ஷீ குறித்தும் சிபிசி காங்கிரஸ் குறித்தும் நான் விவரமாக உரையாட நினைத்ததற்கு இரண்டு காரணங்கள். முதல் காரணம், சீனாவிடமிருந்து நாம் கற்றுக்கொள்ளவேண்டிய பாடங்கள் பல உள்ளன. இரு நாடுகளுக்கும் இடையில் பல ஒற்றுமைகள் உள்ளன. உதாரணமாக, ராஜபக்ஷ குடும்பத்தின் சர்வாதிகார ஆட்சியில், உணவு உட்பட்ட அத்தியாவசியப் பொருட்கள் தட்டுப்பாடு, ஜனநாயகப் படுகொலை ஆகியவற்றுக்கு எதிரான பல போராட்டங்கள் ஒடுக்கப்பட்டன. ரணில் விக்கிரமசிங்க, ராஜபக்ஷ குடும்பத்தின் கைப்பாவை என்று அங்குமிங்கும் பலர் கூறிவருகின்றனர். (18ஆம் பக்கம் பார்க்க)

# போராட்டங்களுக்கு கொண்டுவரப்படும் குழந்தைகளும் சத்துணவின்றி வாடும் சிறுவர்களும்



♦ வீரகத்தி தனபாலசிங்கம்

மக்கள் போராட்டங்கள் நவீன வாழ்வின் ஒரு கசப்பான உண்மை. அதை மாற்றமுடியாததால் ஏற்றுக்கொள்ளவேண்டியிருக்கிறது. உள்நாட்டிலும் உலகளாவிய மட்டத்திலும் தினமும் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறாத நாட்களே இல்லை எனலாம்.

இலத்திரனியல் ஊடகங்களில் 24 மணி நேரமும் செய்திச் சக்கரம் என்றாகிவிட்ட நிலையிலும் மிகுதியாக வழக்கத்துக்கு வந்துவிட்ட சமூக ஊடகங்களின் விளைவாகவும் இன்றைய சிறுவர்கள் உலகெங்கும் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறுவதை நன்கு அறிவார்கள். அவற்றில் இடம்பெறக்கூடிய வன்முறைகள் அவர்களை பரவசத்தில் ஆழ்த்திவிடக்கூடும் அல்லது திகைப்பில் மூழ்கடித்துவிடக்கூடும்.

சிறுவர்களும் வளர் இளம் பருவத்தவர்களும் ஆர்ப்பாட்டங்களில் அல்லது பேரணிகளில் பங்கேற்பது ஒன்றும் உலகில் இனிமேலும் புதினத்துக்குரியதல்ல. மேற்கு நாடுகளில் சமூகத்தைப் பாதிக்கின்ற பல்வேறு பிரச்சினைகளுக்கு அரசாங்கங்களிடம் தீர்வுகளை வேண்டி நடைபெறுகின்ற ஆர்ப்பாட்டங்களில் சிறுவர்களையும் காண்கிறோம். குறிப்பாக காலநிலை மாற்றத்தினால் சுற்றாடலுக்கு ஏற்படுகின்ற பாதிப்பை கட்டுப்படுத்தக்கோரி ஏற்பாடு செய்யப்படுகின்ற கவனயீர்ப்பு போராட்டங்களில் சிறுவர்கள் ஆர்வத்துடன் பங்கேற்கிறார்கள்.

அமெரிக்காவில் கறுப்பினத்தவர்களுக்கு எதிரான நிறவெறி தாக்குதல்களை கண்டித்து நடைபெறும் ஆர்ப்பாட்டங்களில் கறுப்பின சிறுவர்கள் மாத்திரமல்ல வெள்ளையின சிறுவர்களும் கூட பங்கேற்கிறார்கள்.

தங்கள் சமூகத்தை பாதிக்கின்ற பிரச்சினைகள் பற்றிய பிரக்ஞையைக் கொண்டிருக்கக்கூடிய வயதுடைய சிறுவர்கள் இந்த ஆர்ப்பாட்டங்களில் பங்கேற்பது உலகளாவிய மட்டத்தில் வழக்கமானதாகி விட்டபோதிலும், அது நியதி ஆகிவிடாது. சிறுவர்களுக்கென்று இருக்கின்ற உரிமைகள், அவர்களின் பாதுகாப்புடன் தொடர்புடைய பிரச்சினைகள் மற்றும் கோரமான வன்முறைச் சம்பவங்களுக்கு அவர்களை அம்பலப்படுத்துவதனால் ஏற்படக் கூடிய உணர்வதிர்ச்சிக் கோளாறுகள் தொடர்பில் அக்கறை கொண்ட அமைப்புக்களும் ஆர்வலர்களும் சிறுவர்கள் ஆர்ப்பாட்டங்களில் பங்கேற்பதன் பாதக விளைவுகள் பற்றி இடையறாது எச்சரிக்கை செய்த வண்ணமே இருக்கிறார்கள்.

இவ்வருடம் மார்ச் இறுதிப்பகுதியில் தொடங்கி ஜூலை நடுப்பகுதிவரை கொழும்பு காலி முகத்திடலில் இடம்பெற்ற அமைதி வழி “அறகலய” மக்கள் கிளர்ச்சியின்போது ஆயிரக்கணக்கில் மக்கள் இரவு பகலாக பங்கேற்றனர். அவர்களில் பெருமளவானோர் தங்கள் சிறுவர்களையும் ஏன் கைக்குழந்தைகளையும் கூட போராட்டக்களத்துக்கு கொண்டுவந்தனர்.

பெற்றோர்கள் தாங்கள் ஏந்தியதைப் போன்ற அரசாங்கத்துக்கு எதிரான சுலோக அட்டைகளை அந்த சிறுவர்களின் கைகளிலும் கொடுத்தனர். இடுப்பில் குழந்தைகளைச் சுமந்த வண்ணம் போராட்டத்தில் கலந்து கொள்வது தங்களுக்கு இடர்பாடுகளைக் கொண்டுவந்த ஆட்சியாளர்களை அதிகாரத்தில் இருந்து விரட்டும் இலட்சியத்துக்கு ஒருமைப்பாட்டை வெளிப்படுத்தும் ஒரு பிரத்தியேகமான செயற்பாடு என்று அவர்கள் நினைத்தார்கள் போலும்.




> “எமது சிறுவர்கள் என்ற பாறையின் மீதே எமது எதிர்காலம் கட்டியெழுப்பப்படும். அவர்களே எமது தேசத்தின் மகத்தான சொத்து. எமது தேசிய செல்வத்தை உருவாக்குபவர்களும் அவர்களே. சிறுவர்களை எவ்வாறு ஒரு சமூகம் நடத்துகிறது என்பதைப் பொறுத்தே அதன் உண்மையான பண்பு மதிப்பிடப்படுகிறது.”
>
> **- நெல்சன் மண்டேலா**

காலி முகத்திடல் போராட்டத்துக்கு ஆதரவாக கொழும்பில் வேறு ஒரு பகுதியில் நடைபெற்ற வீதிப் போராட்டத்தில் ஒரு பெண்மணி பிறந்து ஏழு நாட்களையான சிசுவுடன் கலந்து கொண்டதையும் அவரை அங்கிருந்து போகுமாறு ஆர்வலர்கள் கேட்டதையும் சமூக ஊடகங் களில் பரவலாக அந்த நாட்களில் காணக்கூடியதாக இருந்தது. காலி முகத்திடலில் ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக தங்கள் செல்லப் பிராணிகளான நாய்களுடன் வந்த பலர் அவற்றின் கழுத்திலும் “ கோட்டா வீட்டுக்கு போ” என்ற சுலோக அட்டையை தொங்கவிட்ட காட்சிகளையும் பல நாட்கள் காணக்கூடியதாக இருந்தது.

அமைதிவழியில் அந்த போராட்டம் நடைபெற்றவரை தங்கள் பிள்ளைகளுடன் போராட்டத்தில் கலந்து கொண்டு ஒருமைப்பாட்டை வெளிக்காட்டியதில் பெற்றோர் எந்த ஆபத்தையும் உணரவில்லை. வேறு பலரைப் பொறுத்தவரை, வழமையான காலிமுகத்திடல் அனுபவத்தையும் விட வித்தியாசமான “பின்னணி அமைவில்” ஒரு கேளிக்கையாகவும் அதை உணர்ந்தார்கள்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் மக்கள் கிளர்ச்சியில் பங்கேற்றவர்களுக்கு எதிராக கடந்த சுமார் மூன்று மாதங்களாக தொடர்ந்து முன்னெடுத்து வருகின்ற அடக்கு முறைக்கு மத்தியில் கொந்தளிப்பு நிலை அடங்கிப் போயிருந்தாலும் ஆங்காங்கே ஆர்ப்பாட்டங்கள் -- முன்னரைப் போன்று பெருமளவில் மக்கள் பங்கேற்காவிட்டாலும்கூட -- இடம் பெறவே செய்கின்றன.




இத்தகைய பின்புலத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (அக்.9) காலி முகத்திடலில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் கைக்குழந்தைகளுடன் வந்து கலந்து கொண்டவர்கள் குறித்து பெரும் சர்ச்சை கிளம்பியிருக்கிறது. அந்த ஆர்ப்பாட்டமும் வாழ்க்கைச் செலவு உயர்வுக்கு எதிராகவும் “அறகலய” போராட்டக் காரர்களுக்கு எதிராக அரசாங்கம் கட்டவிழ்த்துவிட்டிருக்கும் அடக்குமுறையை கண்டிக் கவுமே நடத்தப்பட்டது.

அமைதிவழி போராட்டமாக இருந்தாலும் தங்களிடம் முன் அனுமதி பெறப்படவில்லை என்பதை காரணமாகக் கூறிக்கொண்டு பொலிசார் ஆர்பாட்டக்காரர்களைக் கலைக்கும் நடவடிக்கையில் இறங்கியபோது அவர்களில் பலர் கைக்குழந்தைகளை தலைக்குமேல் உயர்த்திப்பிடித்த வண்ணம் பொலிசாரை எதிர்கொண்டனர். குழந்தைகள் அந்த காட்சிகளைக் கண்டு கதறி அழுதன. தங்களைச் சுற்றி என்ன நடக்கிறது என்பதை அறியாத அந்த வயதுக் குழந்தைகளை போராட்டக் களத்துக்கு பெற்றோர் கொண்டுவந்த செயல் பரவலான கண்டனத்துக்குள்ளாகியிருக்கிறது.

பொலிசாருக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையில் மூளக்கூடிய மோதல்களில் அந்த சின்னஞ்சிறுசுகள் பாதிக்கப்படக்கூடிய ஆபத்து நிச்சயமாக இருக்கிறது. போராட்டங்களுக்கு எதிராக பொலிசாரும் பாதுகாப்பு படையினரும் படைபலத்தை பிரயோகிப்பதை தடுக்கும் ஒரு தந்திரோபாயமாக போராட்டங்களில் பங்கேற்பவர்களை குழந்தைகளுடன் வருமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்பதாக கூட செய்திகள் வெளியாகின. அவை உண்மையானால், பால்மணம் மாறாத குழந்தைகளை “மனிதக் கேடயங்களாக” பயன்படுத்தும் இந்த பொறுப்பற்ற செயல் நிச்சயம் கண்டனத்துக்குரியது. தவிர்க்கப்படவும் வேண்டும்.

“அறகலய” காலத்தைப் போலன்றி தற்போது பொலிசாரும் பாதுகாப்பு படையினரும் எந்தவொரு மக்கள் போராட்டத்துக்கும் எதிராக எடுத்த எடுப்பிலேயே படைபலத்தை பிரயோகிக்கிறார்கள். அதனால் குழந்தைகளை போராட்டங்களுக்கு கொண்டுவரும் வழக்கத்தை மக்கள் தவிர்க்கவேண்டும்.

“அறகலய“ போராட்ட காலத்தில் காலிமுகத்திடலுக்கு பெருமளவானோர் தங்கள் பிள்ளைகளுடன் வந்ததை அவதானித்த தேசிய சிறுவர்கள் பாதுகாப்பு அதிகாரசபை அவ்வாறு செய்வதை தவிர்க்குமாறு பெற்றோரையும் பாதுகாவலர்களையும் வலியுறுத்திக் கேட்டுக்கொண்டது.

இப்போது கடந்தவாரம் அதே காலி முகத்திடலில் இடம்பெற்ற சம்பவத்தை அடுத்தும் அதிகாரசபை இத்தகைய போராட்டங் களுக்கு சிறுவர்களையும் குழந்தைகளை யும் கூட்டிவந்து அவர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தவேண்டாம் என்று கேட்டிருக்கிறது.

ஜனாதிபதி விக்கிரமசிங்கவும் ஆர்ப்பாட்டங்களில் சிறுவர்களை கேடயங்களாக பயன்படுத்துவது பாரதூரமான குற்றச்செயல் என்று கூறி அத்தகைய நடத்தைகளுக்கு எதிராக உடனடியாக கடும் நடவடிக்கை எடுக்குமாறு பொலிசாருக்கு உத்தரவிட்டிருக்கிறார்.

ஜனாதிபதி செயலகத்தில் புத னன்று இடம் பெற்ற சிறுவர்கள் பாதுகாப்பு தொடர்பான விசேட கலந்துரையாடலின்போது, “சிறுவர்களினதும் இளைஞர்களினதும் உடல், உள, தார்மீக மற்றும் சமூக அபிவிருத்தியை உறுதிசெய்வதற்காகவும் அவர்களை சுரண்டல், பாரபட்சங்களில் இருந்து பாது காப்பதற்காகவும் அவர்களின் நலன்களில் விசேட அக்கறை செலுத்தவேண்டியது அரசின் கடமை” என்று அரசியலமைப்பில் இருக்கும் ஏற்பாட்டையும் சுட்டிக் காட்டினார்.

(09 ஆம் பக்கம் பார்க்க...)

# எரிக் சொல்ஹெய்ம்: ஜனாதிபதி ரணிலின் காலநிலை ஆலோசகர் ஆனது எப்படி?

இலங்கைக்கான நோர்வேயின் முன்னாள் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் “சர்வதேச காலநிலை ஆலோசகர்” என்ற ஒரு புதிய பாத்திரத்தை ஏற்றுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், இலங்கை அரசாங்கத்திற்கும் இடையில் யுத்தம் இடம்பெற்ற காலத்தில் சமாதான தூதுவராக செயற்பட்டவரே, நோர்வேயைச் சேர்ந்த எரிக் சொல்ஹெய்ம்.

ஒரு காலத்தில், அதாவது இலங்கையில் விடுதலைப்புலிகளுக்கு எதிராக இலங்கை ராணுவம் தீவிர யுத்தம் நடத்திய காலத்தில் எரிக் சொல்ஹெய்ம் இலங் கைக்கு விஜயம் செய்தால், அது அப்போதைய பத்திரிகைகளில் முதல் பக்க செய்தியாக இடம்பெற்றிருக்கும்.

அவரது விஜயமானது, அந்த காலப் பகுதியில் விசேடமானதாக அமைவதுடன், அவரது விஜயத்தில் இலங்கை அரசாங்கத்தின் உயர்மட்ட பிரதானிகள் மாத்திரமன்றி, வடக்கில் நிலைக்கொண்டிருந்த தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர்களையும் சந்தித்து கலந்துரையாடல்களை நடத்தியிருந்தார்.

சமாதான பேச்சுவார்த்தை தோல்வி அடைந்து, ஆயுதம் யுத்தம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு, அந்த யுத்தம் முடிவடைந்து தசாப்த காலம் கடந்துள்ள நிலையில், எரிக் சொல்ஹெய்ம் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டார். இந்த நிலையில், எரிக் சொல்ஹெய்ம் இம்முறை இலங்கைக்கு விஜயம் செய்த காரணம் கேள்விக்குரியதாக இருந்த நிலையில், இந்த அறிவிப்பு வந்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் சர்வதேச காலநிலை ஆலோசகராக எரிக் சொல்ஹெய்ம் நியமிக்கப்பட்டுள்ளார்.

மாலைத்தீவின் முன்னாள் ஜனாதிபதி மொஹமட் நஷிட்டுடன் தானும் ஆலோசகராக நியமிக்கப்பட்டமை குறித்து, தான் பெருமிதம் கொள்வதாக எரிக் சொல்ஹெய்ம் டுவிட்டர் பதிவொன்றின் ஊடாக தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு கடந்த 10ம் திகதி வருகை தந்த எரிக் சொல்ஹெய்ம், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை ஒக்டோபர் 11ம் திகதி சந்தித்து கலந்துரையாடல்களை நடத்தியிருந்தார்.



பசுமை பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் இலங்கையின் காலநிலை தொடர்பிலான தலைமைத்துவத்திற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு விசேட தொலைநோக்கு உள்ளதாக எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

2022ம் ஆண்டுக்கான ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்றத்திற்கான மாநாடு இந்த ஆண்டு எகிப்தின் ஷர்ம் எல் ஷேக்கில் நடைபெறுகின்றது.

2022ம் ஆண்டு நவம்பர் மாதம் 6ம் திகதி முதல் 18ம் திகதி வரை ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்றம் தொடர்பில் மாநாட்டில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுடன், இந்த ஆலோசகர்களும் கலந்துக்கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.




**சமாதான தூதுவர் எரிக் சொல்ஹெய்ம்**

நான்காவது ஈழப் போர் ஆரம்பிப்பதற்கு முன்னர், இலங்கையின் சிவில் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்கு அவர் பாரிய பிரயத்தனங்களை மேற் கொண்டார்.

1998ம் ஆண்டு முதல் 2006ம் ஆண்டு வரையான காலம் வரை, இலங்கை அரசாங்கத்திற்கும், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிற்கும் இடையில் சமாதான தூதுவராக எரிக் சொல்ஹெய்ம் செயற்பட்டதுடன், அவர் மிக அனுபவமுன்ன சமாதான தூதுவராவார்.

இலங்கையில் இடம்பெற்றதாக கூறப்படும் யுத்தக் குற்றங்கள் தொடர்பிலான விசாரணைகளை நடத்தும் எந்தவொரு சர்வதேச நீதிபதிகள் குழாம் முன்னிலையிலும் சாட்சி வழங்க தயார் என எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்திருந்தார்.

இலங்கை அரசாங்கத்திற்கும், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிற்கும் இடையில் சமாதான பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்ட காலப் பகுதியில், விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு நிதி வழங்கியதாக, அவர் மீது, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ, 2014ம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலை இலக்காக கொண்டு நடத்தப்பட்ட தேர்தல் பிரசார கூட்டத்தில் குற்றம் சுமத்தியிருந்ததுடன், அந்த குற்றச்சாட்டு போலியானது என நோர்வேயின் இலங்கைக்கான சமாதான தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் அப்போது கூறியிருந்தார். நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலை இலக்காக கொண்டு, மஹிந்த ராஜபக்ஷ தன் மீது போலி குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதாகவும் எரிக் சொல்ஹெய்ம் குறிப்பிட்டிருந்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை தோற்கடிக்க முடியாது என எரிக் தன்னிடம் கூறியதாகவும், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அந்த கூட்டத்தில் கூறியிருந்தார்.

சமாதான உடன்படிக்கையின் பிரகாரம், யுத்த நிறுத்தம் இடம்பெற்று, 2002ம் ஆண்டு அது ஒஸ்லோ பிரகடனத்திற்கு வழிவகுத்ததுடன், சமஷ்டி முறைக்கு இலங்கையின் உரிய தரப்பினர் இணக்கம் வெளியிட்டனர்.

அவர் அமைச்சராக இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு தொடர்ந்தும் தலைமைத்துவம் வழங்கியதுடன், சூடான், நேபாளம், மியன்மார் மற்றும் புருண்டி ஆகிய நாடுகளும் சமாதான பேச்சுவார்த்தைக்கு பங்களிப்பு வழங்கியிருந்தன.

எரிக் சொல்ஹெய்ம் உள்ளிட்ட நோர்வே தரப்பினர், சமாதான பேச்சுவார்த்தைக்கு தலையீடு செய்தமை, அந்த காலப் பகுதியில் பாரிய விமர்சனங்களை ஏற்படுத்தியிருந்தன.

இந்நிலையில் எரிக் சொல்ஹெய்ம் மற்றும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ ஆகியோருக்கு இடையிலும் சந்திப்பொன்று இடம்பெற்றது.

# போராட்டங்களுக்கு கொண்டுவரப்படும்...

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

அரசாங்கத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டக்காரர்கள் சிறுவர்களையும் குழந்தைகளையும் கூட்டிக் கொண்டு வந்த சம்பவங்களை அடுத்து இந்த உத்தரவை பொலிசாருக்கு பிறப்பித்திருக்கும் ஜனாதிபதி அதே சிறுவர்கள் இன்றைய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் சத்துணவுப் பற்றாக்குறையால் மோசமாக பாதிப்புக் குள்ளாகியிருக்கிறார்கள் என்பதை உணர்ந்து அந்த அவலநிலையில் இருந்து அவர்களை மீட்கவும் துரிதமான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

இலங்கையில் சிறுவர்கள் மத்தியில் சத்துணவு பற்றாக்குறை தொடர்பில் ஐக்கிய நாடுகளின் பல்வேறு அமைப்புக்கள் வெளியிடுகின்ற விபரங்களை அரசாங்க அமைச்சர்கள் சிலர் தவறானவை என்று குறை கூறுவதையும் காணக்கூடியதாக இருக்கிறது. சத்துணவு பற்றாக்குறைப் பிரச்சினை பற்றிய முறைப்பாடுகளை அரசியல் நோக்குடன் செயற்படும் சுகாதாரத் துறை அதிகாரிகளின் மிகைப்படுத்தப்பட்ட தகவல்கள் என்று சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல அண்மையில் நிராகரித்தார்.

பல வருடங்களுக்கு முன்னர் பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டே ஐக்கிய நாடுகளின் அமைப்புகள் சத்துணவுப் பற்றாக்குறை நிலைவரம் பற்றி கூறுகின்றன, ஆனால் நிலைமை இப்போது முன்னரை விடவும் மேம் பட்டுவிட்டது என்று அமைச்சர் ரமேஷ் பத்திரன பாராளுமன்றத்தில் கூறினார்.

பட்டினிக் கொடுமையால் பாடசாலைகளில் பிள்ளைகள் மயங்கிவிழுந்ததாகக் கூறப்படும் சம்பவங்களை அறிந்து வேதனையுற்ற அரசாங்க அதிகாரிகள் சிலர் சமூக ஊடகங்களில் பதிவுகளைச் செய்ததை அடுத்து அரச அலுவலர்கள் சமூக ஊடகங்களில் கருத்துக்களை பதிவுசெய்வதற்கு அரசாங்கம் தடை விதித்திருக்கிறது.

ஐக்கிய நாடுகள் சிறு வர்கள் நிதியம் (யூனி செவ்) அண்மையில் வெளியிட்ட தகவல்க ளின் பிரகாரம் வழமையான உணவுவகைகளை அதிகரித்த விலை கொடுத்து வாங்குவது கட்டுப்படியாகாது என்பதால் குடும்பங்கள் தங்களது கிரமமான உணவு களை தவிர்க்கின்றன. அடுத்தவேளை உணவு எங்கிருந்து வரும் என்பது நிச்சயமற்ற நிலையில் சிறுவர்கள் பசியுடன் படுக்கைக்கு போகிறார்கள். சுமார் 50 சதவீதமான சிறுவர்களுக்கு ஏற்கெனவே சில அவசரகால உதவிகள் தேவைப்படுகின் றன.

உலக உணவுத்திட்டத்தின் விபரங்களின் பிரகாரம் 10 இலங்கையர்களில் மூவர் -- 63 இலட்சம் பேர் -- உணவுப் பாதுகாப்பு பிரச்சினையால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களில் கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார், ஐந்து வயதுக்கு குறைவான சிறுவர்களும் அடங்குகிறார்கள்.

23 இலட்சம் சிறுவர்கள் உட்பட 57 மக்களுக்கு அவசரமாக உணவு ஆதரவு தேவைப்படுகிறது. 5 வயதுக்கு குறைந்த சிறுவர்களில் 15.7 சதவீதமானோர் சத்துணவுப் பற்றாக்குறையால் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

தெற்காசிய நாடுகள் மத்தியில் சத்துணவுப் பற்றாக் குறையில் இலங்கை இரண் டாவது இடத்தில் இருக்கிறது. இந்த நிலை வரம் 2022 அக்டோபர் தொடக்கம் 2023 பெப்ரவரி வரை மேலும் மோசமடையும் என்று யூனி செவ் கூறுகிறது.

இதேவேளை, குடும்ப சுகாதார ஆலோசகர் டாக் டர் கௌசல்யா கஸ்தூரியா ராச்சி கடந்தவாரம் வெளியிட்ட தகவல்களின் பிரகாரம் ஐந்து வயதுக்கு குறைந்த சிறுவர்களில் 14.6 சதவீதமானோர் வயதுக்கேற்ற நிறையைக் கொண்டவர்களாக இல்லை. ஐந்து வயதுக்கும் குறைவான சிறுவர்கள் மத்தியிலான நிறைக்குறைவைப் பொறுத்தவரை, நுவரேலியா மாவட்டமே உயர்ந்த சதவீதத்தை (21 வீதம்) கொண்டிருக்கிறது. வவுனியாவில் இது 19.9 சதவீதமாகவும் அம்பாறையில் இது 18.5 சதவீதமாகவும் இருக்கிறது.

இலங்கையில் இன்று சிறுவர்களின் நிலை எந்த இலட்சணத்தில் இருக்கிறது என்பதை இந்த விபரங்கள் பிரகாசமாக வெளிக்காட்டுகின்றன. எதிர்காலச் சந்ததிக்கு அபிவிருத்தியடைந்த இலங்கையை கிடைக்கச் செய்வதே தனது இலட்சியம் என்று அடிக்கடி கூறும் ஜனாதிபதி விக்கிரமசிங்க இன்றைய சிறுவர்களும் குழந்தைகளும் ஆரோக்கியமானவர்களாக வளருவதை உறுதி செய்தால் மாத்திரமே நலம்வாய்ந்த எதிர்காலச்சந்ததிகள் பற்றி பேசமுடியும் என்பதை உணர்ந்து சத்துணவுப் பற்றாக்குறைப் பிரச்சினைக்கு உடனடித் தீர்வைக்காண வேண்டும்.

போராட்டங்களுக்கு குழந்தைகளை கொண்டுவருவது எந்தளவுக்கு அவர்களின் நலன்களுக்கு விரோதமானதோ சத்துணவுப் பற்றாக்குறையை முறையாக கையாளாமல் அலட்சியம் செய்வதும் அதேயளவுக்கு விரோதமானது.

சிறுவர்களைப் பற்றி நெல்சன் மண்டேலா கூறியதை நினைவுபடுத்துவது இச்சந்தர்ப்பத்தில் பொருத்தமானதாகும்.

“எமது சிறுவர்கள் என்ற பாறையின் மீதே எமது எதிர்காலம் கட்டியெழுப்பப்படும். அவர்களே எமது தேசத்தின் மகத்தான சொத்து. எமது தேசிய செல்வத்தை உருவாக்குபவர்களும் அவர்களே. சிறுவர்களை எவ்வாறு ஒரு சமூகம் நடத்துகிறது என்பதைப் பொறுத்தே அதன் உண்மையான பண்பு மதிப்பிடப்படுகிறது.”

ஈழநாடு

# சமாதானத்தை (?) தொலைத்துப் போனவர்

பனங்காட்டான்

## காலநிலை அவதாரத்தில் மீள்வருகை!



**2003ல் சமாதானத் தூதுவராக இலங்கைக்குள் புகுந்து அதனைத் தொலைத்துவிட்டு, பின்னர் சீனாவின் பட்டுப் பாதைத் திட்டத்தில் பணியாற்றி விருப்பம் கலந்த முரண்பாடில் சிக்குப்பட்டு, அடுத்து ஐ.நாவின் காலநிலை நிகழ்ச்சித் திட்டத்தில் பணியாற்றி ஊழல் மோசடியில் அகப்பட்டு பதவி துறந்த எரிக் சொல்கெய்ம், இப்போது காலநிலை ஆலோசகராக உருவெடுத்து ரணிலின் கூட்டுக்குள் இறக்கப்பட்டுள்ளார். இதற்குள் மறைந்திருக்கும் சூத்திரங்கள் ரகசியமானவையல்ல.**

இலங்கையில் எந்தக் கட்சி ஆட்சிக் கதிரையில் ஏறினாலும், எவர் ஆட்சியாளராக மாறினாலும் சில காரியங்கள் மாமூலாக இடம்பெறும்.

அமைச்சர்கள் மாறுவார்கள், அமைச்சுகளின் அதிகாரிகள் இடமாற்றம் பெறுவர், திணைக்களங்களிலும் கூட்டுத்தாபனங்களிலும் புதிய முகங்கள் நியமனமாவர்.

இதற்கு இணைவாக விசாரணை ஆணைக்குழுக்கள் ஒவ்வொரு நாளும் நியமிக்கப்படும். நள்ளிரவு வேளையில் புதுப்புது வர்த்தமானி அறிவிப்புகள் வெளிவரும். அதிகார மீறல், ஊழல் மோசடி, இலஞ்சக் குற்றம் என்று சிலர் மீது விசாரணை ஆரம்பமாகும். தேர்தல்களை பின்போட வழி தேடப்படும். அரசியலமைப்பில் மாற்றம் கொண்டு வரவும் முயற்சிக்கப்படும்.

பின்னர் சில மாதங்கள் போனால் மீண்டும் பழைய குருடி கதவைத் திறவடிதான்! அரசியல் என்றால் இது சகஜமென்றவாறு அப்பாவி மக்கள் அண்ணாந்து பார்த்துக் கொண்டிருப்பர். தேர்தல் மூலம் மக்கள் ஆணையைப் பெற்று உயர் கதிரையில் ஏறியவர்களுக்கும், தனியனாக அதே கதிரையில் அமர்த்தப்பட்டிருப்பவருக்குமிடையே எந்த மாற்றமுமின்றி எல்லாம் அப்படியே நடைபெறுகின்றன.

ஆனால், ராஜபக்சக்களின் இலக்குகளை மாற்றியமைக்கும் சாத்தியத்தைக் கொண்ட 22வது அரசியல் திருத்தம் கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் விவாதிக்க இருந்தபோது, ராஜபக்சக்களின் பொதுஜன பெரமுன காலை வாரி விட்டதால், அதனைப் பின்போட நேர்ந்தது. தங்களால் ஜனாதிபதியாக்கப்பட்ட ரணிலினால் முன்வைக்கப்பட்ட 22வது திருத்தத்தை எதற்காக பெரமுன எதிர்க்கிறது? இதற்கு இரண்டு விடயங்கள் காரணம்.

இரட்டைப் பிரஜாவுரிமை உள்ளவர்கள் எந்தவொரு பதவியையும் வகிப்பதை 22வது திருத்தம் தடுக்கிறது. நாடாளுமன்றத்தை இரண்டரை வருடங்களின் பின்னர் எப்போது வேண்டுமானாலும் கலைப்பதற்கு ஜனாதிபதிக்கு இது அதிகாரம் கொடுக்கிறது.

இரட்டைப் பிரஜாவுரிமை சமாசாரம் நிறைவேறுமானால் அது நேரடியாக முதலில் பசில் ராஜபக்சவை பாதிக்கும். இரண்டரை வருடங்களில் நாடாளுமன்றம் கலைக்கப்படுமானால் பொதுஜன பெரமுனவின் பல எம்.பிக்கள் ஓய்வூதியம் பெற முடியாது போகும். (ஆகக்குறைந்தது ஐந்து வருடங்கள் எம்.பியாக இருந்தால் மட்டுமே ஒருவர் ஓய்வூதியம் பெற தகுதி பெறுவார்). அது மட்டுமன்றி உடனடியாக தேர்தல் நடைபெறுமானால் தற்போதைய எம்.பிக்களில் சிலர் வெற்றி பெறும் வாய்ப்பும் இல்லை.

இதனால் நான்கு வருடங்களின் பின்னர் நாடாளுமன்றத்தைக் கலைக்கும் தற்போதைய அரசியலமைப்பு முறைமையை இவர்களுள் பலரும் விரும்புகின்றனர். ஆனால், அமைச்சர்களாகவுள்ள கட்சிசார் எம்.பிக்கள் அமைச்சரவை கூட்டுப் பொறுப்பை ஏற்று இதனை ஆதரிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

22ம் திருத்தத்தின் மீதான விவாதம் அறிவிக்கப்பட்டவாறு இவ்வாரம் நாடாளுமன்றத்தில் இடம்பெறுமானால், ரணிலின் பலம் எந்தளவு என்பது அம்பலமாகும். விசப்பரீட்சையாகவுள்ள இதற்கான வாக்கெடுப்பு ரணிலுக்கான பலப்பரீட்சையாகவே பார்க்கப்படுகிறது.

நரித்தந்திரத்துக்குப் பெயர் பெற்ற ரணிலைப் பொறுத்தளவில் 22வது திருத்தம் வெற்றி தோல்வி என்பதற்கப்பால், அவரது ரகசிய விருப்பம் ஈடேறும் என்பது நிச்சயம். பொதுஜன பெரமுனவை இதனூடாக பிளவுபடுத்தி அதனூடாக தமது எதிர்காலத்தை தீர்மானிக்க விரும்புகிறார். ஜெனிவாவில் இலங்கை மீதான தீர்மானத்தில் வெற்றிக்கும் தோல்விக்கும் அப்பால் எதனை ரணில் எதிர்பார்த்தாரோ அதுவே இங்கும்.

இலங்கை அரசியல் செல்நெறி இவ்வாறிருக்கையில், முன்னாள் நாயகர் ஒருவர் இலங்கை சென்றிருப்பதும், அவர் மேற்கொள்ளும் சந்திப்புகளும் இப்பொழுது பிரதான செய்திகளாக இடம்பிடித்துள்ளது.

இந்த நாயகர் இலங்கை அரசியற்பரப்பில் நன்கறியப்பட்ட எரிக் சொல்கெய்ம். 2003ல் இலங்கையின் அப்போதைய ரணில் விக்கிரமசிங்க அரசு, விடுதலைப் புலிகளுடன் மேற்கொண்ட சமாதானப் பேச்சுவார்த்தைகளின் அனுசரணையாளராகவிருந்து உலகளாவிய ரீதியில் அறிமுகமானவர் இவர். ஒரு கட்டத்தில் சமாதானத்தின் நம்பிக்கை நட்சத்திரமாகக்கூட பார்க்கப்பட்டவர். 2006ம் ஆண்டின் பின்னரே இவரது முகமூடி கழற்றப்பட்டது. தமிழரை இக்கட்டான நிலையில் நிறுத்திவிட்டு காணாமல் போனவர் இவர். இதனால் இவரை இன்றும் தமிழர் தரப்பினர் சிலர் நம்பிக்கைத் துரோகியாகப் பார்க்கின்றனர்.

நோர்வேயில் 1977 முதல் மூன்று பிரதான கட்சிகளின் தலைமைப் பதவியில் இருந்தவர். 1989ல் முதன்முறையாக தேர்தலில் வெற்றி பெற்று பல அமைச்சுப் பதவிகளை வகித்துவிட்டு 2000ல் அரசியலிலிருந்து ஓய்வு பெற்றவர்.

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சு வார்த்தைக் காலத்தில் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்களுடன் நெருங்கிப் பழகியவர். இதன் வெளிப்பாடாக அவரின் இறுதி அஞ்சலியில் உரையாற்றும்போது, "அவர் ஒருபோதும் என்னிடம் பொய் சொன்னதில்லை. எப்போதும் உண்மையை அவர் பார்த்தவாறே பேசினார்" (He never lied to me. He always spoke the truth as he saw it) என்று எரிக் சொல்கெய்ம் குறிப்பிட்டது வரலாற்றுக்கான பதிவு.

ஆனால், எரிக் சொல்கெய்ம் எப்போதும் உண்மையாகவும் ஆத்மசுத்தியாகவும் அன்ரன் பாலசிங்கம் தலைமை தாங்கிய சமாதான பேச்சுவார்த்தையில் அனுசரணையாளராக செயற்படவில்லையென்ற ஆதங்கம் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களிடம் இன்றும் உண்டு. சர்வதேச சமாதான தூதுவர் என்று ஒரு காலத்தில் வர்ணிக்கப்பட்ட எரிக் சொல்கெய்மின் பிற்காலம், ராஜபக்சக்களின் ஆட்சிக் காலம் போன்று ஊழலிலும் மோசடியிலும் பிரசித்தமானது.

சீனாவின் சர்ச்சைக்குரிய பட்டுப் பாதை (Belt and Road infrastructure) உட்கட்டுமான திட்டத்தில் பணியாற்றிய வேளை இவர் விருப்பம் கலந்த முரண்பாடு மற்றும் பக்கசார்பு விவகாரங்களில் சிக்குப்பட்டு அதிலிருந்து வெளியேற நேர்ந்தது இவருக்கான ஆரம்பக் கறை.

2013ம் ஆண்டில் சர்வதேச பொருளாதார ஒற்றுமை மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் தலைமை அதிகாரியாக நியமனம் பெற்ற இவர், 2016ல் ஐக்கிய நாடுகள் காலநிலை நிகழ்ச்சித் திட்ட நிறைவேற்றுனர் ஆனார். இந்தப் பதவிக்காலத்தில் அளவுக்கு மீறிய பயணங்கள், தங்கிட வசதிகள், பொதுநிர்வாகம் என்பவற்றின் பெயரில் பல லட்சம் டாலர்களை செலவிட்டதாக கணக்குக் காட்டியதன் காரணமாக யப்பான், பெல்ஜியம், டென்மார்க், சுவீடன், நெதர்லாந்து ஆகிய நாடுகள் தங்கள் நிதியுதவியை இந்த நிறுவனத்துக்கு வழங்குவதிலிருந்து நிறுத்தின.

இறுதியாக 2018ம் ஆண்டு நவம்பர் 20ம் திகதி ஐ.நா.செயலாளர் நாயகத்தின் அறிவுறுத்தலுக்கிணங்க இப்பதவியிலிருந்து எரிக் சொல்கெய்ம் ராஜினாமா செய்தார். (இதனைச் செய்ய தவறியிருப்பின் பதவி நீக்கப்பட்டிருப்பார்).

இந்தப் பின்புலத்தைக் கொண்ட எரிக் சொல்கெய்ம் எந்த அடிப்படையில் ரணில் விக்கிரமசிங்கவினால் சர்வதேச காலநிலை விவகார ஆலோசகராக நியமிக்கப்பட்டாரென்பது பெரும் கேள்வியாகியுள்ளது. ஏற்கனவே தமது மைத்துனரும் (மாமனின் மகன்) முன்னாள் எம்.பியுமான றுவான் விஜேவர்த்தனவை காலநிலை மூத்த ஆலோசகராக நியமித்த ரணிலுக்கு இப்போது எரிக் சொல்கெய்மும் தேவைப்பட்டதன் நோக்கம் என்ன?



உலக வல்லரசுக்கு இரண்டு முகங்கள் உண்டென்பது சர்வதேச நாடுகளின் கருத்து. இதில் மென்முகம் நோர்வே. அந்த மென்முகத்தின் பிரதிநிதியான எரிக் சொல்கெய்ம் எஜமானின் நம்பிக்கைக்குரிய சுவீகாரப் புத்திரன். இதனூடாக மறைந்திருக்கும் பல சூத்திரங்களை அறிந்து கொள்ளலாம்.

# என்று தணியும் இந்திய மீனவர் அத்துமீறல்...!

இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் தொடர்ச்சியாக இருந்துகொண்டே இருக்கிறது. இந்திய மீனவர்களின் வருகை எமது நாட்டில் எரிபொருள் நெருக்கடிக்கு முன்னர் உச்சளவில் காணப்பட்டது. இந்நிலையில், தற்போது குறைந்துவிட்டதான ஒரு தோற்றம் உள்ளது. இந்நிலையில், இந்திய மீனவர்களின் வருகை தொடர்ந்தும் இருப்பதாக கடந்த வாரம் மீனவர்கள் சிலர் தமது கருத்துக்களை வெளியிட்டிருந்தனர். இந்நிலையில், இந்திய மீனவர்களின் போராட்டங்களுக்கு எதிராகக் கடந்த காலங்களில் மக்களை அணி திரட்டிய – இந்திய மீனவர்களின் வருகையை தடுத்து நிறுத்துவதில் அரச தரப்புடன் பேசவல்ல – மீனவர்களின் சங்கங்கள் – சமாசங்கள் – சம்மேளனங்கள் இந்த அத்துமீறல்கள் தொடர்பில் என்ன நிலைப்பாட்டை கொண்டுள்ளனர் என்று இங்கு கூறுகின்றனர்.




## இந்திய மீனவர்கள் வருகிறார்கள்!

**நா. வர்ணகுலசிங்கம்,**
**வடமராட்சி மீனவர் சங்கம்**



இந்திய இழுவை மடி படகுகளின் வருகை தற்போது 95 வீதம் குறைவடைந்து விட்டது. 15 -16 கடல் மைல்களில்தான் இப்போது இந்திய மீனவர்கள் தொழில் புரிகிறார்கள். ஒரு சிலபடகுகள் எமது கடலுக்கு வருகின்றன.

நாங்கள் அந்தளவு தூரத்துக்கு செல்வதற்கு எரிபொருள் இல்லை. அதனால் எமது தொழிலாளர்கள் அந்தப் பகுதிக்கு செல்வதில்லை. எமது மீனவர்கள் தற்போதைய சூழ்நிலையில் கரையோரமாகத்தான் தொழில் செய்கின்றார்கள். ஆனால் தொழிலுக்கு போய்வரும் தொழிலாளர்கள் கூறுகின்றார்கள் 15 - 16 கடல் மைல்களுக்கு அப்பால் நின்று இந்திய மீனவர்கள் தொழில் புரிகின்றனர் என்று. அவர்களின் வருகை கட்டாயமாக நிறுத்தப்பட வேண்டியது.

ஆனால், எமது மீனவர்கள் தற்போது, இந்திய மீனவர்களை காணமுடியாமைக்கு காரணம் எரிபொருள் இல்லாமையே. ஆனால், அவர்களின் வருகை இருக்கிறது. அது எமது மீனவர்களின் கண்களுக்கு தென்படுவதில்லை. குறிப்பாக எமது இலங்கை கடல் பரப்புக்குள் வருகின்ற ஒரு சில படகுகளை மாத்திரமே கடல்படையினர் கைது செய்கின்றார்கள். ஆனால், அவ்வாறு வரும் அனைத்து இந்திய படகுகளின் வருகையையும் நிறுத்த வேண்டிய கடமை எமது அரசாங்கத்துக்கு உரியது.

எமது தொழிலாளர்கள் நீண்ட காலமாக இந்திய இழுவை தொழிலாளர்களை காணவில்லை என்பது ஒரு உண்மையான விடயம். இதற்கான உண்மை காரணம் எமக்கு தொழிலுக்கு செல்வதற்கு பூரணமாக எரிபொருள் கிடைக்காமையே.

## சுருக்குவலை மீன்பிடியே இப்போது எமது பிரச்னை

**கணேஸ்வரன் கிட்டு**
**உடுத்துறை கடற்றொழிலாளர் சங்கம்**



இந்திய மீன்பிடி படகுகளின் வருகை குறைவாகக் காணப்படுகின்றது. அவர்களுடைய தடைக் காலமும் தற்போது காணப்படுகின்றது. அத்துடன், எமது பகுதிகளில் தடைக்காலத்தில் இந்திய மீனவர்கள் வழமையாக வருவது மிகவும் குறைவு. எனினும், சில பகுதிகளில் கரையோர பகுதியில் அல்லாது உயர்ந்த கடலில் சில படகுகளில் வந்து செல்கின்றார்கள். அதனை தடுப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. நாங்கள் ஏற்கனவே காட்டிய எதிர்ப்பின் காரணமாக 95 வீதமான இந்திய மீனவர்களின் வருகை குறைக்கப்பட்டுள்ளது.

இந்திய மீனவர்களின் பிரச்னை தற்போது சற்று குறைவாகக் காணப்படுகின்றது. இன்றைய சூழ்நிலையில் சுருக்குவலை பிரச்னை பெரும் பிரச்னையாக உள்ளது. இந்த காலப்பகுதியில் இந்திய மீனவர்களின் வருகையும் காணப்படுமாக இருந்தால் எமக்கு மிகவும் பாதிப்புக்களை ஏற்படுத்தும். ஆனால், தற்போது இந்திய மீனவர்களின் வருகை சற்று குறைவு அடைந்துள்ளதால் நாங்கள் தற்போது சுருக்குவலைப் பிரச்னைக்கு மாத்திரம் முகம் கொடுக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம்.

## எரிபொருள் இல்லாததால் நாம்தான் செல்வதில்லை!

**ரா. மதியழகன்,**
**வல்வெட்டித்துறை ஆதி கோவிலடி,**
**கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்க செயலாளர்**

அண்மைக்காலமாக இந்திய மீனவர்களின் வருகை அதிகமாகக் காணப்பட்டது. தற்போது, சற்று குறைவாகக் காணப்படுகின்றது. எங்களுக்கு எரிபொருள் இல்லாததால் நாங்கள் தொழிலுக்கு செல்வதில்லை. சென்றால்தான் தெரியும் அவர்கள் வருகின்றார்களா இல்லையா என்று, அவர்கள் கடற்படைமீதான பயத்தில் சற்று குறைவாக வருகின்றார்கள். அவர்கள் இரவோடு இரவாக வந்து செல்கின்றார்கள். ஆனால் அது குறைவாக இருக்கிறது. ஏனென்றால் எமது பகுதி மீனவர்களும் குறைவாகவே தொழிலுக்கு செல்கின்றார்கள்.

கடந்த மாதம் ஒரு படகு எமது பகுதியில்



இருந்து தொழிலுக்கு சென்ற போது இந்திய மீனவர்களின் படகுகளுடன் முரண்பட்ட சம்பவம் இடம்பெற்றுள்ளது. ஆனால், இந்தியர்களின் வருகை குறைவாக இருந்தாலும் அவர்கள் கட்டாயம் வருகின்றார்கள் என்பதுதான் உண்மை. அத்தோடு எமக்கு எரிபொருள் பூரணமாக கிடைக்கும்போது நாங்கள் அனைவரும் தொழிலுக்கு சென்றால் நாங்கள் அடிக்கடி அவர்களை காண வேண்டிய நிலை ஏற்படும்.

## நிரந்தர தீர்வு அவசியம்!

**அ. அன்னராசா,**
**கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்கள், சமாசங்களின் சம்மேளன தலைவர்.**



கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்கள், சமாசங்களின் சம்மேளன தலைவர் என்ற ரீதியில் தற்போது இலங்கையின் கடற்பரப்புக்குள் இந்திய மீனவர்களின் அத்துமீறிய வருகை குறைக்கப்பட்டு இருந்தாலும் குறிப் பிட்ட சில பிரதேசங்களில் இந்திய மீனவர்க ளின் வருகை ஒரு சில வகையில் இருந்து கொண்டிருக்கின்றது.

அந்த வருகை முற்றுமுழுதாக கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்ற ஒரு நோக்கம் நமது வட தொழிலாளர்கள் மத்தியில் காணப்படுகின்றது. ஆனால், அவர்களின் வருகை குறைந்திருந்தாலும் இந்திய மீனவர்களுக்கும் இலங்கை மீனவர்களுக்கும் ஒரு தீர்வு கட்டாயம் முக்கியமாகும்.

இந்தத் தீர்வு நோக்கி அரசாங்கம் வெளிவிவகார அமைச்சு மட்டத்தில் எமது தீர்வை பெற்றுத் தர வேண்டும். தற்போது இந்திய மீனவர்களின் வருகை குறைந்துவிட்டது என்று இருந்துவிட்டால் அவர்கள் எந்தவித முன்னறிவித்தலும் இன்றி சடுதியாக கடலில் வருகின்ற நிலை காணப்படும்.

தடை இருந்தும் எமது பொருளாதார நெருக்கடி சூழ்நிலையை கருத்தில் கண்டு அவர்களின் வருகை குறைவாக இருக்கிறது. எனினும், முற்றும் முழுதாக இலங்கை கடற்பரப்புக்குள் இந்திய மீனவர்கள் நுழைவதை அரசாங்கம் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இதேபோல வடக்கு கடல்தொழிலாளர்கள் தமிழக முதலமைச்சருக்கு இழுவைமடி தொழிலை கட்டுப்படுத்தக் கோரி மகஜர் அனுப்பினோம். ஆனால், இன்று வரை அவர்கள் எமக்கு எந்தவித பதிலும் எமக்கு அனுப்பவில்லை.

இந்திய மீனவர்களின் வருகை குறைந்திருந்த போதிலும் அவர்கள் எதிர்காலத்தில் கட்டாயமாக வருவார்கள். வருகை தந்து எமது பல கோடி ரூபாய் சொத்துக்களுக்கு அழிவுகளை ஏற்படுத்துவார்கள் என்பதே உண்மையாகும். ஏற்கனவே அவர்கள் ஏற்படுத்திய இழப்புகளுக்கு எந்தவித இழப்பீடுகளும் கிடைக்கவில்லை. அத்தோடு ஏற்கனவே தொழில் உபகரணங்களை அழித்த எமது மீனவர்களுக்கு இந்திய அரசாங்கமானது கட்டாயமாக எமக்கு உதவிகளை புரிய வேண்டும். இது தொடர்பில் கடற்றொழில் அமைத்து உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்தோடு இந்திய துணை தூதுவரும் இந்திய இலங்கை மீனவர்களின் இந்த பிரச்னைக்கு ஒரு நிரந்தர தீர்வை பெற்று தர வேண்டும் என்பது எமது கோரிக்கையாகும்.



## மீண்டும் தயாரிப்பில்!

மலையாள நடிகையான ஐஸ்வர்யா லட்சுமி ஒரே சமயத்தில் தமிழ், தெலுங்கு, மலையாளம் என மூன்று மொழிகளில் அழுத்தமான வேடங்களில் நடித்து ரசிகர்களின் கவனத்தை ஈர்த்து வருகிறார்.

இவர், முன்னர் “கார்கி” என்ற படத்தை தயாரித்திருந்தார். தற்போது “பொன்னியின் செல்வன்” திரைப் படத்தில் இவர் நடித்திருந்த பூங்குழலி கதாபாத்திரம் பெரும் வரவேற்பை பெற்றது. தற்போது கிடைத்துள்ள வரவேற்பைப் பயன்படுத்த அவர் தொடர்ந்து படங்களை தயாரிக்க முடிவு செய்துள்ளார்.

## எனக்கு பயமில்லை!



தமிழ், தெலுங்கு, ஹிந்தி என நடித்து வருகிறார் ரகுல் ப்ரீத் சிங். நடிகரும், தயாரிப்பாளரு மான ஜாக்கி பஹ்னானியை இவர் காதலிக்கிறார்.

காதல் பற்றி ரகுல் கூறுகையில், “சிலர் தங்கள் காதலை சொல்லாமல் இருப்பது அவர்களின் மனநிலை. நான் எனது காதலை வெளிப்படுத்தினேன். சினிமாவில் நடிக்கும் நான், நிஜ வாழ்விலும் நடிக்க மாட்டேன். உண்மையாக இருக்க விரும்புகிறேன். வாழ்வில் துணை முக்கியம். பயம் காரணமாக சில விடயங்களை சிலர் மறைத்து சிக்கலுக்கு ஆளாகின்றனர். எனக்கு பயமில்லாததால் காதலை மறைக்கவில்லை” என்றார்.



## கிரிக்கெட் வீரர் கதையில் சிவா!

விளையாட்டு வீரர்களின் வாழ்க்கை வரலாற்று படங்கள் பொலிவூட்டில் தயாராகின. டோனி, சச்சின், 83 படங்கள் இவ்வாறு தயாராகின.

இந்நிலையில், பிரபல தமிழக கிரிக்கெட் வீரர் நடராஜனின் வாழ்க்கை கதையை சினிமா படமாக எடுக்கும் முயற்சிகள் நடக்கின்றன. இதில் நடராஜன் கதாபாத்திரத்தில் நடிக்க சிவகார்த்திகேயனுடன் பேச்சு நடக்கிறது.

அருண்ராஜா காமராஜ் இயக்கிய கனா படத்தில் சிவகார்த்திகேயன் கிரிக்கெட் பயிற்றுவிப்பாளராக நடித்து இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.




## “தல” தயாரிப்பில் தளபதி!

விஜய் தற்போது வம்சி இயக்கத்தில் வாரிசு படத்தில் நடித்து வருகிறார். இதில் விஜய்க்கு ஜோடியாக ராஷ்மிகா மந்தனா நடிக்கிறார். இந்த படத்துக்கு பிறகு விஜய் நடிக்கும் 67ஆவது படத்தை லோகேஷ் கனகராஜ் இயக்கவுள்ளார்.

ஏற்கனவே மாஸ்டர் படம் இவர்கள் கூட்டணியில் வெளியாகி நல்ல வரவேற்பை பெற்றதால் இப்படத்துக்கு ரசிகர்கள் மத்தியில் பெரிய எதிர்பார்ப்பு உள்ளது.

லோகேஷ் கனகராஜ் - விஜய் இதில் விஜய்க்கு 50 வயது தாதா கதாபாத்திரம் என்றும் அவருக்கு வில்லன்களாக 6 முன்னணி நடிகர்கள் நடிக்கவுள்ளனர். இந்தப் படத்தை முன்னாள் கிரிக்கெட் வீரர் டோனி தயாரிக்கவுள்ளார் என்று கூறப்படுகின்றது.

## மணிரத்னத்துடன் ரஜினி



பொன்னியின் செல்வன் படத்தைத் தொடர்ந்து மணிரத்னம் ரஜினியை இயக்கவுள்ளார்.

பொன்னியின் செல்வன் ட்ரெய்லர் வெளியீடு மேடையில், ரஜினிக்கு ஒரு கதை சொல்லியிருப்பதாகவும் அது பிடித்திருப்பதால் நடிக்கத் தயாராக இருப்பதாகவும் கூறினார் என்று மணிரத்னம் கூறினார்.

தளபதி படத்தின் பின்னர் - 32 ஆண்டுகளின் பின்னர் ரஜினி - மணிரத்னம் இணையவுள்ளனர். இந்தப் படத்தையும் லைகா நிறுவனமே தயாரிக்கவுள்ளது.




## திரைவிமர்சனம்

**திரைப்படம் - ஆற்றல்**
**தயாரிப்பு - செவ்வந்தி மூவீஸ்**
**இயக்கம் - கேஎல் கண்ணன்**
**இசை - அஷ்வின் ஹேமந்த்**
**நடிப்பு - விதார்த், ஷிரிதா ராவ், வம்சி**

ஒரு கதையை சிறப்பாக யோசித்து எழுதுவதைவிட அந்தக் கதையை சிறப்பாக திரைக்கதை அமைத்து, சுவாரசியமாகக் கொடுப்பதுதான் திரைப் படத்தில் முக்கியம். இந்தப் படத்தைப் பொறுத்தவரையில் இயக்குநர் கே. எல். கண்ணன், ஓர் உணர்ச்சிகரமான – காதல் – த்ரில்லர் என கலந்த ஒரு கதையை யோசித்திருக்கிறார். ஆனால், அதை இன்னும் விறுவிறுப்பாகவும் சுவாரசியமாகவும் கொடுத்திருந்தால் இரசிக்கும்படியாக இருந்திருக்கும்.

கார் திருத்துநரான சார்லியின் ஒரே மகன் விதார்த். ஆளில்லாமல் ஓடும் காரைக் கண்டுபிடித்து அதை ஓட வைப்பதுதான் அவரின் இலட்சியம். அதற்காக பத்து இலட்ச ரூபாய் பணம் தேவைப்படுகிறது. அந்தப் பணத்தை ஒருவரிடமிருந்து கடனாக வாங்கி வரும்போது சார்லி சாலை விபத்தில் இறந்து போகிறார். அதற்கடுத்து ஸ்கூட்டரில் செல்லும் முதியவர் ஒருவரை தலைக் கவசம் அணிந்த நான்கு பேர் தாக்கி அவரிடமிருந்த பணத்தைப் பறித்து செல்கிறார்கள். அவர்களை விரட்டிச் சென்று பணத்தை மீட்கிறார் விதார்த். ஆனால், அவர்கள் தப்பிவிடுகிறார்கள். தனது அப்பா சார்லியும் இப்படித்தான் கொலை செய்யப்பட்டிருப்பாரோ என்ற சந்தேகம் அவருக்கு வருகிறது. அதனைக் கண்டுபிடிக்கும் வேலையில் இறங்குகிறார் அதன் பின் என்ன நடக்கிறது என்பதுதான் படத்தின் மீதிக் கதை.

படத்தின் ஆரம்ப காட்சிகள் ஒரு த்ரில்லர் படமாகவும், அதற்குப் பிறகு வரும் சார்லி – ரமா – விதார்த் காட்சிகள் உணர்ச்சிமயமான படமாகவும், விதார்த் – ஷிரிதா ராவ் காட்சிகள் காதல் படமாகவும், விதார்த் கண்டுபிடிக்கும் ஆளில்லாமல் ஓடும் கார் காட்சிகள் கற்பனைப் படமாகவும் இருக்குமோ என்ற ஆர்வத்தைத் தூண்டுகிறது. அந்த ஆர்வத்தை அடுத்தடுத்து பரபரப்பாக்காமல் மெதுவாகக் திரைக்கதையை நகர்த்தி இருக்கிறார் இயக்குநர்.

அன்பான, கொஞ்சம் அமைதியான மகனாக விதார்த். தனது இலட்சியமான ஆளில்லா காரைக் கண்டுபிடிக்க முயன்று அதில் வெற்றியும் பெறுகிறார். ஆனால், அதற்கு முன்பே அப்பா சார்லியைப் பறி கொடுத்துவிடுகிறார். அப்பா மீதுள்ள பாசத்தால் அவரின் மரணத்தில் உள்ள மர்மத்தைக் கண்டுபிடிக்க அதிரடி நாயகனாக அவதாரம் எடுக்கிறார். இருந்தாலும் எப்போதுமே எதையோ பறி கொடுத்தவர் போல பார்வை பார்த்துக் கொண்டிருக்கிறார்.

கதாநாயகியாக ஷிரிதா ராவ். அவர் முகபாவம் காட்டி நடிப்பதை முந்திக் கொண்டு அவரின் அழகான இரண்டு கண்கள் அவ்வளவு பாவத்தைக் காட்டுகிறது. காதல் காட்சிகளில் அநியாயத்துக்கு வெட்கப்படுகிறார். புதுமுகங்கள் இப்படியெல்லாம் நடிப்பது ஆச்சரியம்தான்.

சாலையில் மோட்டார் சைக்கிளில் சென்று பணத்துடன் செல்பவர்களை தாக்கிப் பணம் பறிப்பது, வீடுகளுக்குள் சென்று கொள்ளையடித்து வருவது என தலைக்கவசம் அணிந்த நான்கு இளைஞர்கள் சுற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு தலைவனாக வம்சி. அவருடன் எப்போதும் வளைய வரும் அரை குறை ஆடை அணிந்த ஒரு பெண் என 80களின் வில்லன்களை கண் முன் நிறுத்தியிருக்கிறார் இயக்குநர். இந்தப் படத்தைப் பார்த்தால், உணவு விநியோகம் செய்ய வருபவர்களை வீட்டுக்கு வெளியே நிற்க வைத்து வாங்கி அனுப்பி விடுவார்கள். சார்லி, ரமா, விக்னேஷ்காந்த், வித்யுலேகா ஆகியோர் மற்ற நட்சத்திரங்களில் ஒரு சில காட்சிகளில் வருபவர்கள்.

மாநகரில் இத்தனை வழிப்பறி, கொள்ளை நடக்கிறது. எதன் மீதும் காவல் துறை நடவடிக்கை எடுத்தது போலவே தெரியவில்லை. படத்தில் காவல்துறையினர் வருகிறார்கள். ஆனால், அவர்கள் விதார்த்துடன் சம்பந்தப்பட்ட காட்சிகளில் மட்டுமே காட்டப்படுகின்றனர். நடக்கும் கொலை, கொள்ளை குற்றங்களைப் பற்றி அவர்களுக்கு எதுவுமே தெரியாது என்றே காட்டுகிறார்கள். இப்படி சில பல முக்கிய விஷயங்களை கோட்டை விட்டிருக்கிறார் இயக்குநர்.

கொளஞ்சி குமார் ஒளிப்பதிவு, அஷ்வின் ஹேமந்த் பின்னணி இசை பரவாயில்லை.




# அதிரடி காட்டும் இங்கிலாந்து

அவுஸ்திரேலியாவில் நடைபெறும் இருபது -20 உலகக் கிண்ணத் தொடருக்கு முன்னர் இங்கிலாந்து அணி, அவுஸ்திரேலிய அணியை அதன் சொந்த மண்ணில் நடைபெற்ற இருபது -20 தொடரில் வீழ்த்தி, வலுவான மனநிலையில் செல்கிறது. கடந்த 2010இல் இங்கிலாந்து அணி இருபது -20 உலகக் கிண்ணத்தை வென்று அசத்தியது.

கடந்த 2021 டி20 உலகக்கிண்ணத் தொடரில் அரையிறுதி வரை முன்னேறி இருந்தது இங்கிலாந்து. அதனால், இந்த முறை அதிரடி சகலதுறை வீரர்களை அதிகம் கொண்ட இங்கிலாந்து அணி, கிண்ணத்தை வெல்லும் வாய்ப்புள்ள அணிகளின் பட்டியலில் இருந்து நீக்கிவிட முடியாது என்பதே பேச்சாக உள்ளது.

ஆனால், இங்கிலாந்து அணியிலும் சில பிரச்னைகள் இருக்கிறது. எல்லோரும் அதிரடியாக ஆடக்கூடிய திறன் படைத்த வீரர்கள்தாம், மற்ற அணிகளை காட்டிலும் சகலதுறையினரை அதிகம் தேர்வு செய்துள்ள அணி இங்கிலாந்து என்றால் அது மிகையாகாது. முதலில் இந்த தொடருக்கு இங்கிலாந்து அணியில் இடம்பெற்றுள்ள வீரர்கள் யார் யார் என்பதை பார்ப்போம்.

இங்கிலாந்து அணி: ஜோஸ் பட்லர் (அணித் தலைவர்), மொயின் அலி, ஹாரி புரூக், சாம் கரன், கிறிஸ் ஜோர்தான், லியாம் லிவிங்ஸ்டன், டேவிட் மலன், ஆதில் ரஷித், பில் சால்ட், பென் ஸ்டோக்ஸ், ரீஸ் டாப்லி, டேவிட் வில்லே, கிறிஸ் வோக்ஸ், மார்க் வூட், அலெக்ஸ் ஹேல்ஸ்.

காத்திருப்பு வீரர்கள்: லியாம் டாசன், ரிச்சர்ட் கிளீசன், டைமல் மில்ஸ்.

இங்கிலாந்து இந்த உலகக் கிண்ணத்தை வெல்லப்போகும் அணி என்று பேசப்பட்டு வருகிறது. இவர்களுடன் வழக்கம் போல் இந்திய அணியையும் சேர்த்துக் கொள்வார்கள். ஆனால், இந்தியா எந்த அளவுக்கு அவுஸ்திரேலிய மைதானங்களில் சோபிக்கும் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். பாகிஸ்தான், அவுஸ்திரேலியா போன்ற அணிகளும் கிண்ணத்தை வெல்லும் அணிகள் பட்டியலில் உள்ளன. ஆனால், எப்போதும் பட்டியல் போட்டால் அந்த அணிகள் வராமல் வேறு அணிதான் கிண்ணத்தை வெல்வது வழக்கம். ஏனெனில் இருபது -20 வடிவம் எந்த ஒரு கணிப்பையும் உண்மையில் தவிடுபொடி ஆக்கக் கூடிய வடிவமாகும்.

ஆப்கானிஸ்தான், அவுஸ்திரேலியா, நியூசிலாந்து மற்றும் முதல் சுற்று குறூப் ஏ போட்டிகளின் வெற்றியாளர் (இலங்கை, நமீபியா, நெதர்லாந்து, ஐக்கிய அரபு இராச்சியம்), இதே குறூப்பில் முதல் சுற்று குறூப் பி-யின் இரண்டாவது வெற்றியாளர் அணி (அயர்லாந்து, ஸ்கொட்லாந்து, மேற்கிந்தியத்தீவுகள், சிம்பாப்வே) ஆகியவை இடம்பெற்றுள்ள குறூப்பில் இங்கிலாந்து உள்ளது. இதில் ஒன்று இலங்கையாக இருக்கலாம். குறூப் பி இரண்டாவது வெற்றியாளர் நிலைக்கு மட்டும் 3 அணிகள் போட்டியில் உள்ளன (அயர்லாந்து, மேற்கிந்தியத் தீவுகள், சிம்பாப்வே). இதில் எது தகுதி பெறும் என்பது தகுதிச் சுற்றுப் போட்டிகளின் முடிவில்தான் தெரியும்.

இங்கிலாந்து அணி ஒக்ரோபர் 22ஆம் திகதி பெர்த் அரங்கத்தில் தன் முதல் போட்டியில் ஆப்கானிஸ்தானை எதிர்கொள்கிறது. அபாயகரமான ஆப்கான் அணியை விளையாடிய இரு முறையும் இங்கிலாந்து வெற்றி பெற்றுள்ளது. எனவே, இந்த போட்டியின் முடிவு இங்கிலாந்துக்கு சாதகமாகவே அமையும்.

2ஆவது போட்டியில் முதல் சுற்றின் குறூப் பி இரண்டாவது வெற்றியாளர் அணியுடன் மோதுகிறது. இது மேற்கிந்தியத் தீவுகள், அயர்லாந்து, சிம்பாப்வே என்று எந்த அணியாக வேண்டுமானாலும் இருக்கலாம். இந்த அணிகளும் அன்றைய தினத்தில் அபாயகர அணிகளே. எனவே, இங்கிலாந்து முதல் 2 போட்டிகளில் வென்று நிலையை உறுதிச் செய்துகொள்ள வேண்டும். இரண்டாவது போட்டி மெல்பர்ன் கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறுகிறது.

3ஆவது போட்டியில் அவுஸ்திரேலியாவை எதிர்கொள்கிறது இங்கிலாந்து. இப்போதைய வெற்றிகளை வைத்துப் பார்க்கும்போது இங்கிலாந்தின் கைதான் இந்தப் போட்டியிலும் ஓங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அடுத்த போட்டியில் இங்கிலாந்து நியூசிலாந்தை எதிர்கொள்கிறது. அதற்கு அடுத்த போட்டியில் குறூப் ஏ வெற்றியாளரை எதிர்கொள்கிறது. முதல் 2 போட்டிகளில் வென்று விட்டால் பிறகு இரண்டிலும் தோற்றால் கூட மீதமுள்ள 2 போட்டிகளில் ஒன்றில் வென்றால் நொக் அவுட் சுற்றுக்கு இங்கிலாந்து தகுதி பெற்று விடும், அதில் சிக்கல் இல்லை.

## ஆனால், கிண்ணம் வெல்வது கடினம் ஏன்?

கிண்ணத்தை இங்கிலாந்து வெல்வது கடினம், ஏன் தெரியுமா? - இங்கிலாந்து அணியின் ஒருநாள் போட்டி மற்றும் இருபது - 20 அணுகுமுறை முற்றிலும் மாறிவிட்டது. 2015 உலகக் கிண்ணத் தொடரின் மோசமான தோல்விகளுக்குப் பிறகு மோர்கன் அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்து சென்று குவித்த வெற்றிகளின் உச்சகட்டமாக 2019 ஐ. சி. சி. ஒருநாள் உலகக்கிண்ணத்தை முதன் முதலாக மோர்கன் தலைமையிலான அணி வென்றது.

இங்கிலாந்தின் தாரக மந்திரம் 'வருவது வரட்டும் ஆக்ரோஷம் மட்டுமே கைக்கொடுக்கும்' என்பதே. இதுதான் இந்த அணியின் பலமும் பலவீனமும். பலம் என்னவெனில் ஜோஸ் பட்லர், அலெக்ஸ் ஹேல்ஸ் தொடங்கி யார் இறங்கினாலும் அதிரடி ஆட்டம்தான். ஒருவர் 20 ஓவர் வரை நிற்பது, ஒரு முனையை சரியாமல் தாங்கி நிற்பது போன்ற எந்த ஓர் அசட்டுத்தனமான உத்தியும் அவர்களிடத்தில் கிடையாது.

அடித்துக் கொண்டே இருக்க வேண்டும். 'அடி, அதிரடி - காட்டடி' என்பதே அவர்களின் துடுப்பாட்ட மந்திரம். டேவிட் மலன் மட்டுமே கொஞ்சம் நிதானித்து, பிறகு அடிப்பவர். மற்றவர்கள் அனைவரும் இறங்கியது முதலே அதிரடிதான். கடைசி வரை துடுப்பாட்டம் உள்ளது. சகலதுறை வீரர்கள் மொயின் அலி, பென் ஸ்டோக்ஸ், லியொம் லிவிங்ஸ்டன், சாம் கரன், வோக்ஸ், டேவிட் வில்லே ஆகியோர் உள்ளனர். கடைசி வரை துடுப்பாட்டம் உள்ளது.

பந்துவீச்சில் புதுவரவு ரீஸ் டாப்லி உண்மையில் முதன்மை பந்துவீச்சாளர்தான். ஆதில் ரஷீத் அவுஸ்திரேலியாவின் பெரிய மைதானங்களில் கடைசி ஓவர்களில் ஒன்றிரண்டை வீசினால் பிடியெடுப்பாக அதிக வாய்ப்பு உள்ளது. மார்க் வூட் ஓர் அதிவேக பந்துவீச்சாளர். தொடக்க ஓவர்களில் இவரும், டாப்லியும் அபாயகரமான பந்துவீச்சாளர்கள்.

மொயின் அலியை ஒரு பகுதிநேர பந்துவீச்சாளராக வைத்துக் கொள்ளலாம். அணி படு உறுதியாக உள்ளது. இங்கிலாந்து அணியினர் இடத்தில் ஒரு காலத்தில் இருந்த தோல்வி பயம் இப்போது இல்லவே இல்லை. அதனால் அந்த அணி ஓர் அபாயகர அணியாகத் திகழ்கிறது.

ஆனாலும் இங்கிலாந்து கிண்ணத்தை வெல்வது கடினம். ஏனெனில், தொடக்கத்திலிருந்தே வருவது வரட்டும் என்று அடிக்கிறார்கள். இந்த அணுகுமுறை ஒருவேளை அவர்களுக்கு கைகூடாமல் போகும் வாய்ப்பு உள்ளது. எப்படி இந்தியாவுக்கு எதிராக ஒருநாள் தொடரில் முதல் போட்டியில் சொற்பமாக ஆல் அவுட் ஆகி இந்தியா எளிதில் வென்றதோ, அது போல் நடக்க அதிக வாய்ப்புள்ளது.

மேலும் பெரும் அதிரடி வீரர்கள் எல்லாம் முதல் வரிசையில் இங்கிலாந்தில் இறங்கி விடுகின்றனர். அவுஸ்திரேலிய ஆடுகளங்களில் ஒருநாள் கிரிக்கெட், அதுவும் புதிய பந்துகள் எகிறும். அப்போது இவர்கள் ஆட்டமிழந்து விட்டால், பிற்பாடு முதல் வரிசைவீரர்கள் அளவுக்கு அதிரடி வீரர்கள் இல்லை. அவுஸ்திரேலியாவில் எப்போதும் பந்து பழையதான உடன் ஓட்டங்கள் எடுக்கலாம். அப்போது 5, 6 மற்றும் 7ஆம் நிலைகளில் பெரிய ஷொட்களை ஆடி, பெரிய பௌண்ட்ரிகளை விளாசும் அதிரடி வீரர்கள் அவசியம். இந்த இடத்தில் இங்கிலாந்தின் முதல் வரிசை போல் பின்வரிசை இல்லை என்றே தோன்றுகிறது.

எனவே இங்கிலாந்தின் புதிய ஆக்ரோஷ அணுகுமுறை கத்தியின் மேல் நடப்பது போல்தான். என்ன வேண்டுமானாலும் நடக்கலாம். அதனால், அந்த அணியால் திட்டமிட முடியாது. ஏனெனில், ஒரே அணுகுமுறைதான். இங்கிலாந்தின் இன்னொரு பலவீனம் களத்தடுப்பு. பிடியெடுப்புகளை தவற விடுவார்கள்.

பந்துகளை தவறவிடுவார்கள். உண்மையில் பந்துவீச்சு படுஉறுதி. நல்ல இணைப்பு உள்ளது. அதாவது வேகம், சுழல் கலவை சரி விகிதத்தில் அனுபவமும் ஆக்ரோஷமும் கொண்டதாக உள்ளது. இங்கிலாந்தின் துடுப்பாட்டத்தை குலைத்து, சரியச் செய்தால் அந்த அணியை எளிதில் வீழ்த்தலாம். அவுஸ்திரேலிய மண்ணில் இதற்குச் சாத்தியம் அதிகம் என்பதால் அந்த அணியால் உலகக்கிண்ணம் வெல்வது சற்று கடினமே.




# யாழ்ப்பாண கிராமத்தின் வாழ்வுக் கோலம்!

- மு. நித்தியானந்தன் (லண்டன்)

சி. வைத்திலிங்கம் போன்ற நவீன இலக்கிய நுண்ணுணர்வும் புலமையும் மிக்க ஒருவர் ஈழத்துச் சிறுகதை முன்னோடியாய்த் திகழ்ந்திருக்கிறார் என்பது நமக்கெல்லாம் பெருமை சேர்ப்பதாகும்.

தமிழ், ஆங்கிலம், சம்ஸ்கிருதம் ஆகிய மும்மொழிகளில் புலமை மிக்க ஒருவர் சிறுகதை உலகை உவகையுடன் ஏற்று செழுமைப்படுத்தித் தந்திருக்கிறார்.

யாழ்ப்பாணம், பரமேஸ்வரா கல்லூரியில் அவர் இன்ரர் வகுப்பில் சம்ஸ்கிருதம் படித்திருக்கிறார். கொழும்பில் எழுதுவினைஞராகப் பணியேற்க கொழும்பு சென்ற பின்னர், மீண்டும் தொடர்ந்து சம்ஸ்கிருத இலக்கியங்களை வாசித்து அம்மொழியின் நயங்களை ரசிக்கத் தொடங்கினார். 'காளிதாசனின் சாகுந்தலமும், குமார சம்பவமும், மேக சந்தேசமும் என்னைக்கவர்ந்ததுபோல் வேறோருநூலும் இன்றுவரை கவர்ந்ததில்லை. அவைகளிலே ஊறி வரும் காவியச் சுவையே தெவிட்டாத இன்பம்' என்கிறார் சி. வைத்திலிங்கம். பெரிய புராணம், சிலப்பதிகாரம், வில்லிபாரதம், ஆண்டாள் பாடல்கள் ஆகிய தமிழ் இலக்கியப்பரப்பில் ஆழ்ந்து தோய்ந்தவர்.




'அந்நாட்களில் டி. ஜே. விஜயசிங்க என்ற ஒரு சிங்கள நண்பரின் தொடர்பு எனக்கு ஏற்பட்டது. அவர் ஒரு சிறந்த ரசிகன். ஐரோப்பிய இலக்கியத்தில், எந்தப் பாஷையில் எந்த நூல் சிறந்தது என்பதைத் தெரிந்து வைத்திருக்கிறார்.அந்த இலக்கியப் பரப்பை முதன்முதல் எனக்கு அறிமுகம் செய்துவைத்தவர் இவரே' என்றும் சி. வைத்திலிங்கம் குறிப்பிடுகிறார். தாகூர், கல்ஸ்வோதி, துர்கனீவ் ஆகியோரின் சிறுகதைகளை ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழிபெயர்த்து 'ஈழகேசரி'யில் வெளியிட்டிருக்கிறார்.

துர்கனீவ் எழுதிய நாவல் ஒன்றினை 'மாலை வேளையில்' என்ற தலைப்பில் ஈழகேசரியில் தொடராக மொழிபெயர்த்து எழுதினார்.

'கு. ப. ராஜகோபாலனின் சிறுகதைகளும் ஒற்றையங்க நாடகங்களும் என்னை மிகவும் கவர்ந்தன. புதுமைப்பித்தனையும், மௌனி, பிச்சமூர்த்தி, த. நா. குமாரஸ்வாமி, க. நா. சுப்ரமணியம், சி. சு. செல்லப்பா, சிதம்பர சுப்பிரமணியம் முதலியோரின் எழுத்துக்களையும் நான் ஆர்வத்துடன் படித்த போதிலும், எனக்கும் கு. ப. ராஜகோபாலனுக்குமிடையில் ஏதோ ஓர் ஆத்மீக உணர்வு இருப்பதாகவே உணரலானேன். அவ்வளவுதூரம் அவருடைய கதைகளில் ஈடுபாடு இருந்தது. நான் சிறுகதை எழுதுவதற்கு ஆதர்ஷபுருஷனாக அவரே எனக்கு உத்வேகம் கொடுத்தார் என்று சொன்னாலும் மிகையாகாது' என்று, 'எழுத்துலகில் நான்' (கலைச்செல்வி, ஆண்டுமலர்-1959) என்ற கட்டுரையில் எழுதுகிறார் சி. வைத்திலிங்கம். 'கங்காகீதம்' என்ற சி. வைத்திலிங்கத்தின் சிறுகதைத் தொகுப்பில் பல கதைகளில் கு.ப.ரா.வின் தாக்கத்தை நாம் உணரமுடியும்.

கலைமகளுக்கு ஒரு கதை எழுதவேண்டும் என்ற விருப்பத்தில் ஒரு கதையை எழுதி, அதற்குத் தகுந்த பெயர் கொடுக்கமுடியாமல், வருவது வரட்டும் என்று தனது கதையை அனுப்பி, பொருத்தமான தலைப்புடன் வெளியிடுமாறு கேட்டு, கதையைக் கலைமகளுக்கு அனுப்பி வைத்திருக்கிறார் சி. வை. 'ஏன் சிரித்தார்?' என்ற தலைப்பிடப்பட்டு, அக்கதை கலைமகளில் பிரசுரம் பெற்றது. 'அந்தக் கதையைப் பலர் மெச் சியதாக நான் இந்தியா சென்ற சமயத்தில் கி.வா.ஜகந்நாததனே தெரிவித்தார். 'இந்து' பத்திரிகையில் வெளிவந்த விமர்சன வாசகங்கள் மதுவின் வேகத்துடன் எனக்கு உற்சாகம் தந்தன. இதைத் தொடர்ந்து, 'களனி கங்கைக்கரையில்', 'அசோக மாலா', 'அழியாப்பொருள்', 'நெடுவழி' முதலிய கதைகள் வெளிவந்தன' என்கிறார் வைத்திலிங்கம்.

சி. வைத்திலிங்கம் ஏறக்குறைய 25 சிறுகதைகள் எழுதியிருக்கிறார் என்று க. குணராசா (செங்கை ஆழியான்) 'ஈழத்துச் சிறுகதை வரலாறு' என்ற நூலில் எழுதுகிறார். அவற்றுள், பன்னிரண்டு சிறுகதைகள் ஈழகேசரியில் வெளியாகியுள்ளன. மேலும் பத்துக் கதைகள் கலைமகளில் வெளியாகின. அவர் எழுதிய பெரும்பாலான சிறுகதைகளை **1939 - 1942** காலப் பகுதியில், கிட்டத்தட்ட நான்கு ஆண்டு காலப்பகுதிலேயே எழுதி முடித்திருக்கிறார்.

'இப்போ சில வருஷங்களாக என் கற்பனை ஊற்றுத் தூர்ந்துபோய்க் கிடக்கிறது. முடுக்கிவிட்ட ஜப்பான் பொம்மைபோல் எழுத்து அரங்கில் கொஞ்சக் காலம் ஆடிவிட்டு, ஓய்ந்து போனேன்' என்று, சிறுகதைத் துறையிலிருந்து தான் ஓய்வு பெற்று விட்டதைக் குறிக்கிறார். வல்லிக்கண்ணன் போன்ற சீரிய தமிழ் எழுத்தாளர்கள் சி. வைத்திலிங்கம் தொடர்ந்து எழுதவேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள்.

'இலங்கையர்கோன், சம்பந்தன், சி. வைத்திலிங்கம் ஆகிய மூன்று எழுத்தாளர்களின் சிறுகதைகளை மதிப்பிடும்போது, 'இவர்கள் மறுமலர்ச்சி இலக்கியத்தையோ, இலக்கியத்தின் உட்பிரிவுகளையோ, புதிய புதிய பரிசோதனைகளையோ அதிகம் வளர்த்தனர் என்று கூறுவதற்கில்லை.

ஆங்கில விமர்சகர்கள் கூறும் 'ரோமான்டிசம்' என்னும் கனவுலகக் காட்சிகளில் ஈடுபடச்செய்யும் இலட்சியபூர்வமான சிந்தனைகளிலும் உணர்ச்சிகளிலும் மயங்கி எழுதினர் என்றுதான் சொல்லலாம்' என்று பேராசிரியர் க. கைலாசபதி கூறிச்செல்வதை மறுக்கும் வலிமைவாய்ந்த கூற்றுகளாக சி. வைத்திலிங்கம் எழுதியிருக்கும் 'நானும் என் எழுத்தும்' என்ற கட்டுரை அமைகிறது. ஈழத்துக் கிராமிய மண்ணின் வாசத்தைத் தனது கதைகளில் படரவிட்டவர் சி. வைத்திலிங்கம். எண்பது ஆண்டு காலத்திற்கு முன்னைய யாழ்ப்பாணக் கிராமத்தின் எளிமையான வாழ்க்கைக் கோலங்களை தன் தூரிகையில் காவியமாக்கியிருக்கிறார் சி. வைத்திலிங்கம்.

'கிராமச் சூழ்நிலையிலே வளர்ந்தவன் நான். கள்ளங் கபடமில்லாத கிராமவாசிகளுடன் ஒன்றி வாழ்ந்திருந்தவன். தோட்டந்துரவுகளிலும், வயல்வெளிகளிலும், வெய்யிலிலும் மழையிலும், இரவிலும் பகலிலும் அவர்களுடன் சேர்ந்து உழைத்திருக்கிறேன்.

(18 ஆம் பக்கம் பார்க்க...)

---




**து. பாஸ்கரன், நீர்வேலி, யாழ்ப்பாணம்.**

**கேள்வி:**

13ஆம் திருத்தச்சட்டத்தை இன்றிருப்பது போலவே தொடர்ந்து நடைமுறைப்படுத்த வேண்டும். அதன் அதிகாரங்களை குறைக்கவோ, அதிகரிக்கவோ கூடாது என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளாரே. அதன் அர்த்தம் ஏதாவது உங்களுக்குப் புரிந்ததா?

**வியுக்தியார்:**

இதில் புரிவதற்கு என்ன இருக்கின்றது? அவர் தமிழ் வாக்குகளையும் எதிர்பார்க்கிறார், சிங்கள வாக்குகளையும் எதிர்பார்க்கிறார் என்பது உங்களுக்குத் தெரியாதா? வேறு ஒன்றும் இல்லை, பதின்மூன்றாவது இன்னிறருக்கும் என்பதன் அர்த்தம் புரியவில்லையா? பொலிஸ் அதிகாரம் காணி அதிகாரம் எல்லாம் இனிக் கொடுக்கக்கூடாது என்று சொல்கிறாரோ என்னவோ?

**த.ஐங்கரன், செங்கலடி, மட்டக்களப்பு.**

**கேள்வி:**

மகிந்த ராஜபக்சவை மீண்டும் பிரதமராக்க பொதுஜன பெரமுன கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் தயாராகி வருகின்றனர் என்று செய்திகள் வெளிவருகின்றனவே. அவர் மீண்டும் பிரதமராக வந்தால், இந்த அரகலய காரர்கள் சும்மா இருப்பார்கள் என்று நினைக்கின்றீர்களா?

**வியுக்தியார்:**

பொதுஜன பெரமுன விரும்பினால் அவர் பிரதமராவதை யாராலும் தடுக்கமுடியாதுதான். அரகலய காரர்கள் மகிந்த ராஜபக்சவை விரும்பாவிட்டாலும், அவர்கள் விரும்புகின்ற ஒருவரை பிரதமராக கொண்டு வருவதற்கு அவர்களால் முடியாதுதானே? முன்னர் அவர்கள் போராட்டம் நடாத்தியபோது எண்ணைக்கும், எரிவாயுவுக்கும் கியூவில் நின்றவர்களும் வந்து கலந்துகொண்டார்கள். இப்போதுதான் அப்படி எதுவும் இல்லையே? நான் இப்படி எழுதுவதற்காக அவர் பிரதமராவது எனக்கும் விருப்பம் என்று எண்ணிவிடாதீர்கள். இன்றைய பாராளுமன்றம் நினைத்தால் அவரை பிரதமராக்கலாம் என்பதால் அப்படி சொன்னேன்.

**கேதீஸ்வரன் தர்சன், அராலி வடக்கு, அராலி.**

**கேள்வி:**

உணவும், வீடும், அமைதியும் இருந்து விட்டால் இலங்கை தமிழ் மக்களின் அரசியல் பிரச்னை தீர்ந்து விடும் என்றும் இலங்கை விவகாரத்தில் இந்தியாவிலுள்ள அரசியல்வாதிகள் தலையிடக்கூடாது என்றும் அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்த நடிகர் கமல் ஹாசனின் மக்கள் நீதி மய்யம் கட்சியின் மாநில செயலாளர் சட்டத்தரணி சிறிதரன் தெரிவித்திருக்கிறாரே?

**வியுக்தியார்:**

நடிகர் கமல்ஹாசன் மீது இந்த வியுக்தியாருக்கு நல்ல மரியாதை உண்டு. அவரது கலை உலக வாழ்கை மாத்திரமல்ல, அவரது அரசியல் கருத்துக்கள் மீதும் மரியாதை உண்டு. அவர் அரசியலில் பிரவேசித்த போது நடிகர் சிவாஜி கணேசனின் அரசியல் பயணம் போல இவரது பயணமும் முடிந்துவிடக்கூடாது என்று நினைத்தவர்களில் நானும் ஒருவன். ஆனால் அவர் ஏன் தேர்தலில் இப்படி படுதோல்வி அடைந்தார் என்பதை இப்போதுதான் புரிந்துகொள்ள முடிந்தது. இவரைப் போன்றவர்களை கட்சியில் முக்கிய பதவிகளில் கமல்ஹாசன் வைத்திருந்தால் எப்படி அரசியலில் வெற்றிபெறப்போகின்றார்?

**எம். அசோக்குமார், வைமன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.**

**கேள்வி:**

விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் இலங்கை அரசுக்குமிடையே சமாதானப் பேச்சுக்கள் நடைபெற்ற காலத்தில், சமாதானத் தூதுவராக இருந்த நோர்வேயின் எரிக் சொல்ஹெய்ம் இலங்கை வந்திருந்தாரே. மீண்டும் சமாதானப் பேச்சுக்கள் ஏதாவது நடப்பதற்கு சாத்தியக்கூறுகள் உண்டா?. அவர் ஜனாதிபதியின் காலநிலை ஆலோசகராக நியமிக்கப்பட்டாலும் சமாதான பேச்சுக்களில் அவர் பெற்ற அனுபவம் நாட்டில் இனப்பிரச்சினைக்கு தீர்வைக்காண உதவலாம் அல்லவா?

**வியுக்தியார்:**

அவர் அண்மைக்காலத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத்தைப் பற்றியும் அவர்களின் நடவடிக்கைகளாலேயே சமாதானத்தை காணமுடியவில்லை என்றும் தொடர்ச்சியாக கூறிவருகிறார். இதனாலேயே அவர் புலி ஆதரவாளர்களால் கடுமையாக விமர்சிக்கப்படுபவர். அவரை தனது காலநிலை ஆலோசகராக ஜனாதிபதி நியமித்திருந்தாலும், அதன் பின்னணியில் வேறு நோக்கம் ஏதாவது இருக்கும் என்பதையும் நாம் நிராகரிக்க முடியாதுதான். புலிகள் மீது அதிருப்தியில் இருக்கின்ற ஒருவரை அதே கருத்தோடு இருப்பவர்கள் நட்பு வைக்க முயல்வதும் எதிர்பார்க்கக்கூடியது தானே?

குரு அரவிந்தன்

# வெற்றிலைத்தட்டில் ஒரு பாக்குவெட்டி

கனடாவில் இருந்து சோமாலியா சென்ற சமாதானப்படையில் நிர்வாக அதிகாரிகளில் ஒருவனாக மூன்று மாதங்களுக்கு அவர்களுடன் இணைந்து செயற்பட எனக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. கடந்தகால வாழக்கையில் எத்தனையோ பாத்திரங்கள் ஏற்றிருக்கிறோம், ‘ஆப்ரேஷன் டெலிவரன்ஸ்’ என்ற இதையும் போய்த்தான் பார்ப்போமே என்று அவர்களுடன் கிளம்பினேன்.

இலங்கையில் நடந்தது மாதிரித்தான் அங்கேயும் மதம் சார்ந்த பல இயக்கத்தினர் மதக்கொள்கைகளைக் காப்பதாகச் சொல்லி இலகுவாக மக்களிடம் நல்ல பெயர் எடுத்துக் கொண்டிருந்தார்கள். பிலட்கென் என்ற இடத்தில் அமைந்த எங்கள் முகாமைச் சுற்றிவர உள்ள குறிப்பிட்ட சில கிராமங்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டிய பொறுப்பு எங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

போராளிகள் தங்களுக்குள் முரண்பட்டுக் கொண்டு, தங்கள் கொள்கைகளை மறந்து கிராமங்களில் உள்ள இளம் பெண்களையும், சிறுவர்களையும் கடத்தத் தொடங்கியிருந்தார்கள். வடக்கே இன்னும் பெரிய அளவில் கப்பல்களைக் கடத்தி, வேற்று நாடுகளிடம் இருந்து கப்பம் வாங்கத் தொடங்கியிருந்தனர். அதைப்பற்றி எல்லாம் நாங்கள் கவலைப்படாமல் எங்களுக்குக் கொடுத்த வேலையில் மட்டும் கவனம் செலுத்தினோம்.


எங்கள் பாதுகாப்புப் படையணிக்குத் தேவை கருதிச் அங்குள்ள சில உள்ளூர் மக்களையும் எங்கள் கட்டுப்பாட்டில் இணைத்துக் கொண்டோம். எங்களுடன் உதவிக்கு இணைந்தவர்களில் அருகே உள்ள கிராமங்களில் உள்ளவர்கள் இரவு சென்று காலையில் திரும்பி வருவார்கள். அங்கே உணவு தட்டுப்பாடு, பசிபட்டினி இருந்ததால், ஏனையோர் எங்களுடனேயே முகாமில் தங்கினார்கள்.

இவர்கள் எங்களோடு எப்பொழுதுமே முகாமில் இருப்பதால், உள்ளூர் மக்கள் எங்களைத் தாக்க மாட்டார்கள் என்ற நம்பிக்கையும் ஒரு காரணமாக இருந்தது. அப்புறம் போராளிகளின் கிராமப் பக்கமான நடமாட்டம் பற்றிய உள்ளூர் தகவல் அறிவதற்கும் அவர்கள் உதவியாக இருந்தார்கள்.

அங்கேதான் ‘அப்டி’ என்ற உள்ளூர் வாசியைச் சந்தித்தேன். அவனது கிராமம் அருகே இருந்ததால், இரவு வீட்டிற்குச் சென்று வருவான். தங்கள் கிராமத்து இளம் பெண்கள் சிலரை இயக்கத்தினர் கடத்திச் சென்றுவிட்டாதாக அடிக்கடி புலம்பிக் கொண்டே இருப்பான். அந்தச் சந்தர்ப்பத்தில் ஆயுதக் குழுவோடு தங்களால் போராட முடியாமல் போய்விட்டதாகவும் வருத்தப்பட்டான். கடத்தப்பட்ட பெண்களில் அவனது காதலியும் ஒருத்தி என்பது பின்புதான் எனக்குத் தெரியவந்தது.

கனடியரென்றால் குளிர்பிரதேசத்தில் வெள்ளை நிறமாக இருப்பார்கள் என்று அவன் எதிர்பார்த்திருக்கலாம். ‘நீங்க கனடியரா சார்?’ என்று என்னைப் பார்த்து ஒருநாள் கேட்டான்.

அவன் சோமாலிய மொழியை மட்டுமல்ல, ஆங்கிலமும் சரளமாகக் கதைத்ததால் மொழி பெயர்ப்பதற்கு உதவியாக இருந்தான். அவனுக்கு எனது பிறவுண் நிறத்தைப் பார்த்ததும் சந்தேகம் வலுத்திருக்க வேண்டும். அதனால் ‘உங்க பிறந்த நாடு எது?’ என்று





அவன் கேட்டான்.

‘இலங்கையிலே அதாவது சிறிலங்காவின் வட பகுதியில் உள்ள யாழ்ப்பாணம்’ என்று சொன்னேன். அவனுக்கு விளங்க வேண்டும் என்பதால் ‘யப்னா’ என்ற ஆங்கிலச் சொல்லைப் பாவித்தேன்.

‘அதைத்தான் ‘யப்னா’ என்று சொல்லுவாங்களா?’ என்றான்.

‘ஆமாம், ஆங்கிலத்தில் ‘யப்னா’ என்று சொல்லுவாங்க, யப்பான் அல்ல’ என்று விளக்கமாகச் சொன்னேன்.

‘அப்போ முன்பு பிரபலமாக இருந்த ‘யப்னா கிங்டம்’ தான் உங்க பிறந்த ஊரா?’

‘ஆமா, எப்படி ‘யப்னாகிங்டம்’ பற்றித் தெரிந்து வைத்திருக்கிறாய்.’ என்றேன்.

‘அப்படின்னா, என்னுடைய தாத்தாவின் மூதாதையர்கள் முன்பு உங்க ‘யப்னா கிங்டத்திற்கு’ வந்திருக்கிறாங்க’ என்றான். அவன் ஆர்வத்தோடு அதைச்சொல்ல வந்தபோது வேடிக்கையாகச்சொல்வதாக நினைத்து நான் பெரிதுபடுத்தவில்லை.

நேரம் கிடைக்கும் போது தனது வீட்டிற்கு வரும்படி அழைத்திருந்தான். பாதுகாப்பு காரணங்களுக்காக நாங்கள் தனியே செல்லக் கூடாது என்பதால், அந்தக் கிராமத்திற்கு எங்கள் படையினரின் வழமையாகச் செல்லும் “கொன்வே” சென்றபோது, நானும் அவர்களுடன் சென்றிருந்தேன்.

இந்த நாட்டில் ஒட்டகப்பாலும், ஒட்டக இறைச்சியும் பிரபலமானது என்பதால், அவன் எங்களை ஒட்டகப்பால் தந்து வரவேற்றான்.

அவன் தனது வீட்டிலே இருந்த தூசி படிந்த ஒரு பழைய சிறிய பெட்டியை எடுத்து வந்து எனக்குக் காட்டினான். பனையோலையில் பின்னப்பட்ட மூடிபோட்ட பெட்டி போல அது இருந்தது.

ஆவலோடு அதைத் திறந்து பார்த்த போது உள்ளே இருந்த பொருள் என்னை ஆச்சரியத்தில் மூழ்கடித்தது. அதற்குள் ஒரு வெற்றிலைத் தட்டமும், பாக்கு வெட்டியும் இருந்தது. அரும்பொருள் காட்சிச்சாலைகளில் வைத்திருப்பது போன்ற செம்பினால் செய்யப்பட்ட வேலைப்பாடுகள் கொண்ட மிகப்பழைய வெற்றிலைத் தட்டு, கறுப்பு நிறத்தில் பழைய பாக்கு வெட்டி.

‘இது என்னவென்று தெரியாது, ஆனால் இந்தத் தட்டோடு சேர்த்து இதையும் இன்னும் சில பொருட்களையும் கொடுத்தாங்களாம்’ என்று பழைய பாக்குவெட்டியை எடுத்துக் காட்டினான்.

‘இதுதான் பாக்கு வெட்டி’ என்று சொன்னேன்.

‘அப்படின்னா?’ என்று விளங்காதது போலக் கேட்டான்.

“kind of scissors for cutting areca nuts” என்று ஆங்கிலத்தில் விளக்கம் தந்தேன்.

‘அப்படியா? அந்த நாட்களில் யப்னா பட்டினத்திற்கு எங்க மூதாதையர் இந்து சமுத்திரத்தைக் கடந்து படகிலே வர்த்தகம் செய்யச் சென்றபோது, அவங்க இவங்களுக்கு நினைவுப் பரிசாகக் கொடுத்திருந்தாங்களாம். அதனாலே எங்க குடும்பத்திற்குக் கிடைத்த கௌரவ பரிசுப் பொருளாக நாங்க இதைப் பரம்பரையாகக் காப்பாற்றி வருகின்றோம். மூத்த மகனான வாரிசுக்கே இவை போய்ச் சேரும் என்பதால் என்னிடம் வந்து சேர்ந்தது.’ என்றான்.

இது எப்படி சாத்தியமாயிற்று என்று இணையத்தில் தேடிப்பார்த்தேன். அந்த நாட்களில் ஆபிரிக்காவில் இருந்த அயூரான் இராச்சியத்திற்கும் (Ajuuraan) யாழ்ப்பாண இராச்சியத்திற்கும் இடையே வர்த்தகத் தொடர்பு இருந்ததாக அறிந்தபோது, எனக்கு வியப்பாக இருந்தது. எங்கே இந்த அயூரான் இராச்சியம் இருந்தது என்பதை அறிந்து கொள்ளும் ஆவலுடன் அக்கால வரலாற்றை, இணையத் தளத்திலும், மூன்று மாதம் சேவைக்காலம் முடிந்ததும் கனடா வந்து பழைய நூல்களைப் பிரட்டிப் படித்தும் அறிந்து கொண்டேன்.

அப்போதுதான், யாழ்ப்பாணத்தில் இருந்து ஆபிரிக்க நாடான அயூரான் இராச் சியத்திற்குக் கறுவா ஏற்றுமதி நடந்ததாகத் தெரிய வந்தது. இந்து சமுத்திரத்தின் கரை யோரத்தில், ஆபிரிக்காவின் கிழக்குக் கரையோரமாக இந்த இராச்சியம் இருந்தது. கொம்பு போன்ற குடாநாட்டு நில அமைப் பைக் கொண்டிருந்ததால், அக்காலத்தில் ‘ஆபிரிக்காவின் கொம்பு’ (Horn of Africa) என்றும் இதை அழைத்தார்கள்.

இந்த அயூரான் இராச்சியம்தான் இப்போது பிரிக்கப்பட்டு நவீன உலகில் சோமாலியா, எதியோப்பியா, கெனியா போன்ற நாடுகளின் பெயரைப் பெற்றிருக்கின்றது. கறுவாவுக்குப் பதிலாக ஆடை அணிகளைப் பண்டமாற்றாக அங்கிருந்து யாழ்ப்பாண இராச்சியம் பெற்றுக் கொண்டதாகவும் வரலாறு குறிப்பிடுகின்றது.

யாழ்ப்பாண அரசை ஆரியசக்கரவர்த்தியின் அரசு என்றும் அழைத்தனர். **1215** ஆம் ஆண்டு ‘யப்னாகிங்டம்’ என்று வெளிநாட்டவர்களால் அழைக்கப்பட்ட இந்த இராச்சியம் உதயமானது. பாண்டிய அரசுக்கு மாணியம் செலுத்திய யாழ்ப்பாண அரசு **1323** ஆம் ஆண்டு பாண்டிய மன்னனை மாலிக்கபூர் தேற்கடித்தபோது, முழு சுதந்திர இராச்சியமாக மாறியது. இப்போது உள்ள திருகோணமலை, வன்னி உள்ளிட்ட இந்த இராச்சியத்தை ‘தெமிலுபட்டின’ என்றும் அந்த நாட்களில் அழைத்தார்கள். தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும், இந்துமத வளர்ச்சிக்கும் உறுதுணையாக நின்ற, உலகறிந்த பிரபலமான இந்த யாழ்ப்பாண இராச்சியம் **1624** ஆம் ஆண்டு வரை நிலைத்து நின்றது.

‘சரசுவதி பண்டாரம்’ என்ற படிப்பகம் ஒன்று இவர்கள் காலத்தில் யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்ததாகவும், ஆனால் மதவெறி பிடித்த போத்துக்கேயர் காலத்தில் இந்துக் கோயில்கள் அழிக்கப்பட்ட போது, இந்த நூல்நிலையமும் எரிக்கப்பட்டதாம். அதே வழியைப் பின்பற்றித்தான் **1981** ஆம் ஆண்டு பல்லாயிரக் கணக்கான மக்களுக்குக் கல்வியறிவூட்டிய யாழ்ப்பாண நூல்நிலையமும் இராணுவத்தால் எரிக்கப்பட்டது. ஆனாலும் ‘விழுந்தாலும் எழுவோம்’ என்று தமிழ் மக்கள் காலாகாலமாய் நிரூபித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

யாழ்ப்பாணத்தில் பிறந்து, கனடாவுக்குப் புலம் பெயர்ந்து, பணி நிமிர்த்தம் சோமாலியா சென்று அங்கே எங்கள் யாழ்ப்பாண அரசின் பெருமை பற்றி அறிந்து கொண்டதை நினைத்த போது எனக்குப் பெருமையாக இருந்தாலும், இதுவரை காலமும் இதைப்பற்றி அறியாமல் இருந்ததை நினைக்க ஒருதமிழனாய் எனக்கு வெட்கமாகவும் இருந்தது.

# குமுறும் எரிமலையாக குர்திஸ்தான்:

## ஐந்து நாடுகளின் ஆதிக்க முற்றுகைக்குள் நெடுங்கால உரிமைப் போராட்டத்தில் குர்திய மக்கள்!

- ஐங்கரன் விக்கினேஸ்வரா

நாகரீகத்தின் தொட்டில் என்று அழைக்கப்படும் பண்டைய மெசப்பத்தேமியா என்ற நிலப்பரப்பில் தோன்றிய இனங்களில் ஒன்று தான் குர்திஸ் இனம்.

குர்திஸ் மக்கள் இன்று உலகில் வாழும் மிகப்பெரிய சிறுபான்மை இனமாக இருந்தாலும் நாடற்றவர்களாகவும் சுயநிர்ணய உரிமை அற்றவர்களாகவும் இருக்கிறார்கள்.

எல்லா இனவொடுக்கு முறைப் போராட்டங்களைப் போலவே இவர்களும் தனி நாடு மற்றும் சுய நிர்ணய உரிமை என்ற ரீதியில் தங்கள் போராட்டத்தை காலங் காலமாக முன்னெடுத்தனர்.




அரபு மற்றும் துருக்கியர்களை அடுத்து மத்திய கிழக்கில் குர்திஸ் மக்கள் மூன்றாவது பெரிய இனமாக இருக்கின்றனர். குர்திஸ் மக்களுக்கு என்று ஒரு பொதுவான பேச்சு மொழி கிடையாது.

குர்திஸ் மொழியில் ஐந்து பிரதேச வட்டார மொழி வழக்கங்கள் உள்ளன. இந்த வட்டார மொழிகளை வெவ்வேறு பிரதேசங்களில் வாழும் குர்திஸ்காரர்கள் ஒருவருக்கொருவர் புரிந்து கொள்ள முடியாத அளவிற்கு அவை வித்தியாசமாகவுள்ளன.

மலைகளைத்தவிர எங்களுக்கு வேறு நண்பர்கள் இல்லை, என்று குர்திஸ் மக்கள் கூறுவதற்கு காரணம் மலைப்பிரதேசம் இவர்களின் ஆயுதம் ஏந்திய போராட்டத் தந்திரோபாயங்களில் வெற்றி பெற மிகவும் அனுகூலமாக இன்றளவிலும் இருந்து வருகின்றமையே.

இன்றைய துருக்கி , ஈரான் , ஈராக் மற்றும் சிரியா ஆகிய நாடுகளின் எல்லைக்குள் அடைபட்டு இருக்கும் பிரதேசத்தை குர்திஸ் மக்கள் குர்திஸ்தான் என்று அழைக்கின்றனர்.

**மிகப்பெரிய சிறுபான்மை இனம்:**

40 மில்லியன் மக்கள் தொகையைக்கொண்ட இனத்துக்கு உலகில் மிகப்பெரிய நாடுகளும் பல அரபு குழுக்களுக்கும் முதலாம் உலகப்போரில் பல வாக்குறுதிகளை வழங்கின. போர் முடிவுற்றதும் அவர்களுக்கான வாக்குறுதி அளித்த பிரதேசங்களை வழங்காமல் போனார்கள், வாக்குறுதிகள் காற்றில் பறந்தது.

1925 ஆம் ஆண்டின் பின் இவர்களின் குர்திஸ்தான் நிலம் இவர்கள் வசம் அற்று துருக்கிய நாட்டின் ஓர் அலகாக மாற்றம் பெற்றது. ஐரோப்பிய காலனிய ஆட்சிக்கு பின்னர் குர்திஸ் இன மக்கள் தனித்தன்மை அழிக்கப்பட்டு அவர்கள் இரண்டாம்தரப் பிரஜைகளாக தரம் தாழ்த்தப்பட்டதோடு அவர்கள் அடையாளங்களை வெளிக்காட்டாமல் தேசிய அரசுகளின் சர்வாதிகார ஆட்சிக்கு கீழ் வாழ நிர்ப்பந்திக்கப்படனர்.

குர்திஸ் மக்கள் தங்கள் சுய உரிமை, சுய ஆட்சி மற்றும் அவர்களுக்கான மொழி கலாச்சாரம் என்ற பேச்சை எடுப்பது துருக்கிய அரசைப்பொறுத்தவரையில் சிறைத்தண்டனைக்குரிய குற்றமாக கருதப்படுகிறது.

குர்திஸ் இன விடுதலைப்போராட்ட இயக்கமான பி.கே.கே. இன் தலைவர் அப்துல்லா ஓச்சலன் துருக்கியை சேர்ந்த குர்திஸ்யர். இவர் மார்க்சிய- லெனினிச கொள்கை சிந்தனைப்பள்ளியில் இருந்து வந்தவர்.

இவர் 70 களின் பிற்பகுதியில் இருந்து முன்னெடுத்து வந்த விடுதலைப்போராட்டம் பெண் விடுதலை, அரசியல் சமூக தளங்களில் பெண்களுக்கு சம பங்களித்தல் மற்றும் சூழலியலும் சமூகமும் என்ற விடயங்களுக்கு மிக முக்கியத்துவம் வழங்கியது.

இன்றுவரை துருக்கி அரசால் கொலை செய்யப்பட்ட குர்திஸ் மக்களின் எண்ணிக்கை ஐம்பதினாயிரத்திற்கும் மேல் என்று லண்டனில் இருந்து வெளியாகும் கார்டியன் பத்திரிகை தெரிவித்துள்ளது.

அப்துல்லா ஓச்சலனிலால் 70 களின் பின் தொடங்கப்பட்ட குர்திஸ்தான் விடுதலை இயக்கம் துருக்கிய ராணுவத்துடன் உக்கிரமான சமரில் 1984 ல் ஈடுபட்டது.

இதன் பின் அப்துல்லா ஓச்சலன் மாசி மாதம் 15 ம் திகதி 1999 ஆம் ஆண்டு மொசாட்டினாலும் மற்றும் பல நாடுகளின் ஒத்துழைப்போடு கைது செய்யப்பட்டு துருக்கிய சிறையில் அடைக்கப்பட்டார்.

பெரும்பான்மை தேசிய அரசுகளின் ஒடுக்குமுறைகளை முறியடித்து இன்னோர் தேசிய அரசை ஒடுக்கப்பட்ட சிறுபான்மை இனம் ஸ்தாபிப்பது மட்டுமே பெரும்பான்மை அரசுகளின் ஒடுக்கும் தேசிய போக்கில் இருந்து விடுபடுவதற்கான வழியாக கொள்ள முடியாது என்பதை அப்துல்லா ஓச்சலன் காலப்போக்கில் தான் உணர்ந்ததாக கூறுகிறார்.

ஏனெனில் தேசிய அரசுகளின் அஸ்திவாரம் இன்னுமோர் ஒடுக்கு முறைக்கு வழி வகுக்கும் கருவியாகவே இருக்கும் என்பது அவர் கருத்து.

**சிரியாவில் குர்திஸ் மக்கள் நிலை:**

சிரியாவில் இஸ்லாம் மதம் நடைமுறைக்கு வந்த காலத்திற்கு முன்னரே காலநிலை மற்றும் பல்வேறு காரணங்களால் நாடோடிகளாக வாழ்ந்த அசிறெட் குர்திஸ் மக்கள் இன்றுள்ள “Cizire” சீஸ்யறே என்ற




பிரதேசத்தில் குடியேறிவிட்டனர். இந்த காலகட்டத்தில் டாய் என்றழைக்கப்படும் அரபுக்கார்ர்கள் நாடோடிகளாகவே வாழ்வை தொடர்ந்தனர். பெரும்பாலான சிரிய குர்திஸ் மக்கள். தங்கள் மொழி கலாச்சாரம் மறந்து சிரியர்களாக மாறி வாழத்தொடங்கினர்.

பின்னர் முதலாம் உலகப்போரின் போது துருக்கிய ராணுவத்தால் அங்கிருந்து விரட்டப்பட்ட குர்திஸ் மக்கள் பலர் மேற்கு சிரியாவில் வேளாண்மை செய்து வாழத்தொடங்கினர்.

2012இல் சிரிய போர் தொடங்கிய போது அறு நூறாயிரம் குர்திஸ்யர்கள் டமாஸ்கஸிலும் வாழ்ந்தனர். அலப்பேவில் அரை மில்லியன் குர்திஸ் மக்கள் வாழ்ந்தனர். இன்று இது அறுபது ஆயிரமாக குறைந்து இருக்கிறது. எல்லாமாக சேர்த்து மூன்று மில்லியன் குர்திஸ் மக்கள் ரஜோவில் வாழ்கின்றனர்.



**குர்திய மக்களும் ஈராக்கில் சதாம் ஹூசைனின் ஆட்சியும்:**

ஈராக்கில் சதாம் ஹூசைனின் ஆட்சியில் நூறாயிரத்திற்கு மேற்பட்ட குர்திஸ் மக்கள் இனவழிப்பு செய்யப்பட்டு அவர்கள் வாழ்ந்த பிரதேசங்கள் தேச வரைபடத்தில் இருந்து அழிக்கப்பட்டது. இதானால் ஈராக் போரில் மேற்கு நாடுகளுக்கு ஈராக்கிய குர்திஸ் மக்கள் உதவிகள் செய்தனர். ஈராக் யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் டிவக்டோ என்று கூறப்படும் குர்திஸ் நிழல் அரசு ஒன்று உருவானது.

2017 ல் நடைபெற்ற முற்றுமுழுதான தனிநாட்டுக்கான சர்வசன வாக்கெடுப்பின் பின்னர் தனிநாடு கிடைக்கவில்லை என்பதோடு அவர்கள் வசம் இருந்த கிர்குக் என்ற எண்ணெய் வளம் நிரம்பிய நகரம் ஈராக்கிய ஆட்சியா ளர்களிடம் பறிபோனது.

1970 களின் பிற்பகுதியில் இருந்து முன்னெடுத்து வந்த குர்திய விடுதலைப்போராட்டம் பெண் விடுதலை, அரசியல் சமூக தளங்களில் பெண்களுக்கு சம பங்களித்தல் மற்றும் சூழலியலும் சமூகமும் என்ற விடயங்களுக்கு மிக முக்கியத்துவம் வழங்கியது.

இதனாலேயே குர்திஸ்மக்களின் “ மலைகளைத் தவிர நமக்கு வேறு நண்பர்கள் இல்லை” என்று உலகத்திற்கு சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பிரக்ஞையில் அவர்கள் விடுதலையை வெற்றி அடைய செய்து கொண்டுருக்கும் நிலவியல் சூழலான மலை களை மட்டுமே நம்பி இருக்கின்றனர். ஏனெனில் அரசியலில் நிரந்தர எதிரிகளோ நண்பர்களோ கிடையாது.

**ஓச்சலனுக்கு மரண தண்டனை:**

ஓச்சலனுக்கு துருக்கி மரண தண்டனை விதித்தது, கடந்த பதினெட்டு வருட காலமாக அப்துல்லா ஓச்சலன் தனிமைப்படுத்தப்பட்ட துருக்கிய சிறையில் உள்ளார்.

விடுதலைப் போராட்ட அமைப்புகளையும் பயங்கரவாத அமைப்புகளையும் ஒரே தராசில் வைத்துப் பார்க்கும் உலக மேலாண்மைப் போக்கின் செப் 11 தாக்குதலின் பின்னரான உலக ஒழுங்கின் விளைவாக பிகேகே அமைப்பும் அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றினால் பயங்கரவாத இயக்கங்களின் பட்டியலில் இணைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அவுஸ்ரேலியா, கனடா, ஈரான் மற்றும் ஈராக் ஆகிய நாடுகளும் அதனைப் பயங்கரவாத அமைப்பாக அறிவித் துள்ளது. ஆயினும் 2008ஆம் ஆண்டு ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றம் பிகேகே பயங்கரவாத அமைப்பு களின் பட்டியலில் நீடிக்க வேண்டிய அவசியம் இல்லை என தீர்ப்பளித்திருந்தது.

பி.கே.கே அமைப்பினை முற்றுமுழுதாக அழித்தொழிக்கின்ற துருக்கியின் இலக்கு நிறைவேறாத புறநிலையிலும், கடந்த 30 ஆண்டுகளாக முயற்சிக்கப்பட்ட இராணுவ மூலோபாயத்தினூடாக முரண்பாட்டுக்கான தீர்வு சாத்தியமில்லை என்பதை துருக்கிய அரசாங்கம் உணர்ந்து கொண்டுள்ள புறநிலையில் பேச்சுவார்த்தைகளுக்கு மீண்டும் இணங்கியுள்ளன.

மூன்று தசாப்தங்களுக்கு மேல் நீடித்து வந்துள்ள குர்திஸ் விடுதலைக்கான ஆயுதப் போராட்டத்தில் குர்திய மக்களுக்கு மலைகள் மட்டுமே சொந்தம் ஆகியுள்ளன. குர்து தேசியவாதம், பல பிரதேச வேறுபாடுகளை கொண்ட குர்து மக்களை ஓரணியில் சேர்த்து வாலிபர்கள், இளம் பெண்கள் கூட, தமது சொகுசான வாழ்க்கையை உதறித்தள்ளி விட்டு, விடுதலை வேட்கையுடன் ஆயுதம் தரித்த போராளிகளாக, பனி படர்ந்த மலைகளில் துருக்கி இராணுவத்துடன் சண்டையிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

நெடுங்கால அழிவுகள், துயரங்கள், எல்லாமே இப்போதும் தொடர்கதையாக இருப்பினும் விடுதலைக்கான போராட்டம் ஒரு இனத்தின் இருப்பை நிச்சயப் படுத்தியிருக்கிறது.

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி


மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

1) C  2) E  3) F


24. மூன்று கால் மேசை ஒன்றைச் சுற்றி நாற்காலிகள் மூன்று உள்ளன. அங்கு காணப்படும் கால்களின் எண்ணிக்கை யாது?
1) 16  2) 15  3) 13

25. சத்தி, நிஷான், விஜய், அருண் ஆகிய நால்வரில் விஜயிலும் உயரம் குறைந்தோர் இருவர் மட்டுமே உள்ளனர். நிஷானிலும் உயரம் குறைந்தோர் ஒருவர் மட்டும் உள்ளார். சத்தி மாத்திரம் நிஷானிலும் உயரம் குறைந்தவர் ஆவார். நால்வரில் உயரம் கூடியவர் யார்?
1) விஜய்  2) நிஷான்  3) அருண்


26. ஒரு வரிசையில் கமலா முன்னாலிருந்து 7 ஆவதாகவும் விமலா பின்னாலிருந்து 4 ஆவதாகவும் உள்ளனர். அவர்கள் இருவருக்குமிடையில் இரண்டு பேர் உள்ளனர். அவ்வரிசையில் மொத்தம் எத்தனை பேர் உள்ளனர்?
1) 13  2) 14  3) 15

27. 
உருவில் உள்ள வடிவத்தைப் புள்ளிக்கோட்டின் வழியே வெட்டும்போது கிடைக்கும் முகத்தின் வடிவம்
1) சதுரம்  2) செவ்வகம்  3) அரியம்

28. மகனை விட அப்பா உயரம் கூடியவர் என்பது
1) எப்பொழுதும் உண்மையானது
2) சில சமயம் உண்மையானது
3) எப்பொழுதும் பொய்யானது

29.  இச் சிறிய முக்கோணத்தின் சுற்றளவு 9cm எனின்  இம்முக்கோணியின் சுற்றளவு யாது?
1) 12cm  2) 18cm  3) 36cm

30. படகு ஒன்றில் 30 பேர் பயணிக்கலாம் எனின் 100 பேர் பயணிப்பதற்கு எத்தனை படகுகள் தேவை?
1) 3  2) 2  3) 4


31. 


வெறுமையான கட்டத்துக்குப் பொருத்தமான எண் யாது?
1) 14  2) 10  3) 12

32. அட்டவணையை அடிப்படையாகக் கொண்டு விடையளிக்குக.


| பூக்கள் | பழங்கள் | D |
|---|---|---|
| A | மாம்பழம் | கத்தரி |
| மல்லிகை | அன்னாசி | வெண்டி |
| செவ்வந்தி | C | தக்காளி |

அட்டவணையில் ACD ஆகியவற்றுக்குப் பொருத்தமான விடைகள் முறையே
1) நித்திய கல்யாணி, பலாப்பழம், காய்கறிகள்
2) முருங்கை, காய்கறிகள், வெண்டி
3) கீரை, பருப்பு, சோயா

33. 



நித்திய கல்யாணிப் பூவைக் குறிக்கும் எழுத்து
1) அ  2) ஆ  3) இ

❖ 34, 35 ஆம் வினாக்களுக்கு தரப்பட்டுள்ள உருவைக் கொண்டு விடையளிக்குக.

34. 


பிள்ளை காலையில் தான் நிற்கும் இடத்திலிருந்து பாடசாலை நோக்கிச் செல்லும்போது எத்தனை தடவை தெற்கு பக்கமாகச் செல்ல வேண்டும்?
1) 2 தடவைகள்  2) 3 தடவைகள்  3) 4 தடவைகள்

35. இப் பிள்ளை காலையில் பாடசாலைக்குச் செல்லும்போது இவரது நிழல் எத்தனை தடவை முன்னால் விழுந்தது?
1) [illegible] தடவைகள்  2) 5 தடவைகள்  3) 4 தடவைகள்

36.  இவ்வுருவில் $\frac{3}{8}$ நிறம் தீட்ட வேண்டும் எனின் மேலும் எத்தனை துண்டங்களுக்கு நிறம் தீட்ட வேண்டும்?
1) 2  2) 3  3) 4

## விடைகள்

| | | |
|---|---|---|
| 24. 2 | 28. 2 | 32. 1 |
| 25. 3 | 29. 2 | 33. 1 |
| 26. 1 | 30. 3 | 34. 2 |
| 27. 2 | 31. 1 | 35. 1 |

### கல்வி tv CHANNEL-1

**17.10.2022**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English வினாத்தாள் |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் வினாத்தாள் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு வணிகப்பிரிவு |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் வினாத்தாள் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 04.30 | தரம்-10 | English |

### கல்வி tv CHANNEL - 2

**17.10.2022**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | English |
| 09.00 | தரம்-02 | அழகியல் |
| 09.45 | தரம்-03 | English |
| 10.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 01.15 | தரம்-05 | English |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | அழகியல் |
| 06.00 | தரம்-03 | English |
| 06.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-05 | English |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | English |
| 12.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | தரம்-05 | English |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# எம் இறையாண்மையை மீட்டெடுக்க அமெரிக்காவை அழைக்க வேண்டும்!

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சங்கம் கோரிக்கை

வவுனியா, ஒக். 16

ஐரோப்பிய ஆக்கிரமிப்பினால் இழந்த எமது இறையாண்மையை மீட்டெடுப்பதற்கும், இலங்கை இராணுவத்தினால் பலவந்தமாக காணாமல் போனவர்களைக் கண்டறிய உதவுவதற்கும் அமெரிக்காவை இலங்கைக்கு வருமாறு அழைக்கவேண்டும் என தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சங்கத்தின் செயலாளர் கோ. ராஜ்குமார் தெரிவித்தார்.

வவுனியாவில் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தில், தமிழர்களுக்கு நன்மை பயக்கும் இரண்டு முக்கியமான பரிந்துரைகள் உள்ளன.

காணாமல் ஆக்கப்பட்ட எமது தமிழ் பிள்ளைகளை கண்டறியவும், எதிர்கால இனப்படுகொலையில் இருந்து தமிழர்களை காப்பாற்றும் தமிழ் இறையாண்மைக்காகவும் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் உதவிகளை பெறுவதற்கான எமது தொடர்ச்சியான போராட்டத்தின் 2064ஆவது நாள் இன்று (நேற்று).

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தின் இறுதிப் பதிப்பை இணையத்தில் கண்டோம். அதைப் பற்றிய எங்கள் கருத்தைப் பகிர்ந்து கொள்ள விரும்புகிறோம்.

முதலாவது தற்போதைய ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தில் நாம் இரண்டு விடயங்களை முன்னிலைப்படுத்தலாம்:

தீர்மானம் "வாக்கெடுப்பு" பற்றி பேசுகிறது. "ஜனநாயக அமைப்புகளின் வலிமை மற்றும் செயல்திறன் மற்றும் தேர்தல்கள் மற்றும் வாக்கெடுப்புகள் உட்பட ஜனநாயக செயல்முறைகளுக்கு " என்று தீர்மானம் கூறுகிறது.

இது இறுதியில் தமிழர்களின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் வாக்கெடுப்பாக மாறும். எனவே அனைவரும் வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று கேட்க வேண்டும்.

13ஆவது திருத்தம், ஒரு நாடு இரு தேசம், ஏக்கிய ராச்சியம், சமஷ்டி, தமிழர் இறையாண்மை என அனைத்தையும் பொது வாக்கெடுப்பின் வாக்குச்சீட்டில் சேர்க்கலாம் .

"எனவே தமிழர்கள் அனைவரும் பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும், மக்கள் தீர்ப்பை ஏற்போம், மேலே குறிப்பிட்டுள்ள அரசியல் தீர்வுகளில் யாவும் வாக்குச்சீட்டில் இருக்கலாம்," என்பதை உரத்து கூறவேண்டும். என்றார். (அ)

# வார இறுதியில் மின்வெட்டு நேரத்தை குறைக்க திட்டம்

கொழும்பு, ஒக். 16

வார இறுதியில் மின்வெட்டு நேரத்தை குறைப்பதாக எரிசக்தி மற்றும் மின்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

மழையுடனான வானிலையால் நீர் மின் உற்பத்தி அதிகரித்துள்ளதாக அமைச்சர் தனது டுவிட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

மின் உற்பத்தி நிலையங்களை அண்மித்த பகுதிகளில் தற்போது பலத்த மழை பெய்து வருவதாகவும் அவர் கூறினார்.

இதனால் எதிர்வரும் நாட்களில் குறைந்த நேரத்துக்கு மின்வெட்டை அமுல்படுத்துவதற்கான இயலுமை ஏற்பட்டுள்ளதாகவும் எரிசக்தி மற்றும் மின்சக்தி அமைச்சர் கூறினார். (அ)

# மேல் மாகாணத்தின் வெள்ள எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 16

அத்தனகலு ஓயாவின் நீர்மட்டம் அதிகரித்து வருவதால் மீரிகம, திவுலப்பிட்டிய, அத்தனகல்ல, மஹர, கம்பஹா, மினுவாங்கொட, ஜா-எல, கட்டான மற்றும் வத்தளை ஆகிய பிரதேசங்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

களனி கங்கையின் நீர்மட்டம் அதிகரிப்பால் ஹோமாகம, கடுவெல, பியகம, கொலன்னாவ, வத்தளை, தெஹியோவிட்ட, ருவன்வெல்ல, சீதாவக்க, தொம்பே ஆகிய பிரதேசங்களுக்கும் அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ)

# மலேசியாவில் வேலைவாய்ப்பு எனக்கூறி சிங்கப்பூருக்கு அழைத்துச் சென்று மோசடி!

கொழும்பு, ஒக். 16

மலேசியாவுக்கு அழைத்துச் செல்வதாகக் கூறி இரண்டரை இலட்ச ரூபா வீதம் மோசடி செய்த ஒருவரை கண்டி, பூஜாப்பிட்டிய பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மலேசியாவில் வேலைவாய்ப்பு பெற்று தருவதாகக் கூறி இருவரிடம் பணம் பெற்று சிங்கப்பூர் விசாவை பெற்றுக் கொடுத்ததாக பூஜாப்பிட்டிய பொலிஸ்நிலையத்தில் செய்த முறைப்பாட்டையடுத்து சந்தேக நபர் ஒருவர் அக்குறணை 'கிங்ஸ்கோட்' பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரை கலகெதர நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்தபோது விளக்கமறியலில் வைக்கும்படி நீதவான் உத்தரவிட்டார்.

இவ்வாறு நாட்டின் பல பாகங்களிலுமுள்ளவர்களை மலேசியாவுக்கு அழைத்துச் செல்வதாகக் கூறி சிங்கப்பூருக்கு அழைத்துச் சென்று கைவிட்டுள்ளதால் அவர்கள் நிர்க்கதியாகியுள்ளதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# யாழ்ப்பாண கிராமத்தின் வாழ்வுக் கோலம்...

(14 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அங்கே அசையும் காற்றும், வீசும் நிலாவும், ஊறும் நீரும் என்னை இன்ப லாகிரியிலே ஆழ்த்தி விடுகின்றன. வீடுகளின் முன்னால் இருக்கும் மல்லிகைப் பந்தலும், சாணிபோட்டு மெழுகி மணியாசுபோட்ட திண்ணைகளும், கோலம் போட்ட முற்றங்களும் என்னை என்னவோ செய்கின்றன. அந்த மண்ணிலே வீழ்ந்து புரள வேண்டும்போல் தோன்றுகிறது' என்று தன் கிராமிய வாழ்வின் சோபனத்திலே தோய்ந்து போகிறார் சி. வை.

'சென்ற 25, 30 வருஷங்களாய் நான் பட்டணத்தில் குடியேறியும், அச் சூழ்நிலையில் வாழ்ந்துவந்தும் என் கதைகளில் அந்த வாசனை ஏறவில்லை என்பதைக் காணும்போது வியப்பாக இருக்கிறது. நான் சமீபத் தில் எழுதிய 'உள்ளப்பெருக்கு' என்ற கதையிலும் நாட்டுப்புற மண்ணின் வாசனைதான் வீசுகிறது. அப் படியான கதைகளே எனக்கு இயற்கையாய் அமைந்து, அனாயாசமாய் உருவம் எடுப்பதைப் பார்க்கும்போது, எவ்வளவு தூரம் கிராமப் பண்பாடு என் இரத்தத்தில் ஊறி எனக்கு ஆதர்சமளிக்கிறதென்பது தெரியவருகிறது' என்கிறார் சி.வை. அவரின் அனைத்துக் கதைகளும், விமர்சனங்கள், பத்தி எழுத்துகள், வானொலிப் பேச்சுகள் யாவும் தொகுக்கப்படவேண்டிய காலம் இன்று கனிந்துள்ளது.

இந் நிலையில் சி. வைத்திலிங்கத்தின் 'கங்கா கீதம்' சிறுகதைத் தொகுப்பினை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து, ஈழத்துச் சிறுகதை முன்னோடியின் படைப் புகளை உலக அரங்கில் எடுத்து வைக்கும் அரிய இலக் கியப் பணியினை ஆற்றலோடு நிறைவு செய்திருக் கிறார் அறிஞர் செ. சிறீக்கந்தராசா. தமிழிலும் ஆங்கிலத்திலும் இயல்பாக எழுதும் ஆற்றல் கைவரப்பெற்றவர் அவர்.

ஆங்கிலத்திலும் தமிழிலுமாக முப்பது ; நூல்கள் வரை, பல்வேறு இலக்கியத்துறை சார்ந்து அவர் ஆக்கியுள்ள நூல்கள் அவரது இலக்கிய ஆற்றலுக்குச் சான்று பகர்வன. தான் எழுதப் புகுந்த எதனையும் நுணுக்கமாக ஆய்ந்து, தெளிந்து, செய்யும் பணியைத் திருந்தச் செய்பவர். சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய இரு பெருங் காவியங்களை ஆங்கிலத்தில் உரைநடையில் `lastair McOlashan என்பவருடன் இணைந்து சிறீக்கந்தராசா ஆக்கிய நூல் அற்புதமான படைப்பாகப் பாராட்டப்பட்டது.

சி. வைத்திலிங்கத்தின் எழுத்து சமஸ்கிருதச் செழுமையிலும் கிராமியச் சூழலிலும் பின்னிப்பிணைந்து உருப்பெற்றவை. அவரது எழுத்து அழகானது. சித்திரத் தூரிகையின் வார்ப்பு. போதை தருவது. சிந்தாமல் சிதறாமல் வார்க்கப்பட்ட சிற்பம் அது. தமிழில் சிறப்பு சேர்க்கும் அவரின் கதைகளை அந்த அழகு சிதையாமல் ஆங்கிலத் தில் கொண்டுசேர்க்கும் பெருங் சவாலை வெற்றியோடு சந்தித்திருக்கிறார் சிறீக்கந்தராசா.

யாழ்ப்பாண கிராமிய வாழ்வினை, மகாவலி கங்கையின், களனி கங்கை நதி தீரத்தின் கரைகளில் மலர்ந்த காதலை, தத்துவ விசாரங்களை, மலரினும் மெல்லிய காமத்தின் மென்மையை ஆங்கிலத்தில் சுவைபட மொழிபெயர்த்திருக்கிறார் அவர். தெளிந்த நீராய் கோலம் காட்டும் சி. வைத்திலிங்கத்தின் கதைகள் மொழிபெயர்ப்பிற்கு அத்துணை இலகுவாய் வசப்படுவதில்லை. சங்க இலக்கியத்தில், புறநானூறு, அகநானூறு, கலித்தொகை என்ற தொகைநூல்களின் மொழி பெயர்ப்பில் தோய்ந்த சிறீக்கந்தராசாவின் செழுங் கரங்களில் சி. வைத்திலிங்கத்தின் சிறுகதைகள் பேரழகு பெற்றிருக்கின்றன.

# மாவோவின் சாதனையை...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

கோட்டாபய மீண்டும் நாடு திரும்பியது, இந்தக் குடும்பத்திடம்தான் கொழும்பின் கட்டுப்பாடு இருக்கும் என்பதைத் தெளிவாக உணர்த்துகிறது.

இரண்டாவது விஷயம்: இலங்கையும் சீனாவும் பரஸ்பரம் அக்கறைகொண் டுள்ள நாடுகள். இந்துமாகடலில் உள்ள இந்தச் சிறிய தீவைக் கபளீகரம்செய்ய சீனா விருப்பம் கொண்டுள்ள சூழலில், சுயநலமும் பேராசையும் கொண்ட செல்வாக்கு மிக்க நமது ஆட்சியாளர்களில் பலர், சிங்களவர்கள், தமிழர்கள் உட்பட, சீனாவுக்கு ஆதரவாகச் செயல்படுவதையும் பார்க்கிறோம்.

ஷீ மூன்றாவது முறை பதவியேற்பது, இலங்கையின் நிர்வாகத்தில் ஆதிக்கம் செலுத்துவது மட்டுமல்லாமல் அதில் தலையிடவும் கூடியது. தவிர, அண்மைக்காலத்தில் இப் பிராந்தியத்தில் சீனா செய் துள்ள ஆக்கிரமிப்பு, கேந்திர முக்கியத்துவம்வாய்ந்த இந்தத் தீவைத் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் சீனாவின் நோக்கத்தை இன்னும் உறுதிப்படுத்தும். இதனால் பாதிக்கப்படுவது இந்தியா மட்டுமல்ல, ஈழத் தமிழர்களும்கூடத்தான். நீங்கள் எந்த அளவுக்குப் புவிசார் அரசியல் குறித்த விழிப்புணர்வு கொண்டுள்ளீர்கள் என்பது குறித்து எனக்குத் தெரியாது. ஆனால், போர் நிழல் உங்களின் தீவில் சூழ்வது எனக்குத் தெரிகிறது.

ஷீயின் வெற்றியைத் தடுக்க முடியாததால், கையறு நிலையில் நாம் இருக்கிறோமா? இல்லை. இப்போதாவது நாம் சரியான திசையில் பயணிக்கத் தொடங்கினால், நமக்கு இழப்பில்லாமல் காத்துக்கொள்ளலாம். அதற்காக இந்தியாவுடன் நட்பு பாராட்டி, உறவு கொண்டாடவேண்டுமென்று நான் சொல்லவில்லை. அப்படிச் சொன்னால் என்னை ஈழத் துரோகி என்று முத்திரை குத்தி விடுவீர்கள். நீண்ட காலமாக நான் வேண்டி விரும்புவதே வேறு. தற்போதைய பொருளாதாரச் சிக்கலிலிருந்தும் அரசியல் ஸ்திரமற்ற தன்மையிலிருந்தும் மீண்டு வர, விரைவில் தற்சார்பை எட்ட வேண்டும்.

அதற்கு, தனிப்பட்ட முறையில் உங்கள் கல்வி, சுயதொழில் முனைவு, வேலைவாய்ப்பு மற்றும் இதர வாழ்வாதார அம்சங்களை முன்னேற்றிக் கொண்டு, சமூக அளவில் பரஸ்பரம் அன்பு, சகிப்புத்தன்மை ஆகியவற்றை வளர்த்து, தேசிய அளவில், அனைத்து இன, சமுதாய, மத, சாதியினரையும் ஒன்றிணைத்து ஒருங்கிணைந்த முயற்சிகள் மேற்கொண்டு உழைக்கவேண்டும் என்று உங்கள் அனைவரையும் நான் நீண்ட காலமாக மன்றாடிக் கேட்டுக்கொண்டிருக்கிறேன். இது நடந்தால், இந்தியா மீதோ, சீனா மீதோ அல்லது வேறு எந்த நாட்டின் மீதோ ஆன உங்கள் சார்பு நிலை படிப்படியாகக் குறையும். அலட்சியமாகவும் அவமதிப்புடனும் உங்களைப் பார்க்கும் உலகம், மரியாதையுடன் பார்க்கும். அதிகரித்துவரும் புவிசார் அரசியல் புயலில் அடித்துச் செல்லப்படாமல், வல்லரசுகளின் மோதல் என்ற இந்தச் சிக்கலில் சிக்காமல் உங்கள் நாட்டின் நலனை முன்னெடுத்துச் செல்லமுடியும். உங்களின் வருங்காலத் தலைமுறைகள் உங்களைப் போற்றும். இது நடக்கும் என்ற நம்பிக்கையுடனும், நடக்க வேண்டும் என்ற பிரார்த்தனையுடனும் விடைபெறுகிறேன். மீண்டும் சந்திப்போம். வணக்கம்.

## கடும் மழையால்...

நொலுவ பகுதியில் 50 பேர்ச்சஸ் காணியில் அமைந்திருந்த 2 மாடி வீட்டில் ஜீ.பிரேமசிறியும் அவரது மனைவியும் மகன்மார் இருவரும் வசித்து வந்துள்ளனர்.

குறித்த பகுதியில் நிலவிய அதிக மழையுடனான வானிலையினால் வீட்டின் மேற்புறத்தில் காணப்பட்ட மண்மேடு எவரும் எதிர்பாராத விதமாக சரிந்து வீழ்ந்துள்ளது.

குறித்த வீட்டை அண்மித்து காணப்படும் பல வீடுகளுக்கும் சேதமேற்பட்டுள்ளதுடன், 15 குடும்பங்களை சேர்ந்த மக்கள் பாதுகாப்பு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இதனிடையே, ஹொரணை - வகவத்த பகுதியில் நீர் நிறைந்த மாணிக்கக்கல் சுரங்கத்தில் தவறி வீழ்ந்து ஒருவர் காணாமல் போயுள்ளார்.

நேற்று முன் தினம் பிற்பகல் பெய்த கனமழையால் சுரங்கத்தில் நீர் நிரம்பியதாகவும், உள்ளே இருந்த நீர் இறைக்கும் இயந்திரங்கள் உள்ளிட்ட உபகரணங்களை வெளியே எடுக்கும் பணியில் 5 பேர் ஈடுபட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது, குறித்த நபர் சுரங்கத்தில் வீழ்ந்து காணாமற்போயுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

இதனிடையே களு கங்கை, களனி கங்கை மற்றும் அத்தனகலு ஓயாவை அண்மித்த பகுதிகளில் சிறு வெள்ளம் ஏற்பட்டுள்ளதாக நீர்ப்பாசன திணைக்களம் குறிப்பிட்டது.

கடும் மழை காரணமா குக்குலே கங்கை நீர்த்தேக்கத்தின் இரண்டு வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. இதனால் சில பகுதிகள் நீரில் மூழ்கின.

கிங் கங்கையை அண்மித்த தாழ் நிலங்களும் வீதிகளும் நீரில் மூழ்கியுள்ளன.

இதேவேளை, ஹாலிஎல - கிஹீகல் கொல்ல பகுதியிலுள்ள வீடொன்றின் மீது மண்மேடு சரிந்து வீழ்ந்துள்ளது. சம்பவத்தில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை.

இதேவேளை, கொழும்பு, காலி, களுத்துறை, கேகாலை, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கு தொடர்ந்தும் மண் சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தின் பல பகுதிகளில் தொடர்ச்சியாக மழை பெய்து வருகின்றது.

மழை காரணமாக கிண்ணியா - பூவரசன்தீவு, கல்லடி வெட்டுவான், மகாமார் ஆயிலியடி ஆகிய பகுதிகளிலுள்ள வயல் நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. அத்துடன், கிண்ணியா குறிஞ்சாக்கேணி ,நடுத்தீவு ஆகிய பகுதிகளும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இதனால் சுமார் 400 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

கடும் மழையுடன் கூடிய வானிலை தொடர்ந்தும் நீடிக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது. (அ)

## 22 நிறைவேற்று...

இரட்டைக் குடியுரிமை கொண்டோர் பாராளுமன்றத்தில் உறுப்புரிமை வகிக்க முடியாது என்ற சரத்தை நீக்காமல் 22 ஆவது திருத்தச் சட்டமூலத்தை நிறைவேற்றுவதற்கு பொதுஜன பெரமுன ஆதரவு வழங்காது என நம்பகரமாக அறியமுடிகின்றது. பஸில் ராஜபக்ஷவை பொதுஜன பெரமுனவின் தலைவராக்கி அரசியலுக்குள் கொண்டு வருவதற்கான காய்நகர்த்தல்கள் மேற்கொள்ளப்பட்டு வரும் பின்னணியிலேயே பெரமுன இதனை எதிர்க்கும் எனத் தெரியவருகின்றது.

அரசியலமைப்புக்கான 22 ஆவது திருத்தச்சட்டமூலத்துக்கு நிபந்தனைகளுடன் ஆதரவு வழங்க பிரதான எதிர்க்கட்சி ஐக்கிய மக்கள் கூட்டணி தீர்மானித்துள்ளது.

ஐக்கிய மக்கள் கூட்டணியின் தலைமைக்குழு நேற்று முன்தினம் கூடியது. இதன்போதே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

மேற்படி கூட்டணியில் பங்காளியாக அங்கம் வகிக்கும் தமிழ் முற்போக்கு கூட்டணி மனோ கணேசன் இந்த தகவலை நேற்று வெளியிட்டார்.

இரட்டைக் குடியுரிமை கொண்டோர் பாராளுமன்றத்தில் உறுப்புரிமை வகிக்க முடியாது. சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரைவில் உள்ளதை மாற்றி, அமெரிக்க பிரஜை பஸில் ராஜபக்ஷவின் எண்ணப்படி செயற்பட ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணிக்கு நாம் ஒருபோதும் இடம் தரமாட்டோம். பஸில் ராஜபக்ஷ அமெரிக்க காங்கிரஸில் இடம் தேடிக் கொள்ளட்டும் என்று மனோ கணேசன் கூறியுள்ளார்.

ஆயினும் பஸில் ராஜபக்ஷவை பொதுஜன பெரமுனவின் தலைவராக்கி அவரை மீண்டும் அரசியலுக்குள் இழுப்பதற்கு பெரமுன தரப்பில் திட்டங்கள் வகுக்கப்படுவதாகக் கூறப்படுகின்றது.

இதனால் இரட்டைக் குடியுரிமை உள்ளவர்கள் பாராளுமன்றத்தில் உறுப்புரிமை வகிக்க முடியாது என்ற சரத்தை நீக்காமல் 22 ஆவது திருத்தச் சட்டமூலத்தை நிறைவேற்றுவதற்கு பொதுஜன பெரமுன ஆதரவு வழங்காது என்று அந்தக் கட்சி வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

இதனால் இரட்ட்டைக் குடியுரிமை உள்ளவர்களும் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கமுடியும் என்ற என்ற விடயம் 22ஆவது திருத்தத்தில் உள்ளடங்கியிருந்தால் மட்டுமே பெரமுன இதனை ஆதரிக்கும் என்று கூறப்படுகின்றது.

## பாண் விலை...

கள் சங்கத்தின் தலைவர்.என்.கே.ஜயவர்தன கூறினார்.

நாட்டிலுள்ள பேக்கரி தொழிலுக்கான கோதுமை மா விநியோகத்தில் 50 வீதம் இரண்டு பிரதான மா நிறுவனங்களால் பெறப்படுவதாக ஜயவர்தன குற்ப்பிட்டார்.

இரண்டு கோதுமை மா உற்பத்தி நிறுவனங்களும் தமது கோதுமை மாவின் விலையை குறைத்துள்ளன. இறக்குமதி செய்யப்படும் வர்த்தகர்கள் கோதுமை மாவின் விலையை 250 ரூபாவாக குறைத்தால் மாத்திரமே பாண் மற்றும் ரொட்டிகளின் விலையை குறைக்க முடியும் எனவும் அவர் மேலும் கூறினார்.

நாட்டிலுள்ள இரண்டு மா நிறுவனங்களும் இன்னமும் கோதுமை மாவை கிலோ ஒன்றுக்கு 280 முதல் 310 ரூபா வரை விற்பனை செய்து வருவதாகவும், இரண்டு நிறுவனங்களும், இறக்குமதி செய்யப்பட்ட கோதுமையின் விலையை குறைத்துள்ளபோதும் சந்தையில் மாவின் விலை இன்னும் கிலோவுக்கு 350 ரூபாவாக உள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)

## விடுதலைப்...

மாகாணங்களுக்கு அதிகாரங்களை பகிர்ந்தளிப்பது குறித்து இலங்கை அரசாங்கம் கவனம் செலுத்தவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

ஆயுதமோதலின் போது உயிரிழப்பு என்பது சாத்தியமே என்றாலும் காணாமல்போனவர்கள் குறித்து மேலதிக தகவல்களை வழங்கவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்த விரும்பிய தாம் அதன் ஒரு பகுதியாக இருப்பது குறித்து மகிழ்ச்சியடைவதாகவும் எரிக் சொல்ஹெய்ம் கூறினார். (அ)

## காணாமல்...

காணாமல்போனோர் பற்றிய அலுவலக அதிகாரிகள், மட்டக்களப்பு காணாமல்போனோரின் உறவினர்களிடம் விசாரணைகள் முன்னெடுத்து அவர்களுக்கான இழப்பீடுகளை வழங்கும் பணியை ஆரம்பித்துள்ளனர்.

இதற்கமைய நேற்று மட்டக்களப்பு, மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் இது தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில் விசாரணையை நிறுத்தும் முகமாகவும், எதிர்ப்பை வெளிப்படுத்தும் வகையிலும் வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின் ஏற்பாட்டில் பெரும் எதிர்ப்புப் பேரணியும் பிரதேச செயலக முற்றுகைப் போராட்டமும் முன்னெடுக்கப்பட்டது.

சங்கத்தின் அம்பாறை மாவட்டத் தலைவியும், கிழக்கு மாகாண இணைப்பாளருமான தம்பிராசா செல்வராணி தலைமையில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு தேர்தல் அலுவலகத்துக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்ட ஆர்ப்பாட்டப் பேரணி மண்முனை வடக்கு பிரதேச செயலக பிரதான வாயில் வரை சென்று அங்கு முற்றுகைப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை மாவாட்ட பிரதிநிதிகள், அரசியல் பிரமுகர்கள், சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் உள்வாயில் மூடப்பட்டிருந்த நிலையில் பிரதான வாயிலை மூடி விசாரணை மேற்கொள்வதைத் தடுக்கும் விதமாக ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டதையடுத்து மட்டக்களப்பு பிரதான பொலிஸ் நிலையப் பொலிஸார் குறிப்பிட்ட இடம் வருகை தந்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களை ஓரப்படுத்த முற்பட்ட வேளை அங்கு வாக்குவாதம் ஏற்பட்டது.

பின்னர் பொலிஸார் விசாரணை நடத்தப்படும் மண்டபத்தினுள் சென்று விசாரணை அதிகாரிகள் சிலரை அழைத்து வந்து போராட்டம் மேற்கொள்வோருடன் கலந்துரையாடிய போது மேற்கூறப்பட்ட விசாரணையில் நம்பிக்கை இல்லை, அப்பாவித் தமிழ் மக்களை ஏமாற்ற வேண்டாம், இந்த விசாரணையை உடன் நிறுத்த வேண்டும் என்ற பலமான கோரிக்கைகளை போராட்டக்காரர்கள் முன்வைத்தனர்.

அதைத் தொடர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் மற்றும் பொலிஸ் உயர் அதிகாரிகள் உள்ளிட்ட குழுவினர் மேற்படி விசாரணைக் குழுவினருடன் கலந்துரையாடியதையடுத்து மேற்கொள்ளப்படும் விசாரணையை உடன் நிறுத்துவதற்குத் தீர்மானித்து காணாமல்போனோர் பற்றிய அலுவலக அதிகாரிகள் அங்கிருந்து சென்றனர்.

## கண்ணிவெடி...

வனத்துக்கு பணியாளர்களை ஏற்றி பயணித்த பஸ் திரும்ப முற்பட்டவேளையே விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரியவருகிறது.

சம்பவத்தில் காயமடைந்தவர்கள் பளை வைத்தியசாலை கொண்டு செல்லப்பட்டு பின் கிளிநொச்சி வைத்தியசாலையில் 15 பேர் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், யாழ்.போதனா வைத்தியசாலையில் 10 பேர் அனுமதிக்கப்பட்டனர். ஏனையோர் பளை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிகவிசாரணைகளை பளை பொலிசார் மேற்கொண்டுள்ளனர். (அ)

## சம்பிரதாய...

கிணைந்த பொறிமுறை தொடர்பில் அம்பாறை மாவட்டத்திற்கான அரச அதிகாரிகளுக்கு விளக்கமளிக்கும் நிகழ்வு நேற்று முற்பகல் அம்பாறை ஹார்டி உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் உரையாற்றும்போதே ஜனாதிபதி இவ்வாறு வலியுறுத்தினார்.

இதுவரை நாம் மிகவும் கடினமான காலகட்டத்தை எதிர்கொண்டிருந்தாலும் எவரும் பட்டினியால் வாட அனுமதிக்கப்பட மாட்டார்களென்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். அத்துடன் இந்த செயற்திட்டத்தை வெற்றிகொள்வதன் மூலம் உலக உணவு நெருக்கடிக்கு முகங்கொடுக்கக்கூடியதாக இருக்கும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

உணவு பாதுகாப்பு வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதே வேளை அடுத்த வருடம் முதல் விவசாயம் நவீனமயப்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

கிராமிய பொருளாதார மறுமலர்ச்சி நிலையங்களை வலுப்படுத்துவதற்கான பலதரப்பு கூட்டுப் பொறிமுறையை அமுல்படுத்துவது, அம்பாறை மாவட்டத்தை அபிவிருத்தியடைந்த சமூகத்துடன் வளமான மாவட்டமாக மாற்றுவது என்பன மூலம் உணவுப் பாதுகாப்பையும் போஷாக்கையும் உறுதிப்படுத்துவது குறித்து இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டது. (அ)

## வல்லரசுப்...

மேலும் அந்த நோக்கத்தை அடைய ஈழத் தமிழர்களை பகடைக்காய்களாக பயன்படுத்த சீனா நினைக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும் இனப்பிரச்னைக்கு தீர்வு ஒன்று பெற்றுத் தரவேண்டும் என்ற எண்ணம் சீனாவுக்கு ஒருபோதும் கிடையாது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஈழத் தமிழர்களுக்கான இனப் பிரச்னைக்கான தீர்வை வழங்குவதாக இருந்தால் அது இந்தியா ஒன்றினாலேயே முடியும் என்றும் சிறீதரன் கூறினார்.

ஆகவே இந்திய பிராந்திய வல்லரசின் அனுசரனையின்றி தமிழர்களுக்கு ஒரு போதும் தீர்வு எட்டப்படாது என்பது நிதர்சனம் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் குறிப்பிட்டார்.

## மோ.சைக்கிள்...

குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை தந்தை குழந்தையை மோட்டார் சைக்கிளின் பெற்றொல் தாங்கியில் இருத்தி பயணித்துள்ளார்.

மோட்டார் சைக்கிளின் பெற்றோல் பாதுகாப்பு மட்டத்தை (ரிசேவ்) இடது கையினால் மாற்ற முற்பட்டபோது தடுமாறி வீதியில் தரித்து நின்ற பட்டா வாகனத்துடன் மோதுண்டு விபத்து ஏற்பட்டுள்ளது.

சம்பவத்தில் குழந்தை மயக்கமடைந்த நிலையில் மன்னார் மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டது.

சிகிச்சை பயனின்றி குழந்தை நேற்று முன் தினம் உயிரிழந்தது.

நேற்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (அ)

ஈழநாடு
Eelanadu



இந்திய தரப்புகளுடன் சந்திப்பை மேற்கொள்வதற்காக புதுடில்லிக்குச் சென்றுள்ள ஜனநாயகப் போராளிகள் கட்சிப் பிரதிநிதிகளின் படம் ஒன்று சமூக வலைத் தளங்களில் பகிரப்பட்டு வருகின்றது.

# இந்திய தனியார் முதலீட்டாளர் பங்களிப்புடன் மன்னாரில் கடலட்டை பண்ணை நிலையங்கள்

மன்னார், ஒக். 16

இந்திய தனியார் முதலீட்டா ளர்களின் பங்களிப்புடன் கடலட் டைப் பண்ணைகளுக்கு தேவையான கடலட்டை குஞ்சு பொரிக் கும் நிலையங்கள் அமைப்பது தொடர்பான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் வெள்ளிக் கிழமை மன்னாரில் இடம்பெற்றது.

அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தா தலைமையில் மன்னார், ஓலைத்தொடுவாய் பகுதியில் அமைந்துள்ள நக்டா நிறுவனத்தி னால் செயற்படுத்தப்படும் கடலட்டை குஞ்சு பொரிக்கும் நிலை யத்தில் இந்த கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில், கடலட்டை குஞ்சு பொரிக்கும் நிலையம் மற்றும் குஞ்சு பராமரிக் கும் நிலையம் போன்றவற்றுக்கான இந்திய தனியார் முதலீட்டாளர்க ளின் அனுபவத்தையும் நவீன தொழில் நுட்பத்தையும் பயன் படுத்துவது தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

அத்துடன் கடற்றொழில் சார் மக்களால் உருவாக்கப்பட்டு வருகின்ற கடலட்டை பண்ணை களுக்கான கடலட்டை குஞ்சு களின் தேவை அதிகரித்துள்ள நிலையில் இக் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சிறையில் இருந்து விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டார் திலினி

கொழும்பு, ஒக். 16

நிதி மோசடிச் சம்பவத்தில் ஈடுபட்டு சிறையில் உள்ள சந்தேக நபரான திலினி பிரியமாலி நேற்று சிறைச்சாலையில் இருந்து விசாரணைகளுக்காக அழைத்துச் செல்லப்பட்டார்.

சிறைச்சாலை அதிகாரிகளின் பாதுகாப்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் நேற்று காலை அழைத்துச் செல்லப்பட்டார் என சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

கோட்டை நீதவான் நீதிமன்றத்தின் அனுமதியின் பிரகாரம் சந்தேகநபர் விசாரணைக்காக குறித்த இடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். (அ)

# “சுபீட்சமான நாட்டிற்கான பாதை நல்லிணக்கமே” யாழ்ப்பாணத்தில் நேற்று முக்கிய கலந்துரையாடல்





யாழ்ப்பாணம், ஒக். 16

சமூக நீதிக்கான தேசிய இயக்கம் மற்றும் இன மத நல்லிணக்கத்திற்கான கூட்டமைப்பின் ஏற்பாட்டில் யாழ்ப்பாண மாவட்டத்திற்கான மக்கள் கலந்துரையாடல் நேற்று இடம்பெற்றது.

“சுபீட்சமான நாட்டிற்கான பாதை நல்லிணக்கமே” எனும் தொனிப்பொருளில் யாழிலுள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நேற்றுக் காலை 10 மணியளவில் இந்த கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது யாழ்ப்பாணத்தில் உள்ள பல்வேறு பிரச்னைகள் மற்றும் சமகால விடயங்கள் தொடர்பாக கருத்து தெரிவிக்கப்பட்டது.

சமூக நீதிக்கான தேசிய இயக்கத் தலைவர் கரு ஜயசூரிய, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பாராளுமன்ற உறுப்பினர்களான த.சித்தார்த்தன், எம்.ஏ.சுமந்திரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, விஜயகலா மகேஸ்வரன் உள்ளிட்ட அரசியல் பிரதிநிதிகள், சமயத்தலைவர்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (அ)



# வவுனியாவில் வாகனம் குடை சாய்ந்து விபத்து

வவுனியா, ஒக். 16

வவுனியா, தவசிக்குளம் பகுதியில் நேற்று கனரக வாகனம் குடை சாய்ந்து விபத்துக்குள்ளானதில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, தவசிக்குளம் பகுதியூடாக பயணித்துக் கொண்டிருந்த குழாய் கிணறு அடிக்கும் கனரக வாகனம் சாரதியின் கட்டுப்பாட்டையிழந்து வீதியை விட்டு கீழ் இறங்கி தடம்புரண்டு விபத்துக்குள்ளானது.

இவ் விபத்தில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# நாட்டை கட்டியெழுப்ப முடியாதவர் தேசிய பேரவையில் இடம்பிடித்தார்

## நாமலைச் சாடுகின்றார் முஜிபுர்

கொழும்பு, ஒக். 16

தகப்பனாருடன் இணைந்து நாட்டைக் கட்டியெழுப்ப முடியாத நாமல் ராஜபக்ஷ தற்போது தேசிய பேரவையின் திட்டங்களை வகுத்து நாட்டையே கேலிக்கூத்தாக்குகிறார் என பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

அரசாங்கம் பொதுவான உடன்படிக்கையை முன்வைத்தால், பதவிகளைப் பெறாமலேயே இவ்வாறான வேலைத்திட்டத்திற்கு ஆதரவளிக்க முடியும் என்றும் அவர் கூறினார்.

தேசிய பேரவையில் நீண்டகால மற்றும் குறுகிய கால தீர்வுகளை முன்வைப்பதற்காக நாமல் ராஜபக்ஷ நியமிக்கப்பட்டுள்ளமை குறித்து ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் கேள்வி எழுப்பினார்.

அரசாங்கம் எதிர்க்கட்சிகளுடன் இணைந்து செயற்படுவதை சர்வதேச சமூகத்திற்கு காட்ட விரும்புவதாகவும், தேசிய பேரவை அத்தகைய குழு எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 16.10.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**

6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : அறிந்தும் அறியாமலும்
11.00 மணி : BEAT BOX
11.30 மணி : தடை அதை உடை-தற்காப்புக்கலை
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)

**பகல்**

1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி



1.30 மணி : வீக் என்ட் மூவி-டுயட்
4.30 மணி : உதவும் கரங்கள்
5.00 மணி : COFFE WITH பிரமுகர்



6.00 மணி : கலக்கல் ஸ்ரார்- திறமையாளர்களுக்கான களம்

**இரவு**

7.00 மணி : SPOTLIGHT- சோ.சுகிர்தன்- தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி :டான் பட்டிமன்றம்



10.00 மணி:-நேர்கொண்ட பார்வை



## DAN COMEDY HD

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டி டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## சிவ ஒளி

**காலை**

05.00 மணி : சிவாய மந்திரம்
06.00 மணி : சுப்ரபாதம்
06.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.20 மணி : திருமுறையும் பொருளும்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
06.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

07.00 மணி : செய்திகள்
07.30 மணி : அருளுரை
08.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : இயேசுவின் போதனைகள் (மறுஒளிபரப்பு)
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: விவிலியம் அறிவோம் (திருகோணமலை)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: மறைக்கல்வி(மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
7.00 மணி : ஞானவழி
7.30 மணி : படம்

## Pirai Television

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு